# ஏன் நாங்கள் நம்புகிறோம்
# எதை நாங்கள் நம்புகிறோம்

## *Why We Believe What We Believe*

### பாகம் 2


*By*

J.C. சோட்

E.Z.S. ராஜநாயகம்



வெளியிடுவோர்

**உலக இலக்கிய பதிப்பகம்**

*86-A,* தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா.

# *Why We Believe What We Believe* *(Tamil)*

*Copyright 2010 - Tamil World Soul Winning Campaign ®*

*First Impression : September, 2010*
*Copies : 3000*

Translated By : **E.Z.S. Rajanayagam**

Assisted By : **B. Benny Martin**

*For Copies :*
***TAMIL WORLD SOUL WINNING CAMPAIGN***
***86-A, Dharapuram Road, Kangayam - 638 701.***
***Tamilnadu, India.***

# ஆசிரியர் உரை

இலங்கை வானொலிச் சேவையின் மூலம் இந்திய மக்களுக்கு ஒலிபரப்பப்பட்ட இந்த இரண்டாவது வானொலிப் பிரசங்கத்தில் " ஏன் நாங்கள் விசுவாசிக்கிறோம்? எதை நாங்கள் விசுவாசிக்கிறோம்? " என்ற பாடத்தை நான் தொடர்ந்திருக்கிறேன். இப்படி வானொலி மூலம் விசுவாசிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும் நான் பிரசங்கிப்பதற்கான நோக்கம், நாங்கள் பக்தி ரீதியாக விசுவாசிக்கின்றவைகளை வெளிப் படுத்தி, அவைகள் வேதாகமத்தில் தெளிவாகப் போதிக்கப்பட்டிருக்கிற படியால் தான் அவைகளை நாங்கள் இப்படியாக விசுவாசிக்கிறோம் என்று காட்டுவது. கிறிஸ்தவ மத உலகமானது எல்லாவகையான உபதேசங்களையும் அப்படியே நம்புகிறது. ஆனால், உண்மை என்ன வென்றால், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களிடமிருந்து அவர்களை வேறுபடுத்தி அவர்களால் பின்பற்றப்படும் பல உபதேசங்கள் வேத வசனங்களில் இல்லை.

இந்த பிரசங்கங்கள், 1987 ஆம் ஆண்டில் புது டெல்லியில் பதிவு செய்யப்பட்டு அச்சிடப்பட்டவை. இந்தியாவிலும், உலகின் வேறு நாடு களிலும் இவை திரும்பத் திரும்ப ஒலிபரப்பு செய்யப்பட்டிருக்கின்றன. அத்தோடு, இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அச்சிடப்படுவதற்கு முன்பாக, இந்தோனேசியாவின் ஜகர்த்தாவில் அச்சிடப்பட்டுள்ளது. உலக வேதாகமப் பள்ளி ஆசிரியர்கள் உலகெங்கும் அநேக நாடுகளி லுள்ள தங்கள் மாணவர்களுக்கு இதன் பிரதிகளை இனி அனுப்புவார்கள்.

இப்பிரசங்கங்களை, உங்களுடைய உள்ளூர் வானொலியில் நீங்கள் பயன்படுத்த விரும்பினாலோ அல்லது உங்களுக்கு மாத இதழ்கள் இருந்து, இதிலிருந்து ஒரு பாடத்தை அல்லது அதிகமான பாடங் களை அச்சிட விரும்பினாலோ, நீங்கள் தாராளமாக அப்படிச் செய்யுங்கள். என்னுடைய ஒரே வாஞ்சை நித்திய ஜீவனை இழந்து போய், ஆத்துமாவில் மரித்துக் கொண்டிருக்கும் உலகத்திற்கு சத்தியம் செல்ல வேண்டுமென்பதுதான்.

இந்தப் பிரசங்கங்களை அச்சிட ஆயத்தம் செய்வதில் எனக்கு உதவி புரிந்து என் மனைவி பெட்டி, சகோதரிகள் யூலன்ராம்சே மற்றும் பார்பரா ஆலிவர் ஆகியோருக்கு நான் மீண்டும் நன்றி கூறுகிறேன்.

*மிசிசிபி*
*ஜுன் 26, 1996*

**J.C. சோட்**

## பதிப்பாசிரியர் உரை

" ஏன் நாங்கள் நம்புகிறோம், எதை நாங்கள் நம்புகிறோம் " என்ற தலைப்பில், ஏற்கனவே " தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டத்தின் " கீழ் வெளிவந்த முதலாம் பாகத்தின் தொடர்ச்சியாகத்தான் இந்த இரண்டாம் பாகம் வெளிவருகிறது. முதலாம் பாகம் அநேகருக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்குமென நம்புகிறேன். கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தை மனதார ஏற்று வாழ விரும்பும் ஒருவன் அறிந்திருக்க வேண்டிய அடிப்படை உபதேசக் காரியங்கள் அதில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

பேதுரு அப்போஸ்தலன், "....உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் " ( I பேதுரு 3:15) என்று பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு சொல்லியுள்ளார். ஆனால், பெரும்பாலான கிறிஸ்தவர்களின் யதார்த்த நிலையோ இந்த உபேதசக் கோட் பாட்டுக்கு எதிரானதாக உள்ளது.

இந்நிலை தொடர்வது ஒரு கிறிஸ்தவனுக்கு அழகல்ல. அதைவிட முக்கியமாக இந்நிலை தேவனுக்குப் பிரியமானதல்ல. இந்த உண்மையை உணர்ந்த, கர்த்தருக்குள் நித்திரையடைந்த சகோ. J.C. சோட் (J.C. Choate) அவர்கள் இந்த இரண்டாம் பாகத்தைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி, அநேகருடைய ஆத்தும நன்மைக்காக எழுதியுள்ளார். பயன்மிக்க இந்நூல் தமிழ்க் கிறிஸ்தவ உலகிற்குப் பயன்பட வேண்டுமென விரும்பி நான் தமிழில் கொண்டுவர முயற்சித்த போது, என் முயற்சிக்கு சகோதரி பெட்டி சோட் (Betty Choate) அவர்கள் பெரும் ஆதரவு தந்தார்கள். மாத்திரமல்ல, என் இலக்கியப் பணியைப் பல வகைகளில் வெகுவாகத் தாங்கும் இவர்களுக்கு நான் மிகவும் நன்றிக் கடன்பட்டுள்ளேன்.

மேலும், இந்நூலை மொழியாக்கம் செய்யும் பணியில் எனக்குத் துணை நின்ற சகோ. பென்னி மார்ட்டின் அவர்களுக்கும், அச்சகப் பணியில் உதவிய சகோ. விக்டர் அவர்களுக்கும், சிறப்பாக அச்சிட்டுக் கொடுத்த “சன் ஆப்செட்” அச்சகத்தாருக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் உங்கள் யாவருக்கும் பயனுள்ளதாக இருக்க நான் ஜெபிக்கிறேன்.


தமிழ் உலக ஆத்தும
ஆதாயப் பணியில்,

*10.09.2010*
*காங்கேயம்*

**E.Z.S. ராஜநாயகம்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஏன் கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை இருக்கிறது? | 1 |
| 2. | ஏன் அஸ்திபாரம் மிக முக்கியமானதாக இருக்கிறது ? | 9 |
| 3. | ஏன் நாங்கள் புதிய பிறப்பு பற்றி பிரசங்கிக்கிறோம்? | 16 |
| 4. | ஏன் இன்று ஒரே ஞானஸ்நானம் இருக்கிறது? | 24 |
| 5. | ஏன் நாங்கள் மனச்சாட்சியை ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக ஏற்றுக்கொள்வதில்லை? | 31 |
| 6. | ஏன் நாங்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறோம்? | 39 |
| 7. | ஏன் நல்லொழுக்க வாழ்க்கை மட்டும் இரட்சிக்கப்பட போதுமானதல்ல? | 47 |
| 8. | ஏன் நாங்கள் ஆராதனைக்காக கூடுகிறோம்? | 54 |
| 9. | ஏன் நாங்கள் வாரத்தின் முதல் நாளில் கூடுகிறோம்? | 61 |
| 10. | ஏன் நாங்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறோம்? | 68 |
| 11. | ஏன் நாங்கள் குரல் இசையை மட்டும் ஆராதனையில் பயன்படுத்துகிறோம்? | 75 |
| 12. | ஏன் நாங்கள் ஜெபத்தில் நம்பிக்கை வைக்கிறோம்? | 83 |
| 13. | ஏன் பரலோகத்திற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது? | 90 |
| 14. | ஏன் நாங்கள் சாத்தான் இருப்பதை விசுவாசிக்கிறோம்? | 97 |
| 15. | ஏன் நாங்கள் பரலோகத்தில் நம்பிக்கை வைக்கிறோம்? | 105 |
| 16. | ஏன் நாங்கள் நரகம் இருக்கிறதாக நம்புகிறோம்? | 113 |
| 17. | ஏன் நாங்கள் நியாயத்தீர்ப்பில் விசுவாசம் வைக்கிறோம்? | 121 |
| 18. | ஏன் கிறிஸ்தவம் மிகவும் வித்தியாசமானது? | 129 |



## பாடம் - 1

# ஏன் கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை இருக்கிறது?

சிலருக்கு இரத்தம் பற்றிப் பேசுவது விரும்பத்தக்க ஒன்றாக இருக்காது. இது ஒரு வெட்டுக் காயத்தையோ, ஒரு புண்ணையோ, ஏன் ஒரு மரணத்தையே கூட அவர்களுக்கு நினைவுப்படுத்துவதாக இருக்கலாம். மத உலகிலுள்ள சிலர் இரத்தம் என்ற வார்த்தையை தங்கள் வழக்கு மொழியிலிருந்து நீக்கிப்போட முயற்சி செய்தார்கள்.

பழைய ஏற்பாட்டுக் காலங்களில் மனிதனுடைய பாவம் நிவிர்த்தியாகும் பொருட்டு மிருக பலிகள் அல்லது இரத்தப் பலிகள் தேவை என தேவன் சொன்னார். இரத்தத்தில் உயிர் இருந்த படியாலும், அது உயிரை அடையாளப்படுத்தினபடியாலும், இரத்தம் முக்கியமானதாக இருந்தது. இந்த காரணத்திற்காகத்தான் இரத்தம் புசிப்பது தடை செய்யப்பட்டிருந்தது. "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவ நிவிர்த்தி செய்கிறது இரத்தமே. அதினிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்க வேண்டாம், உங்கள் நடுவே தங்குகிற அந்நியனும் இரத்தம் புசிக்க வேண்டாம் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன்" என நாம் லேவியராகமம் 17:11,12 வசனங்களில் வாசிக்கிறோம்.

பழைய உடன்படிக்கை கூட இரத்தத்தினால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. எபிரெய எழுத்தாளர் இப்படிச் சொல்கிறார், "எப்படியெனில், மோசே நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்னபின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டு மயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து, புஸ்தகத்தின் மேலும் ஜனங்களெல்லார் மேலும் தெளித்து

தேவன் உங்களுக்குக் கட்டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்று சொன்னான். இவ்விதமாக, கூடாரத்தின் மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின் மேலும் இரத்தத்தைத் தெளித்தான். நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபிரெயர் 9:19-22). எபிரெய எழுத்தாளர் மேலும் சொல்லும் போது, " இரண்டாங் கூடாரத்திலே பிரதான ஆசாரியன் மாத்திரம் வருஷத்திற்கு ஒரு தரம் இரத்தத்தோடே பிரவேசித்து, அந்த இரத்தத்தை தனக்காகவும் ஜனங்களுடைய தப்பிதங்களுக்காகவும் செலுத்துவான் என சொல்கிறார் " (எபி ரெயர் 9:7).

பிறகு, எபிரெய எழுத்தாளர் இப்படியாக முடிக்கிறார் "அல்லாமலும், காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திச் செய்யமாட்டாதே" (எபிரெயர் 10:4). பலியிடப்பட்ட மிருகங்கள் மந்தையின் சிறந்தவைகளாக, பழுதற்றதாக, கறையற்றதாக இருந்தாலும் கூட அவைகள் மிருகங் கள் தானே. ஆகையால், அங்கே ஒரு பூரண பலி தேவைப்பட்டது. மிருகங்களின் இரத்தம் அந்த பூரண பலிக்கு நிழலாகவே இருந்தது. மிருகங்களினால் பாவத்தை எடுத்துப் போட முடியாமல் போனதி னாலும், மனிதன் தானே பாவியாக இருந்து, தன்னையோ, மற்றவர் களையோ இரட்சிக்க முடியாது என்பதாலும் பூரண பலியாக யார் இருக்க முடியும் என்கிற கேள்வி எழுந்தது. அது ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து ஒருவரைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது. கிறிஸ்து பாவமில்லாமல் வாழ்ந்தார். அவர் பாவஞ்செய்யவில்லை என்று பேதுரு சொன்னார் (1பேதுரு 2:22). கிறிஸ்து பாவமில்லாத வாழ்க்கை வாழ்ந்து, நியாயப்பிரமா ணத்தை முழுமையாகக் கைக்கொண்டு சோதனைக்கு அடிபணி யாமல் இருந்ததால் தான் இந்த உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்க முடிந்தது.

கிறிஸ்துவின் இரத்தத்தை வலியுறுத்துகிற சில பாடல்களை நாம் பாடுகிறோம். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் வல்லமை உண்டு என்றதொரு பாடலைப் பாடுகிறோம். " இயேசுவின் இரத்தத்தைத்தவிர வேறு எதுவும் என் பாவத்தைக் கழுவ முடியாது"

என்று இன்னொரு பாடல் உண்டு. இந்த வார்த்தைகள் எல்லாம் எத்தனை உண்மையாயிருக்கிறது! இரட்சிக்கக் கூடாத அநேக காரியங்கள் உண்டு. நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, மிருகங்களின் இரத்தம் நம்மை இரட்சிக்க முடியாது. அதுபோல, நியாயப்பிரமாணத்தாலும் நம்மை இரட்சிக்க முடியவில்லை. அது ஜனங்களைக் கிறிஸ்துவண்டை கொண்டு வரத்தான் முடிந்தது. பவுல் இப்படியாகச் சொல்கிறார், " அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின் கீழ் அடைத்துப் போட்டது. ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்கள்ள வே" (கலாத்தியர் 3:22-25). நியாயப்பிரமாணத்தின் கிரியைகளி னால் நாம் இரட்சிக்கப்பட முடியாது என்பது மாத்திரமல்ல, நம்முடைய நற்கிரியைகளினாலும் கூட இரட்சிப்படைய முடியாது. இது சம்மந் தமாக பவுல், " ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும், இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும், பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப் படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும், மனுஷர் மேலுள்ள அன்பும் பிரசன்னமான போது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின் படி சுதந்தரராகத் தக்கதாக, அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரண மாய் பொழிந்தருளினார்" (தீத்து 3:3-7) என்று எழுதியுள்ளார்.

பொன், வெள்ளி போன்றவைகளால் நாம் மீட்கப்படவோ அல்லது இரட்சிக்கப்படவோ இல்லை என்று பேதுரு சொல்கிறார். *" உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில் லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர் களே " (Iபேதுரு 1:18,19).* மனிதன் தன் வாழ்க்கைப் பாதையில் எதை வேண்டுமானாலும் வாங்கலாம் அல்லது எதற்காக வேண்டு மானாலும் லஞ்சம் கொடுக்கலாம். ஆனால், இரட்சிப்பை அவனால் வாங்கவோ அல்லது தான் இரட்சிக்கப்படும்படியாய் கர்த்தருக்கு லஞ்சம் கொடுக்கவோ முடியாது.

ஆகையால், நாம் நம்முடைய நம்பிக்கையை சரீரப்பிரகார மான காரியங்களின் மீது வைக்காதபடி ஞானமாய் நடந்து கொள்ள வேண்டும். கடைசியாக, மனிதனுடைய மதங்களோ அல்லது மனுஷருடைய உபதேசங்கள் மற்றும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படி வதோ ஒருவரை பரலோகம் கொண்டு செல்லாது. கிறிஸ்து இப்படி யாகச் சொன்னார். *" மனுஷருடைய கற்பனைகளை உபதேசங் களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் " (மத்தேயு 15:9)* என்று. நாம் கள்ளப் போதகர்களுக்கு வாழ்த்துதல் சொன்னால், அவர்களுடைய துர்கிரியைகளுக்கும் பங்குள்ளவர்க ளாகிறோம் என்று யோவான் சொல்கிறார் *(IIயோவான் 11)*. மறுபடி யும் பவுல், பிரிவினைகள் உண்டாக்குகிறவர்கள் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யவில்லை என்று கூறுகிறார் *(ரோமர் 16:17,18)*.

பாவிகளாயிருக்கிற நமக்கு இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது, கிறிஸ்துவின் தியாக பலியின் மூலமாக வும், இரத்தஞ்சிந்துதலினாலும் தான் சாத்தியம். கிறிஸ்துவின் இரத்தத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிற அநேக வசனப் பகுதிகள் இருக்கின்றன. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக நாம் தேவனோடு ஒப்புரவாகிறோம் அல்லது தேவனுக்கு நாம் சிநேகித ராகிறோம் என்று பவுல் கூறுகிறார். பவுல் இப்படிச் சொல்கிறார். *" சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர்*

*சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று* " (கொலோசெயர் 1:19,20). எபேசு கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதும் போது, அவர்கள் ஒரு காலத்தில் தேவனிடத்திலிருந்து தூரமாயிருந்தார்கள். ஆனால், கிறிஸ்துவின் இரத்தத்தினாலே தேவனிடத்தில் சமீபமானார்கள் என்று கூறுகிறார். மேலும், பழைய பிரமாணமாகிய பிரிவினை என்ற நடுச்சுவர் கிறிஸ்துவின் மரணத்தினாலே தகர்க்கப்பட்டு இப்போது யூதர்களும், புறஜாதிகளும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருப்பதாக பவுல் கூறுகிறார் (எபேசியர் 2:13-17).

கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய இரத்தம் பற்றியும் பேசும்போது பவுல், எபேசு கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதுகிறார். "*அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது* " (எபேசியர் 1:7). பவுல் கொலேசே கிறிஸ்தவர்களுக்கு, "*குமாரனாகிய அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது* " என்கிறார் (கொலோசெயர் 1:14). கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தின போது, கிறிஸ்து, " *இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது* " என்றார் (மத்தேயு 26:28). கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்படுகிறார்கள் (அப்போஸ்தலர் 2:47). பவுல் எபேசு சபை மூப்பர்களிடத்தில் இப்படியாகச் சொன்னார். " *ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்* " (அப்போஸ்தலர் 20:28). எபேசியர் 5:25-ல், கிறிஸ்து சரீரத்திற்காக அல்லது சபைக்காக மரித்தார். அதாவது, சபைக்காக தமது இரத்தத்தை சிந்தினார் அல்லது தம்முடைய இரத்தத்தினாலே அதை வாங்கினார் என்று சொல்லப்பட்டிருக்கிறோம். வேறுவிதமாகச் சொன்னால், சபை இருப்பதற்குத்

தேவையான கிரயத்தை அவர் செலுத்தினார். அதன் பின்பு, கிறிஸ்தவர்களாக, நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டிருக்கிறோம். யோவான் இப்படி எழுதினார் "*அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்*" (1யோவான் 1:7). கடைசியாக, கர்த்தருடைய ஜனங்களாக வாரத்தின் முதல் நாளிலே கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் நினைவுகூரும்படி நாம் ஒன்று கூடுகிறோம் (அப்போஸ்தலர் 20:7). பவுல் கொரிந்து கிறிஸ்தவர்களுக்குச் சொல்லும்போது, கிறிஸ்து தம்முடைய சரீரத்தை நினைவு கூரும்படி அப்பத்திலே பங்கு பெற வேண்டும் என்று சொன்னதை வலியுறுத்துகிறார். " போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இதை அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1கொரிந்தியர் 11:25,26).

கிறிஸ்துவின் இரத்தம் பற்றியும், அது ஏன் சிந்தப்பட்டது என்பது பற்றியும், அது பெற்றிருக்கும் வல்லமை பற்றியும் நாம் இன்னும் அதிகமாகச் சொல்ல முடியும். ஆனால், நாம் ஏற்கனவே வசனங்களிலிருந்து வாசித்தவைகள் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

1. கிறிஸ்து மனிதனுடைய பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்து இரத்தத்தைச் சிந்தினபடியால் அவர் ஒரு பூரணபலியாக இருக்கிறார்.

2. கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டபடியால் பழைய பிரமாணம் நீக்கப்பட்டு, புதிய பிரமாணம் அவருடைய இரத்தத்தினாலே முத்திரை போடப்பட்டது.

3. நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாம் கீழ்ப்படிதலினாலே அந்த இரத்தத்தோடு தொடர்பு கொள்கிறோம். வேறுவிதமாகச் சொன்னால், மனிதன்

இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், அவன் இயேசுவில் விசுவாசம் வைத்து, தன்னுடைய பாவங்களிலிருந்து மனந் திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை யிட்டு, பாவமன்னிப்புக்கென்று முழுக்கு ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (மாற்கு 16:16 அப்போஸ்தலர் 2:38). ஒருவர் முழுக்கு ஞானஸ்நானத் திலே கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது, கிறிஸ்துவின் இரத்தத் தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறார். அதோடு கர்த்தரு டைய மரணத்தின் நன்மையையும் பெறுகிறார். இதை நாம் ரோமர் ஆறாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். பவுல் விசுவாசித்து, தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கர்த்தரை ஏற்றுக்கொண்ட போது, நீ எழுந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள் என்று சொல்லப்பட்டு, அவன் பாவங்கள் அதன் மூலம் கழுவப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. "இப்பொழுது நீ தாமதிக்கிற தென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் " (அப்போஸ்தலர் 22:16). மேலும், மனிதன் பாவமன்னிப்பைப் பெறும்படி தம்முடைய இரத்தம் சிந்தப் பட்டதாக கிறிஸ்து சொன்னார் (மத்தேயு 26:28; எபேசியர் 1:7). பின்பு, அப்போஸ்தலர் 2:38-ல் பேதுரு, கிறிஸ்துவின் விசுவாசி களான திரளான ஜனங்களைப் பார்த்து, அவர்கள் பாவமன்னிப் பைப் பெற வேண்டுமானால் மனந்திரும்பி, கிறிஸ்துவின் நாமத் தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொன்னார். அவர்கள் அப்படிச் செய்தபோது, கர்த்தர் அவர்களை இரட்சித்து, தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார் (அப்போஸ்தலர் 2:47). எனவே, ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அவர் விசுவாசித்து, மனந்திரும்பி, கிறிஸ்துவை அறிக்கை செய்து, ஞானஸ்நானம் பெற வேண்டும். அப்படி ஒருவர் செய்யும் போது கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள் கிறார். அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது.


4. கர்த்தருடைய சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டது. இது கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப் பட்டபடியால் மிகவும் முக்கியமானது. நாம் கர்த்தருடையவர்

களாக மாற வேண்டுமானால் நாம் இந்த சபையிலே அங்கத்தினர் களாக வேண்டும்.

5. ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்துவின் ஒளியிலே நடக்கும்போது அல்லது அவருடைய சித்தத்தின்படி செய்யும் போது, அதாவது, அவருக்கு எல்லா வகையிலும் உண்மையாக இருக்கும்போது, கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து அவனை சுத்திகரிக்கின்றது.

6. நாம் கர்த்தருடைய ஜனங்களாக வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்று, கிறிஸ்துவின் சரீரத்தை நினைவு கூரும்படி அப்பம் பிட்குதலில் பங்கு பெற்று, கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூரும்படியாக திராட்ச ரசப் பாத்திரத்திலும் பங்கு பெற வேண்டும். இது நாம் இரட்சிக்கப் படும்படி கிறிஸ்து செய்த தியாகத்தை நினைவுகூர நமக்கு உதவிச் செய்கிறது.

7. என் நண்பர்களே, கிறிஸ்து உங்களுக்காக மரித்தார். உங்கள் பாவங்களிலிருந்து நீங்கள் மன்னிப்படையும்படி அவர் தம்மு டைய இரத்தத்தைச் சிந்தினார். நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர் களா? அவருக்குக் கீழ்ப்படிந்து விட்டீர்களா? இல்லையென் றால், அப்படிச் செய்யும்படி உங்களை நாங்கள் உற்சாகப்படுத்து கிறோம். கர்த்தர் உங்களுக்கு சாத்தியப்படுத்தியிருக்கிற இரட்சிப் பை ஏற்றுக்கொள்ள தவறுவது மிகுந்த அவமானமுள்ள தாயிருக்கும்.



## பாடம் - 2

# ஏன் அஸ்திபாரம் மிக முக்கியமானதாக இருக்கிறது

நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி, இவ்வுலகத்தில் ஒரு வீட்டையோ அல்லது அடுக்குமாடி வீடுகளையோ அல்லது நீண்ட நாட்கள் நிலைத்திருக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கும் ஏதாவது ஒன்றையோ கட்டுவதற்கு சரியான அஸ்திபாரம் மிகவும் அவசியமானதாக இருக்கிறது. நாம் நம்முடைய வேலையிலோ அல்லது ஒரு தொழிலிலோ வெற்றி பெற வேண்டுமென்றால், அதற்காக போதுமான கல்வி மற்றும் பயிற்சி பெற்று நம்மை ஆயத்த மாக்கி வைத்திருக்க வேண்டுவது அவசியம் என்ற உண்மையை நாம் அறிந்திருக்கிறோம். நாம் இந்த அஸ்திபாரத்தின் முக்கியத்து வத்தையோ அல்லது எதிர்காலத்திற்கு ஆயத்தப்படுவதையோ அசட்டை செய்தால், நாம் மோசமான காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்று பொருள்படும்.

நம்முடைய கர்த்தர் ஒரு நல்ல ஆவிக்குரிய அஸ்திபாரத்திற் கான அவசியத்தை இரண்டு வகையான கட்டிடம் கட்டுபவர்களை உதாரணமாகச் சொல்லி விளக்கியுள்ளார். ஒருவன் கன்மலையின் மேல் வீட்டைக் கட்டினவன். இன்னொருவன் மணலின் மேல் வீட்டைக் கட்டினவன். இவர்களைப் பற்றி இயேசு என்ன சொன் னார் என்பதை கவனியுங்கள். " *ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை. ஏனென்றால், அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு*

ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதின போது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார் " (மத்தேயு 7:24-27).

சற்று முன்பு நாம் பார்த்த உதாரணத்தில், இயேசு அந்தக் கட்டிடம் கட்டுபவர்களில் யார் புத்தியுள்ளவன், யார் புத்தியற்றவன் என்று வேறுபடுத்திக் காட்டியிருக்கிறார். கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி கட்டுகிறவன் புத்தியுள்ளவன் என்று காட்டுகிறார். அவன் கிறிஸ்துவின் மீது கட்டுகிறபடியால் புத்தியுள்ள மனிதன் என்று சொல்கிறார். இந்த மனிதன் பழக்க வழக்கங்களையும், பாரம்பரியத்தையும், மனுஷருடைய போதனைகளையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு, கிறிஸ்துவின் போதனைகளின் மீது தன் வீட்டைக் காட்டுகிறான். அதன் விளைவாக, இந்த மனுஷன் உறுதியான அஸ்திபாரத்தில் இருக்கிறான். இவனிடம் சத்தியம் இருக்கிறது, இவனிடம் கிறிஸ்து இருக்கிறார். இவன் ஒரு கிறிஸ்தவன். இவன் கர்த்தருடைய சபையின் உறுப்பினர். இந்த மனுஷனை எதுவும் அசைக்க முடியாது. இவன் பற்றிக் கொள்ளும்படியான ஒன்று இருக்கிறது. இவனுக்கு நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை உண்டு.

இயேசு பேசுகிற மற்றொரு மனிதன் புத்தியற்றவன். இவனும் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்கிறான். ஆனால், அவைகளுக்கு கீழ்ப்படியத் தவறுகிறான். ஒருவேளை அவைகளை அவன் நம்பாமல் இருந்திருக்கலாம். இன்னும் காலம் இருக்கிறது என்று நினைத்திருக்கலாம். அவன் தன்னை நல்லவன் என காரணம் காட்டியிருக்கலாம். அல்லது மனுஷருடைய உபதேசங்களுக்கு பின்னாகச் சென்றிருக்கலாம். பிரச்சினை என்னவாக இருந்தாலும் அவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியத் தவறிவிட்டது உண்மையாயிருக்கிறபடியால், அவன் கடைசியாக எதன்மீது கட்டுகிறானோ அது அவனுக்கு நன்மையாக இருக்காது. அவன் இழந்து போன நிலையில் இருக்கிறான், நித்திய காலத்திற்கும் இழந்து போவான்.

அநேக வருடங்களுக்கு முன்பு ஏசாயா தீர்க்கதரிசி, கர்த்தர் அஸ்திபாரமாகிய ஒரு கல்லை சீயோனிலே வைப்பது குறித்துப் பேசியிருக்கிறார். அந்த அஸ்திபாரம் கிறிஸ்து தான். அது எருசலேமில் வைக்கப்படும். அப்போது ஏசாயா உரைத்த அந்த

தீர்க்கதரிசனத்தை நாம் வாசிப்போம். "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது; இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும் திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான் என்று கூறியுள்ளார்" (ஏசாயா 28:16). இந்த அஸ்திபாரத்தின் விவரிப்பைக் கவனியுங்கள். அது ஒரு கல்லாயிருக்கும், அது பரீட்சிக்கப்பட்ட ஒன்றாயிருக்கும், அது விலையேறப் பெற்றதாயிருக்கும், அது திட அஸ்திபாரமுள்ள மூலைக்கல்லாயிருக்கும். இந்த விவரிப்பு, பதங்கள் எல்லாம் இயேசு கிறிஸ்துவைக் குறிப்பதை புதிய ஏற்பாட்டில் நாம் பின்னர் பார்க்கலாம். சங்கீதக்காரனாகிய தாவீதும் இந்த அஸ்திபாரம் பற்றி சங்கீதம் 118:22,23 வசனங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறார், " வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக் கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்க ளுக்கு ஆச்சரிமாயிருக்கிறது ". புதிய ஏற்பாட்டில் இது கிறிஸ்துவில் நிறைவேறியதை நாம் காண முடியும்.

இயேசுவின் நாட்களுக்கு நாம் திரும்பும்போது, இப்படி வாசிக்கிறோம். " இயேசு அவர்களை நோக்கி; வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயி ருக்கிறது என்று வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? " (மத்தேயு 21:42). இயேசு இவ்விதமாகச் சொன்னார், " வீடு கட்டுகிற வர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லா யிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன? அந்தக் கல்லின் மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப் போவான், அது எவன் மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்றார் ". ஒரு கல் அல்லது பாறை அஸ்திபாரம் போடுவதற்காக பயன்படுத்தப்படும், ஆனால், ஒருவர் அதன்மீது இடறி விழுந்தா லோ அல்லது அது அவன்மீது விழுந்தாலோ அந்தக்கல் அந்த நபரை அழித்து விடும். வேறுவிதமாகச் சொன்னால், சரியாக பயன்படுத்தி னால் அது ஆசீர்வாதமாக இருக்கும்; ஆனால், அது அசட்டை பண்ணப்பட்டால் அல்லது தவறாக பயன்படுத்தப்பட்டால் அது அழிக்கும் சக்தியாக மாறிவிடும். இது ஆவிக்குரிய கன்மலையா யிருக்கிற கிறிஸ்துவின் காரியத்தில் உண்மையாய் இருக்கிறது.

அப்போஸ்தலருடைய புத்தகத்திற்குத் திரும்பும் போது, பேதுரு, குணமாக்கப்பட்ட ஒரு மனிதனை பற்றிப் பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகரிடம் இப்படிச் சொன்னார். " *உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக் கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்* " *(அப்போஸ்தலர் 4:10-12)*. பவுல் இஸ்ரவேலர்கள் அல்லது யூதர்களைப் பற்றி இப்படிச் சொல்கிறார். " *நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேல ரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை, என்னத்தினாலென் றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடைய வில்லை; இடறுதற்கான கல்லில் இடறினார்கள். இதோ, இடறுதற் கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று*" (ரோமர் *9:31-33*). இங்கே பவுல் ஏசாயா 28:16ஐ மேற்கோள் காட்டித் தான் பேசுகிறார்.

இங்கே, இந்தக் கன்மலை அல்லது அஸ்திபாரம் யார்? "*போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது* " (I கொரிந்தியர் *3:11*). இன்னும் I கொரிந்தியர் *10:3,4* வசனங்களில், மோசேயின் நாட்களில் இஸ்ரவேலர்கள் பற்றி பவுல் இப்படிச் சொல்கிறார், "*எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே என்று* ". அதைப் போலவே, எபேசு கிறிஸ்தவர்களிடம் பேசும்போது, " *ஆகையால்*

*இனி நீங்கள் அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர் மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்"* (எபேசியர் 2:19-22) என்று கூறியுள்ளார். இங்கே அப்போஸ்தலனாகிய பவுல், தேவனுடைய வீட்டார் அல்லது தேவனுடைய குடும்பமாயிருக்கிற கிறிஸ்தவர்கள் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார். இங்கே தேவனுடைய வீட்டார் அல்லது சபையார் எப்படி அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் உபதேசங்களின் மீது கட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், அதற்கு கிறிஸ்து மூலைக் கல்லாயிருக்கிறார் என்பதையும் விளக்குகிறார். இங்கே பொதுவான அஸ்திபாரம் மாத்திரம் முக்கியமானதாயிராமல், மூலைக்கல்லும் முக்கியமானதாக உள்ளது. அஸ்திபாரத்தின் மிக முக்கியமான பகுதி இந்த மூலைக்கல்தான். அஸ்திபாரமில்லாமல் எந்த ஒரு வீடும் நிலை நிற்காது. மறுபடியும் பவுல் சொல்லும் போது, "*தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது* " (1தீமோத்தேயு *3:15*). கிறிஸ்து அஸ்திபாரமாகவும், மூலைக் கல்லாகவும் இருந்து தேவனுடைய வீடு அல்லது சபை அதன்மீது கட்டப்படும் போது, சபை சத்தியத்துக்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கிறது. அதாவது, சபை உறுதியான அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்டிருக்கிறபடியால், சபை சத்தியத்தை பிடித்துக் கொள்ளும் நிலையிலும், இழந்துபோன உலகத்திற்கு சத்தியத்தை பிரசங்கிக்கும் நிலையிலும் இருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களிடம், " *இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த*


*குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள். மனுஷரால் தள்ளப்பட்ட தாயினும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்த வர்களாகிய நீங்களும் ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள், அந்தப் படியே; இதோ தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றது மாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால், விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர் களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக்கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று; அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற் கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள் "(1பேதுரு 2:1-8).*

மறுபடியுமாக, இங்கே இந்த எழுத்தாளர் எப்படி கிறிஸ்து, ஏசாயா 28:16 தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறார் என்பதையும், கிறிஸ்து பிரதான மூலைக்கல்லாயிருக்கிறார் என்பதையும் குறிப்பிடுகிறார். யூதர்கள் தள்ளின அந்தக்கல் அஸ்தி பாரமாக மாறினதோடு, அஸ்திபாரத்தின் மிக முக்கியமான பகுதி யாகிய பிரதான மூலைக்கல்லாகவும் மாறி விட்டது. இங்கே, பேதுரு கிறிஸ்துவை ஒருவன் ஏற்றுக் கொள்ளும் போது எப்படி அவன் ஆசீர்வாதமுள்ளவனாகவும், அவரை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளும் போது எப்படி இழந்து போனவர்களாகவும் இருப்பார்கள் என்று காட்டுகிறார்.

மத்தேயு 16:13-19 வசனங்களில், கிறிஸ்து அப்போஸ்தலர் களிடம் இந்த உலகம் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறது என்று கேட்டார். அப்போது அப்போஸ்தலர்கள், உம்மை சிலர் ஒரு தீர்க்கதரிசி என்றும், சிலர் உம்மை வேறொரு தீர்க்கதரிசி என்றும் நினைக்கிறார்கள் என்று பதிலளித்தார்கள். ஆனால், அப்படிப்பட்ட பதிலை அங்கே கிறிஸ்து எதிர்பார்க்கவில்லை. தம்மீது அவர்கள்

கொண்டிருந்த இப்படிப்பட்ட விசுவாசத்தின் மீது, இயேசுவால் தம்முடைய சபையை கட்டவில்லை. பின்பு, இயேசு அப்போஸ்தலர்களிடம் திரும்பி, அவர்கள் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று கேட்டார். அப்பொழுது அவர்கள், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பதாகச் சொன்னார்கள். அங்கே, தன்னை தேவனுடைய குமாரன் என்று அவர்கள் செய்த அறிக்கையின் மீது தம்முடைய சபையைக் கட்டுவதாகக் கர்த்தர் பதிலளித்தார். அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். கர்த்தர் அவர்களை இரட்சித்துத் தம்முடைய சபையிலே சேர்த்துக்கொண்டார். ஆனால், சபையை அவர் எதன் மீது கட்டினார்? தான் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்கின்ற உண்மையின் மீது இயேசு தம்முடைய சபையைக் கட்டினார். அதுமாத்திரமல்ல, சபை இந்நாள்வரை இந்த உண்மையின் மீதுதான் இருக்கிறது. கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்கப்படா திருந்தால் சபை விழுந்துபோயிருக்கும் அல்லது எப்பொழுதோ இல்லாமல் போயிருக்கும். ஆனால், சபை இன்னும் நிலைத்திருக் கிறது, கிறிஸ்து தேவனுடைய குமாரன், கன்மலை, பிரதான மூலைக்கல் என்கின்ற உண்மைகளை அடிப்படையாக வைத்துத் தான் சபை இன்னும் நிலைத்திருக்கிறது. பவுல் சொன்னது போல், அவர் ஓர் உறுதியான அஸ்திபாரம் தான்.

என் நண்பர்களே, எதன் மீது நீங்கள் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? அவர் சொல்லிய வார்த்தையைக் கேட்டு அவைகளின் படி செய்தால் நீங்கள் கிறிஸ்துவின் மீது கட்ட முடியும். நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால், கர்த்தர் உங்களை இரட்சித்து, கிறிஸ்துவின் மீது கட்டப்பட்ட தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார். நீங்கள் ஒரு புத்தியுள்ள நபராக இருந்தால் இதைச் செய்வீர்கள். நீங்கள் அப்படிச் செய்ய நாங்கள் ஜெபிக்கிறோம்.



## பாடம் - 3

# ஏன் நாங்கள் புதிய பிறப்பு பற்றி பிரசங்கிக்கிறோம்?

**பு**திய பிறப்பு என்றால் என்ன? இது ஒரு நல்ல கேள்வி. உண்மையில் இந்தக் கேள்வி அநேக முறை கேட்கப்பட்டு இதற்குப் பதில்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது இருப்பினும், அநேக ஜனங்கள் இது என்ன என்பதை அறியாமல் இருந்து வருகிறார்கள்.

நம்முடைய பிரிவினைச் சபை நண்பர்கள் புதிய பிறப்பு என்பது, ஒருவர் இயேசு கிறிஸ்துவை தன்னுடைய ஜீவியத்தில் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது ஏற்படுகின்ற ஓர் அற்புத மாற்றம் தான் என்று விளக்கம் கொடுப்பார்கள். ஆனால், புதிய பிறப்புக்கு மேற்சொல்லப்பட்ட விளக்கத்தை விட அதிக மான பொருள் உண்டு.

யோவான் மூன்றாம் அதிகாரத்திற்கு நாம் திரும்பும் போது அங்கே கிறிஸ்து புதிய பிறப்பு அல்லது ஒருவர் மறுபடியும் பிறத்தல் பற்றி பேசுகிறதை நாம் பார்க்கிறோம். இது கிறிஸ்துவின் மரணத் திற்கு முன்பு போதிக்கப்பட்டது. அப்போது, பழைய பிரமாணம் ஒரு சட்டமாக இருந்து கட்டுப்படுத்தியது என்பதை மனதில் வையுங்கள். ஆயினும், கிறிஸ்துவின் பிரமாணம் அல்லது கிறிஸ்த வம் வரும் போது என்ன அவசியப்படும் என்கிற எதிர்பார்ப்புடன் இது போதிக்கப்பட்டிருந்தது. இது ராஜ்யம் அல்லது சபை ஸ்தா பிக்கப் படுவதற்கு முன்பு போதிக்கப்பட்டிருந்தது. ஆனால், ராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, ஒருவர் அதில் பிரவேசிக்க வேண்டுமென்றால் மறுபடியும் பிறப்பது அவசியமாயிருக்கும் என்று கர்த்தர் சொன்னார்.

ஆனால், நாம் இப்போது புதிய பிறப்பு பற்றி வாசிப்போம். "யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசு

*வினிடத்தில் வந்து; ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு; ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், அதிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். அதற்கு நிக்கொதேமு: இவைகள் எப்படி ஆகும் என்றான். இயேசு அவனை நோக்கி : நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே, மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிற வருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவான் 3:1-13).*

இப்பொழுது நாம் வாசித்த வசனங்களின் அமைப்பைக் கவனியுங்கள். நிக்கொதேமு என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன்

இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்தான். அவன் ஒரு பரிசேய னாகவும், யூதர்களுக்கு அதிகாரியாகவும் இருந்தபடியால் தன் வருகை இரகசியமாய் இருக்க வேண்டும் என்பதற்காக இராத்திரியில் வந்தான் என சிலர் நினைக்கின்றனர். இந்த பரிசேயர்கள் யூதர்களில் மிகவும் பக்தியுள்ள ஒரு பிரிவினர். அவர்கள் உயிர்த்தெழுதலை யும், தேவதூதர்களையும் விசுவாசித்தனர். இந்த நிக்கொதேமு யூதர் களுக்கு அதிகாரியாக இருந்தபடியால் இவர் வயதில் மூத்தவராகவும், பதவியும், மரியாதையும் பெற்ற ஒருவராகவும் வாழ்ந்திருக்கிறார் என பொருள்படுகிறது. எப்படியோ, இவன் இயேசுவினிடத்தில் வரும் போது தன்னை இயேசுவின் விசுவாசி என அடையாளப் படுத்துகிறான். இயேசுவை ரபீ அல்லது போதகர் என்று அழைப்பதன் மூலம், கிறிஸ்து அற்புத அடையாளங்களைச் செய்ய வல்லவரா யிருந்தபடியால், அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை இந்த மனிதன் ஒத்துக்கொண்டான். இப்படிப்பட்டதான ஒரு சூழ்நிலையில் ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தைக் காண வேண்டு மென்றால் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று இயேசு விளக்கத் தொடங்கினார். ஆனால், இயேசு என்னப் பேசினார் என்பதை புரிந்து கொள்ள முடியாததால் அவன் குழப்பமடைந்தான். அதன் பின்பு, ஒருவன் முதிர்வயதான பிறகு எப்படி மறுபடியும் பிறக்க முடியும் என அறிய விரும்பினான். நிக்கொதெமு தொடர்ந்து கேட்கும் போது, ஒருவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்று கேட்டான். நிச்சயமாக அப்படி ஒருவனாலும் செய்ய முடியாது; இயேசுவும் அப்படிப் போதிக்கவில்லை. கிறிஸ்து ஆவிக்குரிய பிறப்புப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், நிக்கொதேமு சரீரப் பிரகாரமான பிறப்பைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். ஏனென்றால், அவனுக்கு தெரிந்த ஒரே பிறப்பு இதுதான்.

தொடர்ந்து, இயேசு புதிய பிறப்பு பற்றி மிக விவரமாக விளக்கினார். இயேசு அநேக வார்த்தைகளைக் கொண்டு ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்றால் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பது அவசியம் என்று சொன்னார்; இதைத்தவிர அதில் பிரவேசிக்க வேறு வழியில்லை.

இங்கே நாம் இந்த வார்த்தைகளை மேலுமாக ஆராய்ந்து பார்ப்போம். முதலாவது, ஜலத்தினால் பிறப்பது அவசியம் என்று இயேசு சொன்னதை கவனியுங்கள். பிறப்பு என்பது ஒரு புதிய வாழ்க்கை சம்பந்தப்பட்டது. ஆனால், இங்கே சொல்லப்பட்டிருக் கிற ஜலத்தைப் பற்றி என்ன? இதற்கும் சரீரப்பிரகாரமான பிறப்புக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஏனென்றால், இயேசு நிக்கொதேமுவிடம் இந்த பிறப்பு, மறுபடியும் பிறப்பதற்கு ஒருவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசிப்பதிலிருந்து வேறுபட்டது என்று விளக்கிவிட்டார். " *தண்ணீர்* " என்கிற வார்த் தையை நாம் சிந்திக்கும் போது இந்த வார்த்தை எங்கெல்லாம் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் அது ஆவிக்குரிய தண்ணீராக பயன்படுத்தப்பட்டால் அது ஜீவத் தண்ணீராகத்தான் இருக்க முடியும். மாறாக, ஜலம் என்று வித்தியாசமான வசனங் களில் வெறுமனே காணப்பட்டால் அது நாம் பயன்படுத்தும் சொல் அர்த்த ரீதியிலான தண்ணீராகத்தான் பொருள்படும். ஆனால், இந்த சந்தர்ப்பத்தில் அது எவ்விதமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது? இங்கே ஜலம் என்று மட்டும் இருப்பதால், இயேசு சாதாரண தண்ணீரைப் பற்றிதான் பேசுகிறார் என்கிற முடிவுக்கு வரவேண் டும். இப்போது, அடுத்த கேள்வி; தண்ணீரோடு இணைக்கப்பட்டி ருக்கிற எந்த கட்டளையை நாம் வேத வாக்கியங்களில் வாசிக்கி றோம்? கர்த்தருடைய வார்த்தைகளில் உங்களுக்குப் பரிச்சயம் இருந்தால், தண்ணீரை சம்பந்தப்படுத்துகிற அந்தக் கட்டளை அல்லது செயல் ஞானஸ்நானம் தான் என்பது விளங்கும். அப்போஸ்தலர் 8:26-39 வசனங்களில், அந்த எத்தியோப்பிய மந்திரிக்கு கிறிஸ்துவானவர் போதிக்கப்பட்டு, பின்பு ஞானஸ் நானம் பெறும்படி தண்ணீருக்குள் அழைத்துச்செல்லப்பட்டான். மேலுமாக, ஒருவன் ஜலத்தினால் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார். ஒருவன் ஜலத்தினால் எப்படிப் பிறக்க முடியும்? இங்கே தண்ணீரானது ஞானஸ்நானத்தை குறிக்கிறதாக இருந்தால் ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் (கொலோசெயர் 2:12), தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டால், ஒருவர் தண்ணீரிலிருந்து வெளியே வரும் போது, அங்கே ஒரு மறுபிறப்பின் அனுபவம் ஏற்படுகிறது. அப்போஸ்தலனாகிய

பவுல் ஞானஸ்நானத்தில் இது தான் சம்பவிக்கிறது என்று விளக்கு கிறார் (ரோமர் 6:3,4).

ஜலத்தினால் பிறப்பது அல்லது ஞானஸ்நானம் பெறுவது என்பதை நாம் தொடர்ந்து சிந்திக்கும் போது, ஒருவர் மறுபடியும் பிறக்கும் போது புதிய ஜீவனுக்கான அனுபவம் ஏற்படுகிறதென்று நாம் நினைப்பூட்டப்படுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 6:3-லும், கலாத்தியம் 3:26, 27 வசனங்களிலும் சொல்லும் போது, ஞானஸ்நானம் ஒருவரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது என்கிறார். மேலும், கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் புது சிருஷ்டிகளாயிருக்கிறார்கள் என்று அப்போஸ்தலன் பவுல், "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டி யாயிருக்கிறார்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (I கொரிந்தியர் 5:17) என்கிறார். பேதுரு கிறிஸ்தவர் களிடம் பேசும் போது, " நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (Iபேதுரு 2:3) என்கிறார்.

இரண்டாவது, ஒருவர் ஆவியினாலும் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார். இங்கே ஆவி என்பது யாரைக் குறிக் கிறது? எபேசியர் 4:4-ல் பவுல் ஒரே ஆவி நமக்கு உண்டு என்று சொல்லியிருக்கிறார். அது என்ன ஆவியாயிருக்கும்? இது பரிசுத்த ஆவிதான் (யோவான் 14:26; அப்போஸ்தலர் 1:8; அப்போஸ்தலர் 2:38; (Iதெசலோனிக்கேயர் 4:8). ஆனால், பரிசுத்த ஆவியானவரின் பணி என்னவாயிருந்தது? அவர் அப்போஸ்தலர்களையும், மற்றவர் களையும் கர்த்தருடைய வார்த்தையை எழுதும்படி வழிநடத் தினார். அதற்கு முன்பாக, பழைய ஏற்பாட்டு தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் தேவனுடைய வார்த்தையை எழுத அவர்களை வழிநடத்தினார் (II பேதுரு 1:21). " வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று பவுல் எழுதி னார். (II தீமோத்தேயு 3:16,17). ஆனால், ஆவியின் வார்த்தை அல்லது கர்த்தருடைய வார்த்தையில் என்ன வெளிப்படுத்தப்பட் டிருக்கின்றது? சத்தியம் (யோவான் 17:17), கிறிஸ்துவின் சுவி சேஷம் (ரோமர் 1:16) அல்லது ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்பது (அப். 2:37,38). ஒருவர் ஆவியின் வார்த்தையை

*விசுவாசித்தால் அதற்கு அவர் கீழ்ப்படியமாட்டாரா? பேதுரு அவருடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதுகிறார். " ஆகையால், நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ள வர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களை சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள். அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிக்கிறீர்களே. மாம்ச மெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின்பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத் திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே" (1பேதுரு 1:22-25).*

யோவான் 3:5 -ல் ஒருவன் ஆவியினால் பிறக்க வேண்டும் என்று இயேசு சொன்னார். ஆனால், I பேதுரு 1:23 -ல், தேவ ஆவி யினால் ஏவப்பட்ட தேவ மனுஷன், ஒருவர் தேவனுடைய வசனத் தினாலே ஜெநிப்பிக்கப்படுகிறார் என்று சொல்வதை கவனியுங்கள். ஆனால், வார்த்தையைத் தந்தது யார்? ஆவியானவர். எனவே ஆவி யினால் பிறப்பதென்பதும், தேவனுடைய வார்த்தையினால் பிறப்பதென்பதும் ஒன்று தான். ஆனால், விசுவாசம் எப்படி வருகி றது? தேவனுடைய வார்த்தையை கேட்பதினால் (ரோமர் 10:17). ஒருவர் தேவனுடைய வார்த்தையை விசவாசித்தால், அவர் அதற்குக் கீழ்ப்படிவார். அவர் கீழ்ப்படிந்தால் ஞானஸ்நானம் பெறுவார் அல்லது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுவார். அதன் மூலமாக அவர் இரட்சிக்கப்படுவார் (கொலோசெயர் 2:12; மாற்கு 16:16). இதைத்தான் I பேதுரு 1:23 -ல் நாம் ஆவியினால் சத்தியத்திற்கு கீழ்ப்படிவதன் மூலமாக மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறோம் அல்லது தேவனுடைய வார்த்தையின் மூலமாக ஒருவர் என்ன செய்யவேண்டும் என்று ஆவியானவர் வழி நடத்துகிறார்.

எனவே, ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பதென்பது, ஒருவர் தேவனுடைய வார்த்தையின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி

கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறும் போது, கர்த்தர் அவனை இரட்சித்து தம்முடைய ராஜ்யம் அல்லது சபையிலே சேர்த்துக் கொள்வார் என்பதே. அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தை வாசியுங்கள். அங்கே இதைத் தான் எருசலேமில் இருந்த ஜனங்கள் செய்ததை நீங்கள் காண முடியும். அங்கே ஜனங்கள் மறுபடியும் பிறந்தார்கள் என்கின்ற அதே துல்லியமான வார்த்தைகள் இல்லாவிட்டாலும், ஒருவர் ஜலத்தி னாலும், ஆவியினாலும் பிறக்கும் போது தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும் என்று கிறிஸ்து சொன்னபடியாக அவர்கள் மறுபடியும் பிறந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் ஜனங்கள் சுவிசேஷத்தை கேள்விப் பட்டபோது, அதை விசுவா சித்து, பாவங்களிலிருந்து மனந்திருந்தி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்ற போது கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொண்டார். ஆனால், ராஜ்ஜி யமும், சபையும் எப்படி? இரண்டும் வெவ்வேறு அமைப்புகளா? வேத வாக்கியங்களில் ராஜ்யம், சபை இவ்விரண்டும் ஒரே அமைப் பாக அடையாளப்படுத்துகிறபடியால் அவைகள் வெவ்வேறு அமைப்புகள் அல்ல.


உதாரணத்திற்கு, பவுல் கொலேசே சபைக்கு எழுதும் போது அங்கே சபை அங்கத்தினர்கள் இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறுகிறார் (கொலோசெயர் 1:13). அப் போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில், ஜனங்கள் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்ற போது இரட்சிக்கப் பட்டு சபையில் சேர்க்கப்பட்டார்கள்; ஆனால் அப்போஸ்தல ருடைய நடபடிகள் எட்டாம் அதிகாரத்தில் தேவனுடைய ராஜ்யத்துக் கேற்றவைகளைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும், ஸ்திரீகரும் ஞானஸ்நானம் பெற் றார்கள் (அப்போஸ்தலர் 8:12). இது அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் ஜனங்கள் சபையில் அங்கத்தினரானார்கள் என்றும், சமாரியர்கள் ராஜ்யத்தில் அங்கத்தினரானார்கள் என்றும்

பொருள்படுமா? இவ்விரண்டும் வேறுபட்ட அமைப்புகளா? இல்லை, அவைகள் இரண்டும் ஒரே அமைப்பு அல்லது ஸ்தாபனமாக உள்ளது.

எனவே, ஒருவர் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பதென்பது ஒருவர் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அதை விசுவாசித்து, தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவின் பேரிலுள்ள தன் விசுவாசத்தை அறிக்கையிட்டு, இரட்சிக்கப்படும்படி தண்ணீரில் ஞானஸ்நானம் பெறும்போது, கர்த்தர் தம்முடைய சபையில் அவரை சேர்த்துக் கொள்கிறார் அதாவது அந்த நபர் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார் என்பதே. கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தினராக, ஒரு புது சிருஷ்டியாக, ஒரு புதிய கிறிஸ்தவனாக அவன் வளர்ந்து, விருத்தியடைந்து முழுமை யான வளர்ச்சி அடைந்த கிறிஸ்தவனாகும்படி விசுவாசத்தில் உறுதியாக வேண்டும். இதை நாம் செய்து, பிறகு ஒவ்வொரு வருக்கும் பிரசங்கிக்க வேண்டும். முழு உலகத்திற்கும் பிரசங்கிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் நாம் கர்த்தரைப் பிரியப்படுத்த முடியும். அப்போது தான் நமக்கு நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை உண்டாகும்.

நீங்கள் மறுபடியும் பிறந்து விட்டீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ் தவரா? இல்லையென்றால் நீங்கள் இழந்துபோன நிலையில் இருக்கிறீர்கள், இதைச் செய்யும் வரை இழந்த நிலையில் தான் இருப்பீர்கள். நீங்கள் இந்த உலகத்தில் இரட்சிக்கப்படுவதற்கு, வருகின்ற உலகத்தில் இரட்சிக்கப்படுவதற்கு மறுபடியும் பிறப்பதைத் தவிர வேறு வழி இல்லை. இந்தக் காரியங்களில் தேவனுடைய சித்தம் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ளும் வரை தொடர்ந்து படிக்கும்படியாய் நாங்கள் ஜெபிக்கிறோம். இவைகளைப் புரிந்து அவர் போதித்திருக்கிறபடியே செய்ய வேண்டுமென்றும் ஜெபிக்கிறோம்.

## பாடம் - 4



# ஏன் இன்று ஒரே ஞானஸ்நானம் இருக்கிறது?

நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ, இல்லையோ எனக்குத்தெரியாது, ஆனால், கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் மத்தியில் பல ஞானஸ்நானங்கள் உண்டு என்று போதிக்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். முழுக்கு ஞானஸ்நானம், தெளிப்பு ஞானஸ்நானம், ஒருவருடைய தலையின்மேல் தண்ணீரை ஊற்றுகிற ஞானஸ்நானம், ஆவியின் ஞானஸ்நானம் என்று பல ஞானஸ்நானங்கள் இதில் உள்ளடக்கம். இப்படி போதிப்பவர்களின் கூற்றுப்படி, ஞானஸ்நானத்திற்கு பல்வேறுபட்ட நோக்கங்கள் இருக்கின்றன. பெரும்பாலானவர்கள் ஞானஸ்நானம் ஒருவருடைய இரட்சிப்பிற்கான அடையாளம் என்று சொல்கிறார்கள். மற்றவர்கள் ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்காக இருந்து ஒருவரை கிறிஸ்துவுக்குள், சபைக்குள் கொண்டு வருகிறது என்று போதிக்கிறார்கள்.

ஆனால், வேதாகமம் ஒரே ஒரு ஞானஸ்நானம் தான் உண்டு என்று போதிக்கிறது. பவுல் இப்படிச் சொல்கிறார், " *உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே ஒரு நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்* " (எபேசியர் 4:4-6). தேவ ஆவியினால் ஏவப்பட்ட தேவ மனுஷன் ஒரே தேவன், ஒரே கர்த்தர் அல்லது கிறிஸ்து, ஒரே ஆவி அல்லது பரிசுத்த ஆவி, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே சரீரம், ஒரே நம்பிக்கை நமக்கு உண்டு என்று வெளிப்படுத்தியுள்ளார். இவைகள் ஒரே தேவன், ஒரே கிறிஸ்து என்று பொருள் தருமானால், ஞானஸ்நானம் என்பதும் ஒன்றே ஒன்று தான்.

அப்படியானால், ஒரே ஞானஸ்நானம் என்பது எந்த ஞானஸ்நானம்? மனிதர்கள் இன்று பேசுகிற ஞானஸ்நானம் அல்லாமல்

வேத வாக்கியங்களில் நாம் பல்வேறுபட்ட ஞானஸ்நானங்களை வாசிக்கிறோம். லூக்கா 7:29-ல் ஜனங்கள் யோவானின் ஞானஸ் நானம் பெற்றதை நாம் வாசிக்கிறோம். தன்னை சோதிக்க முயற்சி செய்த மக்களைப் பார்த்து இயேசு இப்படிக் கேட்டார், "*யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார்*" (மாற்கு 11:30).

கிறிஸ்து, யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் (மத்தேயு 3:13-17). எல்லா நீதியையும் நிறைவேற்றக் கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும், பொதுவாக ஜனங்கள் வரவிருந்த கர்த்தருடைய ராஜ்யமாகிய சபைக்கு ஆயத்தமாக ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆகவே, அது மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானம் என்றழைக்கப்பட்டது (லூக்கா 3:3). எபேசுவில் பவுல் யோவானின் ஞானஸ்நானம் பெற்ற சிலரைக் கண்டார். ஆனால், அவர்கள் பரிசுத்த ஆவி பற்றி கேள்விப்படவேயில்லை என்று அறிந்தவுடன், யோவானின் ஞானஸ்நானத்தின் நோக்கம் பற்றி அவர்களுக்குப் போதிக்கும் போது இப்படியாகச் சொன்னார். "*யோவான் தனக்குப் பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்*" (அப்போஸ்தலர் 19:4,5). யோவானின் ஞானஸ்நானம் காலவரம் பில்லாமல் எப்பொழுதும் இருக்கவேண்டுமென்ற நோக்கில் திட்ட மிடப்பட்டதல்ல. அதற்கான நோக்கம் நிறைவேறியவுடன் அது முடிந்து போய்விட்டது.

மத்தேயு 3:11,12 வசனங்களில், யோவான் ஸ்நானகன், இயேசு கொடுக்கப்போகிற இரண்டு ஞானஸ்நானங்கள் பற்றி பேசுகிறார்; "*மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ் நானங் கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிற தற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினி யினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்*" என்றான். இங்கே

யோவான், ஒரு அறுவடை செய்பவரை படம்பிடித்துக்காட்டி, கிறிஸ்து ஜனங்களை எப்படி நடத்துவார் என்று விளக்குகிறார். அந்த நாட்களில் வாழ்ந்த ஜனங்கள் கோதுமை அறுவடையைப் பற்றி நன்றாக அறிந்திருந்தார்கள். கோதுமை நன்றாக போரடிக்கப் பட்டு பின்பு, காற்று அல்லது தூற்றுக்கூடையின் உதவியினால் கோதுமையும், பதரும் தனித்தனியே பிரிக்கப்படும். கோதுமை சேகரிக்கப்பட்டு உணவுக்காக பாதுகாக்கப்படும்; ஆனால், பதர் அல்லது பயனற்றது சுட்டெரிக்கப்படும். அதேவிதமாக யோவான் சொல்லும்போது, கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொன்னார். பின்பு, கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களிடத்தில், தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார் (யோவான் 15:26; யோவான் 16:7,13). அப்போஸ்தலர் 1:8-ல், மறுபடியும் இயேசு பரிசுத்த ஆவியானவரை அவர்களிடத்தில் அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார். லூக்கா 24:49 -யும் வாசியுங்கள். அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி, கிறிஸ்து போதித்தவைகளையெல்லாம் அவர்களுக்கு நினைவூட்டினார். அத்தோடு அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷை களில் பேசவும், அற்புத அடையாளங்கள் செய்யவும் வல்லமை கொடுத்தார். அப்போஸ்தலர்கள் மூலமாக எல்லோருமே ஆசீர் வதிக்கப்படுவார்கள். ஆனால், யோவான் சொல்லும்போது கிறிஸ்து அக்கினியாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொல்கிறார். இது எதைக் குறிக்கிறது? சேகரிக்கப்பட்ட கோதுமை நீதிமான்களை குறிக்குமானால், சுட்டெரிக்கப்பட்ட பதர் துன் மார்க்கரைக் குறிக்கும். கிறிஸ்து அப்போஸ்தலர்களை பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானப் படுத்துவார், ஆனால் துன்மார்க்கரை அக்கினியால் ஞானஸ்நானப்படுத்துவார். ஞானஸ்நானம் என்பது மூழ்குதல் என நாம் புரிந்து கொள்ளும்போது, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினாலே மூழ்கடிக்கப்பட்டார்கள் அல்லது மூடப் பட்டார்கள். கிறிஸ்து அக்கினியால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்பது, துன்மார்க்கர் அக்கினியிலே மூழ்கடிக்கப்படுவார்கள் என்று பொருள். துன்மார்க்கர் அப்படியாக நடத்தப்படுவார்கள் என்பது பற்றி வேதவாக்கியங்களில் நாம் எங்கே வாசிக்கிறோம்? முதலாவது, கிறிஸ்து ஒருநாளில் இந்த உலகத்தை நியாயந்

தீர்ப்பார். அப்பொழுது துன்மார்க்கர் நரகத்தில் தள்ளப்படுவார்கள் (IIபேதுரு 2:4) அவர்கள் நித்திய ஆக்கினையை அடையும்படி போவார்கள் (மத்தேயு 25:46) என்று வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியும், நரகம் அக்கினிக்கடலாக விவரிக்கப்பட்டிருக்கிறது (IIபேதுரு 3:7; யூதா 7; வெளி 20; 10,14; 21:8). அதன் பொருள், துன்மார்க்கர், தேவபக்தியற்றவர்கள், இழந்து போனவர்கள் அக்கினிக்கடலில் மூழ்கடிக்கப் படுவார்கள் அல்லது ஞானஸ்நானப்படுத்தப்படுவார்கள். நிச்சயமாகவே, யாரும் ஒரு சரியான மனநிலையோடு அக்கினி ஞானஸ்நானத்தைப் பெற விரும்பமாட்டார்கள்.

I கொரிந்தியர் 10:1-4 வசனங்களில் பவுல் இப்படி எழுதுகிறார் *" இப்படியிருக்க, சகோதரரே நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள்; எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள்; எப்படியெனில் அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக்கன்மலை கிறிஸ்துவே "*. அந்நாட்களில் இது ஞானஸ்நானமாகக் கருதப்படவேண்டிய அவசியமில்லாவிட்டாலும், பவுல் இஸ்ரவேல் ஜனங்கள் சமுத்திரத்தின் வழியாய் இருபுறமும் தண்ணீரால் சூழப்பட்ட நிலையில் மேகத்துக்குக் கீழாயிருந்ததை எண்ணிப் பார்த்து பவுல் இதை ஞானஸ்நானம் என்று விவரிக்கிறார். வேறுவிதமாகச் சொன்னால், அவர்கள் மேகத்துக்குள்ளாகவும், கடலுக்குள்ளாகவும் மூழ்கடிக்கப்பட்டிருந்தார்கள் அல்லது அடக்கம் பண்ணப்பட்டிருந்தார்கள்.

செபெதேயுவின் குமாரருடைய தாய் இயேசுவின் ராஜ்ஜியத்தில் தன்னுடைய இரண்டு குமாரர்கள் ஒருவன் இயேசுவின் வலது பாரிசத்திலும், மற்றவன் இடது பாரிசத்திலும் உட்கார வேண்டினபோது, *" இயேசு அவருக்கு பிரதியுத்திரமாக; நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னதென்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார்.*

அதற்கு அவர்கள் கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி; என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள் நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும் என் வலது பாரிசத்திலும், என் இடது பாரிசத்திலும், என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் அவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல் மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்". (மத்தேயு 20:22,23). மறுபடியும் கிறிஸ்து சொல்லும் போது, " ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானமுண்டு என்று சொன்னார் " (லூக்கா 12:50). இங்கே இயேசு பேசுகிற ஞானஸ்நானம் சிலுவைப் பாடுகள் பற்றியது. அதாவது, பாடுகளில் மூழ்குகின்ற ஒரு அனுபவத்தைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட பாடுகளை இயேசு ஒரே ஒரு முறை கடந்து போனார்.

கடைசியாக, வசனங்கள் விசுவாசிகளுடைய ஞானஸ்நானம் பற்றி பேசுகிறது. இந்த ஞானஸ்நானம் தண்ணீர் ஞானஸ்நானம் (அப்போஸ்தலர் 8:26-39) இது ஓர் அடக்கம். (கொலோசெயர் 2:12; ரோமர் 6:3,4,) இது பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானம் (அப்போஸ்தலர் 2:38), இது பாவங்கள் கழுவப்படுவதற்கான ஞானஸ்நானம் (அப்போஸ்தலர் 22:16). இது இரட்சிக்கப்படுவதற்கான ஞானஸ்நானம் (1பேதுரு 3:21), இது ஒருவரை கிறிஸ்துவுக்குள் வரச் செய்கிறது (கலாத்தியர் 3:26,27). இது ஒருவரை சபைக்குள் வரச் செய்கிறது (1கொரிந்தியர் 12:13). இது கிறிஸ்துவின் நாமத்தினாலே பெறப்படவேண்டும் (அப்போஸ்தலர் 2:38). அதாவது, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே பெறப்படவேண்டும் (மத்தேயு 28:19,20). கிறிஸ்து இப்படிச் சொன்னார் " பின்பு அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங் கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 10:15,16).

எபேசியர் 4:4-6 வசனங்களுக்கு நாம் திரும்பும் போது, அங்கே பவுல் ஒரே ஒரு ஞானஸ்நானம் என்று சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். இந்த வார்த்தைகளை அவர் சொன்ன போது, தோராயமாக கி.பி. 64 ஆம் வருடம். ஆனால், வேத

வாக்கியங்களில் நாம் வாசிக்கின்ற ஞானஸ்நானங்களில் எந்த ஞானஸ்நானம் ஒரே ஞானஸ்நானம்? அதைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு நல்ல வழி உண்டு. அதாவது, எப்பொழுதெல்லாம் ஒரு ஞானஸ்நானம் விசுவாசியின் ஞானஸ்நானமாக அல்லது தண்ணீர் ஞானஸ்நானமாக இல்லை யோ அப்பொழுதெல்லாம் அது வேறு என்ன ஞானஸ்நானம் என்று சொல்லப்பட்டிருக்கும்? இதையே வேறு விதமாகச் சொன்னால், வேத வாக்கியங்கள் அப்படிப் பட்டவைகளைப் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், அக்கினி ஞானஸ்நானம், யோவானின் ஞானஸ்நானம், பாடுகளின் ஞானஸ் நானம், மேகத்தின் ஞானஸ்நானம், சமுத்திரத்தின் ஞானஸ்நானம் எனப் பேசுகிறது. எனவே எபேசியர் 4:4-6 வசனங்களில், ஒரே ஞானஸ்நானம் என நாம் வாசிக்கும் போது, இது விசுவாசிகளின் ஞானஸ்நானத்தைத் தான் குறிக்கிறது என்று நாம் முடிவுக்கு வந்து விடலாம்.


நம்முடைய நாட்களில் வாழும் மக்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நமக்கும் இருக்கிறது என்று பேசக் கேட்கிறோம், ஆனால், இந்த ஞானஸ்நானம் கிறிஸ்துவால் அப்போஸ்தலர் களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. அதை அவர்களுக்கு கொடுத்ததும் கிறிஸ்துவே. எனவே, இந்த ஞானஸ்நானம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டது; இன்று யாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுவதில்லை. தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றி போதிக்கிற வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு விசுவாசி இரட்சிக்கப்பட்டு, தான் இரட்சிக்கப்பட் டதை காட்டுவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொல் கிறார்கள். அப்படி அவர்கள் சொல்வது சரியானால், ஒருவர் கிறிஸ்துவுக்கு வெளியே, அவருடைய சபைக்கு வெளியே இரட்சிக் கப்படுகிறார் என்று பொருள்படும். ஆனால், வேத வசனம் ஒருவர் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்க, அவருடைய சபைக்குள் பிரவேசிக்க ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றே சொல்கிறது (கலாத்தியர் 3:26,27, I கொரிந்தியர் 12:13). இந்தக் காரியத்தில் இந்த மக்கள் தவறு செய்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். கர்த்தருக்குக் கீழ்ப்படியும் வரை ஒருவர் இரட்சிக்கப்பட முடியாது. அந்த இரட்சிப்பின் ஒரு பகுதி தான் முழுக்கு ஞானஸ்நானம்.

தெளிப்பு மற்றும் ஊற்றுதல் ஞானஸ்நானங்கள் தேவனு

டைய வார்த்தையின் போதனையிலிருந்து ஒருவன் எவ்வளவு தூரம் விலகிச் செல்ல முடியும் என்பதற்கு அடையாளமாக உள்ளது. தலையில் தண்ணீரை ஊற்றுவது, தெளிப்பது போன்ற வைகளை ஒரு போதும் ஞானஸ்நானம் என்று சொல்ல முடியாது. ஞானஸ் நானம் என்பது ஓர் அடக்கம், ஒரு மூழ்குதல். தெளித்தல் என்பது வெறுமனே தெளித்தல் தான். அதுபோல, ஊற்றுதல் என்பதும் வெறுமனே ஊற்றுதல் தான். அவைகள் ஞானஸ்நானம் ஆகாது. இப்படிப்பட்ட பழக்கங்கள் மனிதனுடைய கண்டு பிடிப்புகள்.

இங்கே கேள்வி இது தான்; வேதாகமத்தின் ஒரே ஞானஸ் நானத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டு விட்டீர்களா? ஏற்றுக் கொள்ள வில்லையென்றால் நீங்கள் அப்படிச் செய்ய வேண்டும். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை நீங்கள் முழுமையாக வாசித்தால் கர்த்தருக்கு கீழ்ப்படிந்த எல்லோருமே கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டார்கள், தேவனையும், கிறிஸ்துவையும் விசுவாசித்தார்கள், பாவங்களிலிருந்து மனந்திரும் பினார்கள், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தார்கள், தங்கள் பாவமன்னிப்புக்காக முழ்கி ஞானஸ்நானம் பெற்றார்கள். அதன் பின்பு கர்த்தர் அவர்களை இரட்சித்து தம் முடைய சபையிலே சேர்த்துக் கொண்டார் (அப்போஸ்தலர் 2:38,41,47). அவர்கள் செய்ததை நீங்கள் செய்தால், கர்த்தர் உங்களை யும் இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார்.

நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், அல்லது ஞானஸ் நானம் பெற்றிருப்பதாக நினைத்தால், ஒருவேளை அது தெளிப்பு அல்லது ஊற்றுதல் ஞானஸ்நானமாக இருந்து, அது சரியான நோக்கத்திற்காக பெறப்படாமலிருந்தால், வேத வசனங்களின்படி நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டும். ஆனால், இது இரண் டாவது ஞானஸ்நானமாகி விடும் என்று நீங்கள் சொல்லலாம். அப்படியில்லை, ஒரே ஒரு ஞானஸ்நானம் தான், நீங்கள் கர்த்த ருடைய உபதேசத்தின்படி ஞானஸ்நானம் பெறாதிருந்தால் நீங்கள் ஒருபோதும் ஞானஸ்நானம் பெறவில்லை. வேத வாக்கியங் களின்படி நீங்கள் ஞானஸ்நானம் பெற்றால் தான், வேதாகமத் தின்படியான ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்று விட்டதாக உங்க ளால் சொல்ல முடியும்.



## பாடம் - 5

# ஏன் நாங்கள் மனச்சாட்சியை ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக ஏற்றுக்கொள்வதில்லை

மனச்சாட்சி என்கிற வார்த்தை ஒரு மனிதனுடைய இருதயம், மனது மற்றும் ஆத்துமாவோடு சம்மந்தப்பட்டது. இதன் பொருள், ஒருவர் தான் சேகரித்த ஒரு குறிப்பிட்ட அளவு தகவலையும், அறிவையும், வேறொன்றோடு ஒப்பிட்டுப் பார்த்து, அது சரியா, தவறா என்று தீர்மானிக்கப் பயன்படுத்துவது. இது தான் மனச்சாட்சி. அந்தத் தகவல் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம் அல்லது பொய்யான அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டதாகவும் இருக்கலாம். அது உண்மையாக இருந்தாலும் சரி, பொய்யாக இருந்தாலும் சரி, ஒருவேளை அது உண்மையென ஏற்றுக்கொள்ளப்பட்டு, பின்பு அது ஒரு வழிகாட்டியாக பயன்படுத்தப்படும். மனச்சாட்சியானது ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்க முடியும் என உணர்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். மற்றவர்கள், ஓர் நல்மனச்சாட்சியைப் பெற்றருப்பதைக் குறித்துப் பேசுகிறார்கள். மேலும், அவர்களுக்கு நல் மனச்சாட்சி இருப்பதால் தாங்கள் சரியாக இருப்பதாக உணர்கிறார்கள். இருப்பினும், தான் நல்மனச்சாட்சியைப் பெற்றிருப்பதாக ஒருவர் எண்ணி, தான் சத்தியத்தைப் பெற்றுக் கொண்டதாக நினைத்துக் கொண்டு வஞ்சிக்கப்பட வாய்ப்புண்டு. அப்படியென்றால், அவருடைய நல்மனச்சாட்சியானது உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக இல்லாமல், தவறை அடிப்படையாகக் கொண்டதாகிறது. எனவே, ஒருவர் ஒன்று சரியா, தவறா என்பதைத் தீர்மானிக்க, இறுதி அதிகாரமாக இருக்க மனச்சாட்சியை வழிகாட்டியாக அனுமதிக்க முடியாது.

இந்த மனச்சாட்சி மேலும் எப்படி வேலை செய்கிறது என்பதை உதாரணத்துடன் விளக்க, ஒரு சிறு பிள்ளையை

நினைத்துக் கொள்ளுங்கள். அந்த குழந்தை திருடுவது தவறு அல்லது தன்னுடையதல்லாத ஒன்றை மற்றவர்களிடமிருந்து எடுத்துக் கொள்வது தவறு என பெற்றோர்களால் போதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி அந்த குழந்தை தன்னுடைய பெற்றோர்களோடு இருக்கும் நாட்கள் வரை தொடர்ந்து போதிக்கப்படுகிறது. இதுவும், மற்ற நேர்மையுள்ள ஜனங்களின் போதனையும் ஒத்துப் போவதாலும், சட்டமும் இதையே சொல்வதாலும் குழந்தை வளரும் போது இது சரிதான் என்று ஒத்துக்கொள்கிறது. ஆனால், ஒருவேளை அந்தக் குழந்தை தன்னுடைய நண்பனுடைய வீட்டில் ஒன்றைப் பார்த்து, அதை வைத்துக் கொள்ள விரும்பி, தன்னுடையதல்லாத ஒன்றை வைத்துக் கொள்ளும்படியாக சோதிக்கப்பட்டு அதை எடுத்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இப்போது அந்தக் குழந்தை தனக்கு போதிக்கப்பட்டவைகளுக்கு விரோதமாக போய்க் கொண்டிருக்கிறது, அந்தக் குழந்தையின் மனச்சாட்சி உருத்தினபடியால், நான் திருடின அந்தப் பொருளை திரும்பிக் கொடுக்க உந்தப்படுகிறான். இதே விதமாக, யாருக்கெல்லாம் ஒன்று தவறாகப்போதிக்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கும் இக்கருத்து பொருந்துகிறதாகவே இருக்கமுடியும். ஒரு வேளை ஒன்று தவறாக இருந்தாலும் அல்லது பொய்யாக இருந்தாலும் அது உண்மை என போதிக்கப்பட்டு, உண்மை என ஏற்றுக் கொள்ளப்படுமானால் தனக்கு உண்மையென போதிக்கப்பட்டதற்கு விரோதமாக ஒன்று நடக்கும்போது அவருடைய மனச்சாட்சி அவரை உறுத்துகிறதாக இருக்கும்.

ஒருவருடைய மனச்சாட்சி நம்பத்தகுந்ததாக இருக்க வேண்டுமானால் அது உண்மையை அடிப்படையாக கொண்டதாக இருக்க வேண்டும். வேறு விதமாகச் சொன்னால், உண்மை அல்லது சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையில் மனச்சாட்சி ஆளுகை செய்யப்பட வேண்டும். ஒருவருடைய மனச்சாட்சி தவறை அடிப்படையாக வைத்து இருக்குமானால், அது ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்க முடியாது.

நாம் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்பும் போது, நாம் என்ன பேசிக்கொண்டிருக்கிறோமோ அதற்கு ஓர் நல்ல உதாரணம் சவுல்தான். முதலாவதாக சவுல், ஒரு யூதன் என்பதை நினைவில்

கொள்ள வேண்டும். அவர் யூதமார்க்கத்தைப் பின்பற்றினவர். அவர் தன்னுடைய மார்க்கத்தைக் குறித்து பக்தி வைராக்கியமுள்ளவரா யிருந்தார். அந்த மார்க்கத்திற்கு கிறிஸ்தவம் எதிரியாக இருந்தது என அவர் நினைத்தார். அதன் விளைவாக, கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தும்படி புறப்பட்டுச் சென்றார். அவரைப் பற்றி நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். " சவுல் வீடுகள் தோறும் நுழைந்து, புருஷரையும், ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான் " (அப்போஸ்தலர் 8:3) தொடர்ந்து, நாம் இப்படி வாசிக்கிறோம். "சவுல் என்பவன் இன்னும் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களை கேட்டு வாங்கினான் "(அப்போஸ்தலர் 9:12).

இச்சம்பவத்தை நாம் தொடர்ந்து வாசிக்கையில் சவுலும், அவனுடைய கூட்டாளிகளும் தமஸ்குவுக்கு சென்று கொண்டிருக் கும் போது கர்த்தர் அங்கே தரிசனமானார், "அப்போது சவுல் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்; ஆண்டவரே, நீர் யார் என்றான். அதற்குக் கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார் " (அப்போஸ்தலர் 9:4-6). சொல்லப்பட் டிருக்கும் காரியங்களை நாம் தொடர்ந்து படிக்கும்போது, அனனியா என்னும் பேர்கொண்ட ஒரு சுவிசேஷப் பிரசங்கியார் சவுலினிடத்தில் வந்து, " நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்றான் (அப்போஸ் தலர் 22:16). இப்போது பவுல் என்ன செய்தார்? கிறிஸ்துவில் விசுவாசியாகி தன்னுடைய பாவங் களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை ஆண்டவரென்று ஒத்துக்

கொண்டு ஞானஸ்நானம் பெற்றான். இதைச் செய்து விட்டு, தாமத மின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான் (அப்போஸ்தலர் 9:20)

இப்போது இந்த மனுஷனைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். இவர் உண்மையுள்ள மற்றும் யூத மார்க்கத்தில் பக்திவைராக்கியம் உள்ள ஒருவராகக் காணப்பட்டார். இவர் ஆண்களையும், பெண் களையும் துன்பப்படுத்தும் அளவுக்கு கிறிஸ்தவத்திற்கு எதிரான வராக இருந்தார். ஆனால், திடீரென இயேசுவை விசுவாசிக்கிற வராகி கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று பிரசங்கித்தான். அது மட்டுமல்ல, அவர் தன்னு டைய வாழ்க்கை முழுவதையும் கர்த்தருக்கு சேவை செய்வதிலும், கர்த்தருடைய காரியத்தை உலகெங்கிலும் பரப்புவதிலும் செல விட்டார்.

ஆனால், அவர் கிறிஸ்வதனாவதற்கு முன்பு உருண்டோடிய அந்த வருடங்கள் எப்படி? தான் செய்தவைகளில் அவர் உண்மை யாகவும், நேர்மையாகவும் இருந்தாரா? அவைகள் எல்லாவற்றை யும் தான் ஏன் செய்தேன் என்பதற்கு அவரே கூறுவதைக் கேளுங்கள். " *முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத் திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டு மென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந் தேன், சகல ஜெப ஆலயங்களிலும், நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன் ; அவர்கள் பேரில் மூர்க்கவெறி கொண்டவனாய் அந்நிய பட்ட ணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்* " (அப் போஸ்தலர் 26:9-11).

இவைகளெல்லாம், சவுல் சபையை துன்பப்படுத்திய நாட் களில் நல்மனச் சாட்சியோடு தான் அவைகளைச் செய்திருக்கிறார் என்றே சொல்கின்றது. அவர் தான் செய்தவைகளில் உண்மை யாவும், நேர்மையாகவும் இருந்திருக்கிறார். அவர், தான் செய்தவைகளைப் பற்றி நன்றாகவே உணர்ந்திருக்கிறார் என்பதில்

எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், உண்மை என்னவென்றால், அவருடைய மனச்சாட்சி, இவர் தேவன் என்ன செய்ய விரும்பி னாரோ அதன்படி செயல்படாமல் அவர் எதைச் சரி என தன் மனதில் எண்ணினாரோ அதனடிப்படையில் செயல்பட்டது. ஆனால், இவர் சத்தியத்தைக் கற்றுக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிந்த பிறகே இவர் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

சவுலின் மனமாற்றத்திற்குப் பிறகு இவர் பெயர் பவுல் என மாற்றப்பட்டது. சில காலத்திற்கு பிறகு, அவர் இப்படி எழுதினார் *" என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும் நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன். நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும், அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான். அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர் களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவி யாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமை யையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன். நித்தியமும், அழிவில் லாமையும், அதரிசனமுமுள்ள ராஜனுமாய் தாம் ஒருவரே ஞான முள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு கனமும், மகிமையும் சதாகா லங்களிலும் உண்டாயிருப்பதாக, ஆமென்"* (1தீமோத்தேயு 1:12-17).

மேற்சொல்லப்பட்டுள்ள வசனப்பகுதியில் பவுல் எல்லா விஷயங்களிலும் தான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்ததை நினைவுப்படுத்துகிறார் (அப்போஸ்தலர் 23:1). ஆயினும், பவுல் தன்னுடைய முந்தைய வருடங்களை தேவனோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து வோடும் போர்செய்கிறவராய்ச் செலவிட்டதோடு, சபையைத்

துன்பப்படுத்துவதிலும் செலவிட்டுள்ளார். அதன் பின்பு சத்தியத்தைக் கற்றுக் கொண்டு, தானாகவே கிறிஸ்தவனாவதற்கு தேவனுக்கு கீழ்ப்படிந்த பிறகு, பாவிகளில் பிரதான பாவியாகிய தானே இரட்சிக்கப்பட முடியுமானால் தேவனுடைய இரக்கமும் கிருபையும் எவ்வளவு பெரியது என்பதை உணர்ந்து பார்த்தார். அவர் ஒருபோதும் தன்னுடைய கடந்த காலத்தை மறக்கவில்லை. ஆனால், அதை முன்னானவைகளை நோக்கி கடந்து செல்வதற்கு ஒரு ஊக்கியாக இருக்க அனுமதித்து, கடந்த காலத்தில் நடந்தவைகளை ஈடுகாட்டுவதற்கு தன்னால் முடிந்த வரை எல்லா வற்றையும் செய்தார். அது மட்டுமல்ல, கிறிஸ்துவின் நாமத்தை பறைசாற்றுவதற்கு தன் வாழ்நாள் முழுவதையும் கொடுத்தார்.

என் நண்பர்களே, தேவன் நல்மனசாட்சியை மட்டும் ஒருவரிடம் எதிர்பார்த்தால், அதன் பொருட்டு எல்லா மதங்களிலுமுள்ள ஜனங்களும் நல்மனச்சாட்சி உடையவர்களாயிருந்தால் அவர்களும் இரட்சிக்கப்பட முடியும் என்றாகிவிடும். அப்படியென்றால், எல்லா சபைகளின் எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்படுவார்கள். ஜனங்கள் தேவனை விசுவாசித்தாலும், விசுவாசிக்காவிட்டாலும் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று பொருள்படும். மேலும், ஒருவர் தன் நல்லொழுக்க வாழ்க்கை அல்லது நற்கிரியைகளின் அடிப்படையில் இரட்சிக்கப்பட முடியும் என்றும் பொருள்படும். இது ஒருவர் கிறிஸ்தவனாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒருவர் தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று பொருள்பட்டு விடும். எல்லா ஜனங்களுக்கும் தங்கள் எண்ணங்கள் செயல்பாடுகள், மதங்கள் போன்றவைகளை கடைசியாக நியாயப்படுத்தும் மனப்பான்மை உண்டு. அவர்கள் மனசாட்சியில் சூடுண்டவர்களைப் போலாகலாம் அல்லது தங்களுடைய மனச்சாட்சி அவர்களை உறுத்தும் வரை தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாகப் போகலாம் (I தீமோத்தேயு *4:1-5*). இது இறுதியில் நல்மனச்சாட்சியைக் கொண்டு வரும்.

அப்படியானால், நல்மனச்சாட்சி மட்டுமே இதற்குப் பதில் அல்ல. வெறுமனே நல்மனச்சாட்சி ஒருவருடைய இரட்சிப்புக்கு

எந்த உத்திரவாதமும் கொடுக்காது. ஒருவர் தன்னுடைய மனச்சாட்சி தேவனுடைய சித்தத்தின் அறிவை ஆதாரமாகப் பெற்றிருக்கும் போது தான், அது சரியாக இருப்பதாக நம்ப முடியும். அப்போது ஒருவருடைய எண்ணங்கள், செயல்பாடுகள், ஏன், அவர்கள் வாழ்க்கையே தேவனுடைய வார்த்தையால் ஆளுகை செய்யப்படும். மனச்சாட்சி தேவனுடைய வார்த்தையால் வழிநடத்தப் படும்போது மட்டுமே அது ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்க முடியும். வேறுவிதமாகச் சொன்னால், ஒருவர் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதை விசுவாசிக்கும் போது தான், அவர் தேவனுடைய போதனைக்கு விரோதமாகச் செல்லும்போது அல்லது தேவனுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு வாழாதபோது ஒருவருடைய மனச்சாட்சி குத்தும். அப்போது தான் அவருடைய மனச்சாட்சி உயிருள்ளதாகவும், சிறந்ததாகவும் இருக்க முடியும்.


வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டது. இது உண்மையானதாயும், சரியானதாயும் இருக்கிறது. தேவ ஆவியினால் அருளப்பட்ட வேதாகமத்தின்படி நாம் வாழ்ந்தால் தான் நாம் சரியாக இருக்கிறோம் என்று பொருள். ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கும் போது, அதாவது, ஆவியின் வார்த்தைகள் நாம் கர்த்தருடைய போதனைகளை அனுசரித்திருக்கிறோம் என்று ஒத்துக் கொள்ளும்போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்பதை அறிந்து கொள்வோம்.

*" நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார் "* (ரோமர் 8:16). மாறாக, ஆவியின் வார்த்தை ஒரு காரியத்தைச் சொல்லி அல்லது தேவனுடைய வார்த்தை குறிப்பிட்ட காரியங்களைப் போதித்து, நாம் அதற்குக் கீழ்ப்படியத் தவறினால் அல்லது கர்த்தருடைய எதிர்பார்ப்புக்கேற்ப நாம் வாழவில்லையென்றால், ஆவியானவர் தம்முடைய வார்த்தை மூலமாக நாம் கர்த்தருடைய பிள்ளைகளல்ல என்று அறிவிக்கிறார் அல்லது கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறபடி அவருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறோம் என்று பொருள்.

அதன் பொருள், நல்ல உணர்வுகளை, நல் மனச்சாட்சியைப்

பெற்றிருப்பது மாத்திரம் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் அல்லது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்பதற்கு அத்தாட்சி அல்ல. தேவன் தம்முடைய வார்த்தையில் விவரித் திருக்கிற வழி அல்லாமல் வேறு வழியில் இரட்சிக்கப்பட முடியும் என நினைத்து ஏமாந்து விட வேண்டாம். நிச்சயமாகவே, நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதற்கு நாம் கீழ்ப்படியத் தவறினால், நம்முடைய மனச்சாட்சி உயிருள்ளதாக இருந்தால், தேவன் சொன்னவைகள் நமக்கு முக்கியமானதாக இருந்தால், நம் மனச்சாட்சி நம்மைக் குத்தும், அது அப்படிச் செய்ய வேண்டும். இது, நாம் தேவனோடு காரியங்களை சரிச் செய்ய வேண்டும் என்று நல்ல நினைப்பூட்டுதலாக இருக்கும். நாம் அதைச் செய்யும் போது, நாம் தேவனுடைய சித்தத்தின்படி செய்திருக்கிறோம் என நாம் அறிவோம். இது நல்ல உணர்வுகளை, நல்மனச்சாட்சியை உண்டாக்குகிறது; இதனடிப்படையில் மட்டுமே, நாம் தேவனு டைய சித்தத்தை அறிந்து அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம் என்று அறிகிறோம். இக்காரியத்தில் மட்டுமே நமக்கு நல்மனச் சாட்சி இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் சந்தோஷமுள் ளவர்களாக இருக்க முடியும்.

உங்களுக்கு நல்மனச்சாட்சி இருக்கிறதா? உங்களுக்கு தேவனுடைய சித்தம் என்னவென்று தெரியுமா? அவருடைய சித்தத்திற்கு நீங்கள் கீழ்ப்படிந்து விட்டீர்களா? இல்லையானால் உங்கள் மனச்சாட்சி உங்களைக் குத்த வேண்டும்; நீங்கள் கர்த்த ருக்குக் கீழ்ப்படியும் வரை அது தொடர்ந்து உங்களைக் குத்த வேண்டும். நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங் களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, உங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெறும்போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய பிள்ளையாக்கி, அவருடைய குடும்பமாகிய சபையில் அங்கத் தினராக்குவார் (*மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38; கலாத்தியர் 3:26, 27; அப்போஸ்தலர் 2:47*). இதை நீங்கள் செய்தால் உங்களால் நல்மனச் சாட்சியைப் பெற்றுக் கொள்ளமுடியும். அப்படிப் பெற்றுக் கொள்ளும் போது உங்களுக்காக கர்த்தருடைய சித்தம் இது தான் என்றும், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து விட்டீர்கள் என்றும், அவர் உங்களை இரட்சித்திருக்கிறார் என்றும் நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.



## பாடம் - 6

# ஏன் நாங்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறோம்?

கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் பற்றி வேத வசனங்கள் நிறைய இடங்களில் பேசுகிறது. அவைகளில் சில வற்றை நாம் கவனிப்போம். முன்பொரு காலத்தில் யோவேல் இப்படியாக தீர்க்கதரிசனம் உரைத்தார், *"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப் பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கத ரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். மேலும் ஊழியக்காரர், ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். வானத்திலும் பூமியிலும் இரத்தம் அக்கினி புகைஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன். கர்த்தரு டைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளா கவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட் சிக்கப்படுவான்; கர்த்தர் சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும், எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத் திலும் இரட்சிப்பு உண்டாயியிருக்கும் "* (யோவேல் 2:28-31).

*பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள் மேல் ஊற்றப்பட்ட பிறகு, அவர்கள் பற்பல மொழிகளில் பேசத் தொடங்கினார்கள்; அங்கே கூடியிருந்தவர்கள் அப்போஸ்தலர்களால் எப்படி இப்படிப் பேச முடிகிறது என்று சொல்லி வித்தியாசமான முடிவுகளுக்கு வந் தார்கள். சிலர் அப்போஸ்தலர்கள் மதுபானத்தினால் நிறைந்திருந் ததாக எண்ணினார்கள். அதன் பின்பு நாம் இப்படி வாசிக்கிறோம். "அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங் கூட நின்று, அவர் களை நோக்கி, உரத்த சத்தமாய்; யூதர்களே, எருசலேமில் வாசம்*

*பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர்கள் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்; என்னுடைய ஊழியக்காரர்மேலும் என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும், தாழபூமியிலே இரத்தம், அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும், பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார் (அப்போஸ்தலர் 2:14-21) என்று.*

வெகு காலத்துக்கு முன்பு யோவேல் உரைத்த தீர்க்கதரிசனம் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேம் பட்டணத்தில் நிறைவேறியதில் கிறிஸ்துவின் மரணம், பரிசுத்தஆவி ஊற்றப்படுதல், இரட்சிப்பின் வருகை ஆகிய இவைகள் சம்பந்தப்பட்டுள்ளதென்பது வெளிப்படையாக உள்ளது. இவைகள் எல்லாம் கடைசி நாட்களில், கிறிஸ்துவின் மரணத்தைத் தொடர்ந்து வந்த அந்த நாட்களில் நிறைவேறியது. எபிரெய எழுத்தாளர் கடைசி நாட்களில் தேவன், தம்முடைய குமாரன் மூலமாக திருவுளம் பற்றுவார் என்று சொன்னார் (எபிரெயர் 1:1,2), அந்த ஆதிநாட்களில் கிறிஸ்து அப்போஸ்தலர்கள் மூலமாக திருவுளம் பற்றினார், அதன் பின்பு கிறிஸ்து புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தம்முடைய வார்த்தைகள் மூலமாக நம்மிடம் பேசிக் கொண்டிருக்கிறார். பவுல் தான் பிரசங்கித்தவைகளைப் பற்றிச் சொல்லும் போது, "நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றது

மில்லை, இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார் " (கலாத்தியர் 1:12) என்கிறார். யோவான் பார்த்தவைகளைக் குறித் தும், இயேசு கிறிஸ்துவின் சாட்சியைக் குறித்தும் அவர் சொல்லும் போது, " இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள் ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது ", (வெளி. 1:3).

அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவி அப்போஸ்தலர்கள் மேல் ஊற்றப்பட்ட பிறகு அவர்கள் கிறிஸ் துவின் வருகையைக் குறித்தும், தாம் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை நிரூபிப்பதற்காக இயேசு செய்த அற்புதங்கள் பற்றியும் அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் பற்றியும் அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து கர்த்தாதி கர்த்தா வாகவும், ராஜாதி ராஜாவாகவும் ஆட்சி செய்வதற்கு பிதாவினி டத்தில் திரும்பிப் போவது குறித்தும் பிரசங்கித்தார்கள். இவை களைக் கேட்டு ஏறக்குறைய மூவாயிரம் பேர் தங்கள் இருதயங் களில் குத்தப்பட்டு தாங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண் டும் என அறிய விரும்பின போது, இப்படியாக அவர்களுக்குப் பதிலளிக்கப்பட்டது. " பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந் திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங் கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி; இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் " (அப்போஸ்தலர் 2:38-42).

இப்போது, இங்கே அநேக காரியங்கள் நாம் கவனிப்போம். முதலாவது, பேதுரு, கர்த்தர் ஜனங்களை அழைப்பது பற்றி குறிப்பிட்டிருக்கிறார். இதை கர்த்தர் எப்படி செய்கிறார்? தெசலோனிக்கேயா பட்டணத்திலிருக்கிற கிறிஸ்தவர்கள் பற்றி இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. " *நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்*" என்று (IIதெசலோனிக்கேயர் 2:14). இதையே வேறு விதமாகச் சொன்னால், பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தினாலே அவர்கள் அழைப்பட்டிருந்தார்கள். அது என்ன சுவிசேஷம்? ரோமர் 10:15 -ல், அது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் பற்றிய நற்செய்தியாயிருந்தது. மேலும், இரட்சிப்பு கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலினால் சாத்தியமானது (I கொரிந் தியர் 15:1-4). அது போலவே, ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமானால் நற்செய்தியின் நிபந்தனைகளுக்கு உட்படவேண்டும். அடுத்ததாக, அந்த நிபந்தனைகள் முதலில் ஒருவர் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும், ஒருவர் தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும், கடைசியாக, ஒருவர் தன் பாவங்களிலிருந்து மன்னிப்புப்பெற ஞானஸ்நானம் பெறவேண்டுமென்ற நிபந்தனை இருந்தது. இவைகள் எல்லாமே அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இரண்டாம் அதிகாரத்தில் பிரசங்கம் செய்யப்பட்டிருக்கிறது; அதாவது, அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பிரசங்கித்திருக்கிறார்கள். ஏறக்குறைய மூவாயிரம் பேர் விசுவாசிகளாகி இரட்சிக்கப்பட வேறு ஏதாவது செய்யவேண்டுமா என அறிய விரும்பினார்கள். அவர்கள் விசுவாசிகளாக தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவமன்னிப்புப் பெற ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. சுவிசேஷ பிரசங்கத்தின் மூலமாக கர்த்தர் தமக்குக் கீழ்ப்படியும்படி அழைப்பு விடுத்திருந் தார். ஏற்கனவே, குறிப்பிட்டபடி ஏறக்குறைய மூவாயிரம் பேர் அந்த அழைப்புக்கு பதிலளித்து கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள், அங்கே கர்த்தர் தன்னுடைய பங்காக அவர்களை இரட்சித்துத் தம்முடைய சபையிலே சேர்த்தார்.

இரண்டாவது, ஒருநாள் வரும் அதில் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று யோவேலினால் தீர்க்கதரிசனம் உரைக் கப்பட்டது. பேதுருவும், அப்போஸ்தலர்களும் பெந்தெகொஸ்தே நாளில் ஜனங்களிடத்தில் இந்த தீர்க்கதரிசனம் அவ்வேளையில் நிறைவேறிற்று என்று சொன்னார்கள். அப்படியென்றால், அவர்கள் இரட்சிக்கப்படும்படி கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல் என்றால் என்ன? அநேகர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதல் என்றால் அது இரட்சிக்கும்படி கர்த்தரிடம் கேட்பது என்று சொல்கிறார்கள். அதாவது, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுதலும் ஜெபமும் சமம் என்று சொல்வார்கள். ஆனால், இரட்சிப்போடு சம்பந்தப்படுத்தி ஜெபம் எங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது? உண்மையாகவே, கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் இருதயங்களில் குத்தப்பட்ட பிறகு அல்லது கிறிஸ்துவில் விசுவாசிகளான பிறகு, அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று அறிய விரும்பினார்கள். அவர்கள் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு சொன்னார். ஏறக்குறைய மூவாயிரம் பேர் பேதுரு சொன்னதைச் செய்தார்கள் என்றும், இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் தம்முடைய சபையில் சேர்த்தார் என்றும் வேதவசனங்கள் சொல்கிறது. எனவே, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்வதென்பது கர்த்தருக்குக் கீழ்ப்படிதலைக் குறிக்கிறது என்கிற முடிவுக்கு நாம் வருகிறோம். வேறு விதமாகச் சொன்னால், ஒருவரோ அல்லது அதற்கு மேலோ தமக்கு கீழ்ப்படிந்தால், அவர்களை இரட்சிப்பதாக கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (மாற்கு 16:15,16). எனவே, ஒருவர் கர்த்தருக்கு கீழ்ப்படியும் போது, தன்னுடைய கீழ்ப்படிதல் மூலமாக கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, தன்னை இரட்சிக்கும்படியான தமது வாக்குத்தத்தை நிறைவேற்றும்படி கர்த்தரிடம் வேண்டுகோள் விடுக்கிறார். அப்பொழுது அவர் அப்படி செய்கிறார்.

மூன்றாவது, ஒரு நாள் வரும் அப்பொழுது கர்த்தர் மாம்சமான யாவர் மேலும் தம் ஆவியை ஊற்றுவார் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டுள்ளது. அவர் அந்த வாக்குத்

தத்தத்தை நிறைவேற்றியிருக்கிறார். அவர் தொடர்ந்து அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி வருகிறார். பெந்தெகொஸ்தே நாளிலே கர்த்தர் தம்முடைய ஆவியை ஊற்றினார் அல்லது பரிசுத்த ஆவியினாலே அப்போஸ்தலர்களை ஞானஸ்நானப்படுத்தினார்; அப்போஸ்தலர்கள் மூலமாக, அவர்களுடைய பிரசங்கம் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படியே கர்த்தருடைய வார்த்தையை பதிவு செய்ததன் மூலமாக முழு உலகமும் ஆசீர்வதிக்கப்படும்படி கர்த்தர் பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலர்களுக்கு ஞானஸ் நானங் கொடுத்தார். அப்போஸ்தலர்களுடைய பிரசங்கத்தின் விளைவாக கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவர்களெல்லாம் இரட்சிக்கப் பட்டது மட்டுமின்றி, அவர்களுக்குப் பரிசுத்த ஆவியும் கொடுக்கப் பட்டது. இது பெந்தெகொஸ்தே நாளில் அங்கே இருந்தவர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களுடைய பிள்ளைகளுக்கும் அல்லது வருங் கால சந்ததியாருக்கும், தூரத்தில் இருந்தவர்களுக்கும் அதாவது, புறஜாதி மக்களுக்கும் கொடுக்கப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின் புறஜாதிகளும் தேவனாலும், யூதர்களாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டார்கள் என்பதை நிரூபிக்கும் பொருட்டு கொர்நேலியும் அவன் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்போஸ்தலர்களும், கொர்நேலியுவின் வீட்டாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றது மாத்திரமின்றி, அத்தோடு அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை யார் மீது வைக்கிறார்களோ அவர்களும் பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்றுக் கொண் டார்கள். அப்போஸ்தலர்கள் தவிர மற்றவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியின் அற்புத அடையாளங்கள் செய்ய முடியாத அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளத்தக்கதான அதிகாரத்தை அப்போஸ்தலர்கள் கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். இது நம்முடைய காலம் வரை தொடர்ந்து வருகிறது. எனவே, கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியிருக்கிறார்; ஒவ்வொரு விஷயத்திலும் கர்த்தருடைய வார்த்தை நிறைவேறி வருகிறது.


வேறொரு சந்தர்ப்பத்தில் பவுல் ரோமர்களுக்கு," இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்கிறது; இந்த வார்த்தை நாங்கள்

பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே. என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்கிறது. யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார். ஆதலால், கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக் குறித்து ஏசாயா: கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான். ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:8-17) என்று எழுதியுள்ளார்.

இந்த வசனப்பகுதியில் இதன் எழுத்தாளர், ஒருவர் இரட்சிக்கப்படும்படி கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவதை தயவு செய்து கவனியுங்கள். இப்படிச் சொல்வதின் பொருள் என்ன? வசனப்பகுதியின் பின்னணியை வைத்துப் பார்க்கும்போது, தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று பார்க்கிறோம், ஒருவர் அதைக் கேள்விப்பட்டு, விசுவாசித்து, கிறிஸ்துவை அறிக்கை செய்ய வேண்டும். மனந்திரும்புதலும், ஞானஸ்நானமும் இங்கே குறிப்பாக சொல்லப்படவில்லை என்றாலும், தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதன் ஒரு பகுதியாகவும், கர்த்தரில் விசுவாசம் வைப்பதின் ஒரு பகுதியாகவும் இது உள்ளது.

இது அப்போஸ்தலர் புத்தகத்தில் பட்டியலிடப் பட்டிருக்கிற எல்லா மனமாற்ற சம்பவங்களிலும், இரட்சிப்போடு சம்பந்த முடைய வேதாகமத்தின் பிற வசனப்பகுதிகளோடும் ஒத்துப் போகும்படியாகப் பின்பற்றப்பட வேண்டும். இங்கே கவனிக்கத் தக்கது என்னவென்றால், ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது தன்னை இரட்சிக்கும்படியான வாக்குத்தத்தத்தை கர்த்தர் நிறை வேற்றும்படி கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறார். நிச்சயமாகவே, கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற் றத் தவறுவதில்லை. பேதுரு இப்படிச் சொல்கிறார், *" தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல் லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் "* (II பேதுரு 3:9).

இரட்சிப்பிற்காக நீங்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு விட்டீர்களா? நாங்கள் இப்படிச் சொல்லும் போது ஜெபத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கவில்லை. கர்த்தருக்குக் கீழ்ப்படிவது சம்மந்தமாக பேசுகிறோம். தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவதன் மூலமாக அவரைத் தொழுது கொண்டால், உங்களை இரட்சிப்பதன் மூலமாகவும், தம்முடைய சபையில் சேர்ப்பதன் மூலமாகவும் உங்களுக்கு அவர் பதிலளிப்பார். இரட்சிக்கப்படுவதற்கு இது தவிர வேறு வழி இல்லை.



## பாடம் - 7

# ஏன் நல்லொழுக்க வாழ்க்கை மட்டும் இரட்சிக்கப்பட போதுமானதல்ல?

நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களோ இல்லையோ, அநேகமாக பெரும்பாலான ஜனங்கள் தங்கள் நற்கிரியைகளின் அடிப்படையில் இரட்சிக்கப்பட முயற்சி செய்வதால் அவர்கள் இழந்து போவார்கள். இப்படிப்பட்ட சிந்தனை நித்திய ஜீவனை நாடி இயேசுவினிடத்தில் வந்த அந்த பணக்கார வாலிபனை நமக்கு நினைவுப்படுத்துகிறது. நாம் இப்படியாக வாசிக்கிறோம் *"அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி : நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் : நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே ; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் அவரை நோக்கி : எவைகளை என்று கேட்டார். அதற்கு இயேசு : கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ்செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக ; உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப்பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண் டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு : நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு அப்பொழுது, பரலோகத்தில், உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றி வா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்ட பொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்"* (மத்தேயு 19:16-22).

நாம் இப்பொழுது வாசித்த இந்த சம்பவம் பழைய ஏற்பாடு நடைமுறையில் இருந்த காலத்தில் நடந்த ஒன்று. வேறுவிதமாகச் சொன்னால், நியாயப்பிரமாணம் அப்பொழுது அவர்களைக் கட்டுப்படுத்தியது. எனவே, இயேசு நியாயப்பிரமாணம் என்ன சொன்னதோ அதன்படி இந்த வாலிபனுக்குப் பதிலளித்தார். அவன் நித்திய ஜீவனை சுதந்தரிக்க வேண்டுமானால், கற்பனை களை கைக்கொள்ள வேண்டும் என்று இயேசு சொன்னது மோசே யின் பத்து கட்டளைகளைக் குறிக்கும். அந்த வாலிபன் அந்தக் கற்பனைகளை எல்லாம் தன் சிறுவயது முதல் கைக்கொண்டு வருவதாக இயேசுவுக்குப் பதிலளித்தான். இது குறித்து நாம் எண்ணிப் பார்க்கும் போது இந்தக் கற்பனைகளையெல்லாம் அவன் கைக்கொண்டிருப்பதனால் நிச்சயமாகவே அவன் ஒரு நல்லொழுக்கமுள்ளவனாகத்தான் இருந்திருக்கிறான். வேறுவித மாகச் சொன்னால், எப்படிப் பார்த்தாலும் அவன் துன்மார்க்கனோ அல்லது பொல்லாதவனோ அல்ல. இங்கே அவன் பரலோகம் போவதற்குத் தான் தகுதியானவன் என்று நினைத்துக் கொண்டு, வெறுமனே அதற்கான அங்கீகாரத்தைக் கர்த்தரிடம் பெறுவதற்காக வந்தது போலவே நமக்குத் தோன்றுகிறது. இந்தக் காரியத்தில் இவனுடைய நற்குணங்கள் மட்டும் போதுமானதாக இல்லை. இயேசுவால், அவனுடைய இருதயத்திற்குள்ளும், ஜீவியத்திற் குள்ளும் உற்றுப்பார்த்து, அங்கே ஒரு தடையிருந்ததைக் காண முடிந்தது. இவன் ஒரு செல்வச் செழிப்புள்ள வாலிபனாக இருந்த படியால் தன் நம்பிக்கையை ஐசுவரியத்தின் மேல் வைத்திருந்தான். எனவே தான் இயேசு அவனிடம் அவனுக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு தன்னைப் பின்பற்றும்படி சொன்னார். அதன் பின்பு, நமக்கு ஒரு சோகமான வாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவ னாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்க மடைந்தவனாய்ப் போய்விட்டான் என்று. நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை மாத்திரம் ஒருவனை இரட்சிக்கப் போதுமானதல்ல.

இது சம்மந்தமாக மற்றுமொரு சிறந்த உதாரணம் கொர் நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரின் சம்பவத்தில் கொடுக்கப் பட்டிருக்கிறது. கொர்நேலியு ஒரு புற ஜாதியான். அவன் இராணு வத்தில் ஒரு பொறுப்புள்ள பதவியில் இருந்தான். அதாவது,

ஒரு நூற்றுக் கதிபதி. வேத வசனம் இப்படிச் சொல்கிறது "*அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும், தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான்*" (*அப்போஸ்தலர் 10:2*). ஆயினும், அவன் ஆத்துமாவில் இழந்த நிலையில் தான் இருந்தான். கர்த்தருடைய வழிநடத்துதலினால் கொர்நேலியும் அவன் வீட்டாரும், பேதுருவும் அவனுடைய சகோதரர்களும் ஒன்று சேர்க்கப்பட்டார்கள். இச்சமயத்தில் பேதுரு அவர்களுக்கு பிரசங்கிக்கத் தொடங்கினார். அப்போது நற்செய்தியானது யூதர்களுக்கு மாத்திரமல்ல, புறஜாதிகளுக்கும் சொந்தம் என்பதை யூதர்கள் நம்பும் படியாக கொர்நேலியு மற்றும் அவன் வீட்டார் மீது பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார். அதன் பின்பு பேதுரு "*நம்மைப் போலப்பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டுக்கொண்டார்கள்*", (*அப்போஸ்தலர் 10:47, 48*). இப்போது இந்த கொர்நேலியு வாழ்ந்த வாழ்க்கையை நீங்கள் மறுபடியும் கவனித்தால், அவன் தேவபக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். இன்று கூட இப்படிப்பட்ட மனிதன் மிக நல்ல மனிதனாகவே கருதப்படுவார். ஆயினும், கொர்நேலியு ஆத்துமாவில் இழந்து போன நிலையில் தான் இருந்தார். எனவே, அவருக்கு சுவிசேஷத்தைக் கேள்விப்பட அவசியப்பட்டது, அதை விசுவாசிக்க வேண்டியதாயிருந்தது; இரட்சிக்கப்படும்படியாக சுவிசேஷததிற்கு கீழ்ப்படியவும், கர்த்தருடைய சபையிலே சேர்க் கப்படவும் வேண்டியதாயிருந்தது. ஒருவேளை அப்படிச் செய்ய கொர்நேலியு மறுத்திருந்தால், எவ்வளவு நற்கிரியைகளை அவன் செய்திருந்தாலும் இழந்து போன நிலையில் தான் இருந்திருப்பார்.

ஒருவர் இரட்சிக்கப்பட நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை வாழ வேண்டுமென்பது உண்மை தான். இதன் பொருள், ஒருவர்

கெட்ட மற்றும் தவறான காரியங்களைச் செய்யாதபடி தன்னை விலக்கி காத்துக் கொள்வது தான். மேலும், நல்லொழுக்கமுள்ள ஒருவர் மாம்சத்தின் கிரியைகளையும், இந்த உலகத்தின் காரியங் களையும் செய்ய முடியாது என்றும் பொருள்படும். பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதினார். *"அநியா யக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள் ; வேசி மார்க்கத்தாரும் ; விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக் காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக் காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை".* (I கொரிந்தியர் 6:9,10). உலகத்தாரோடு கொரிந்து பட்டணத்து சபையார் கொண்டி ருந்த ஐக்கியம் பற்றி பவுல் இப்படிச் சொல்கிறார். *"விபசாரக்கார ரோடே கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை; அப்படி யானால் நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப்போக வேண்டிய தாயிருக்குமே. நான் உங்களுக்கு எழுதினதென்ன வென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவர் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக் காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக் காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக் கூடாது; அப்படிப்பட் டவனுடனே கூட புசிக்கவுங்கூடாது"* (I கொரிந்தியர் 5:9-11). இங்கே பவுல் உலகத்தாரோடு இடைபடாமல் இந்த வாழ்க்கை யைக் கழிப்பது முடியாத காரியம் என்று சொல்கிறார் ; ஆனால், கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதரன் என்று வரும் போது, அவன் உண்மையற்ற, தேவ பக்தியில்லாத வாழ்க்கையை நடத்தினால் அப்படிப்பட்டவனோடு நாம் எந்த ஐக்கியத்தையும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்கிறார்.

பவுல் கலாத்திய சகோதரர்களுக்கு தொடர்ந்து சொல்லும் போது, *" மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன : விபசாரம், வேசித்தனம் அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே ; இப்படிப்பட்டவைகளைச்*

செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னது போல் இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலாத்தியர் 5:19-21). இது போன்று பல்வேறு வேதவாக்கியங்களில் மேற்சொல்லப்பட்ட பாவ நடவடிக்கைகளில் ஒருவர் ஈடுபட்டுக் கொண்டு தேவனு டைய ராஜ்யம் அல்லது கர்த்தருடைய சபைக்குள் பிரவேசிக்க முடியாது என்று சொல்கிறார். அது போலவே, கிறிஸ்தவர்கள் இத்தகைய பாவமான காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டு தேவனைப் பிரியப்படுத்த முடியாது. இப்படிப்பட்ட காரியங் களைச் செய்யாத ஒருவர் இதை ஆதாரமாக வைத்து மாத்திரமே இரட்சிக்கப்பட முடியாது என்றாலும், கர்த்தர் ஒரு கிறிஸ்தவன் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலக வேண்டும் என்று விரும்புகிறார் (I தெசலோனிக்கேயர் 5:22)

சில மக்கள், கிறிஸ்தவர்களுக்கு மற்ற மதங்களில் இருப்பவர்களைக் காட்டிலும் ஒழுக்க ரீதியான சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கின்றனர். எனவே, அவர்கள் ஒரு கிறிஸ்தவன் புகை பிடிக்கலாம், மதுபானம் குடிக்கலாம், ஒழுக்கக்கேடான காரியங்களில் ஈடுபடலாம், கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தலாம், அசிங்கமாக உடை உடுக்கலாம் என்றெல்லாம் நினைக்கிறார்கள். நிச்சயமாகவே, வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதையும், ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பது என்றால் என்ன என்பதையும் அறிந்தவர்கள், இது அப்படியல்ல என்பதை அறிவார்கள். தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள், இத்தகைய ஒழுக்கக் கேடான காரியங்களில் ஈடுபடுவது உண்மை தான், இப்படிச் செய்பவர்களிடத்தில் தேவன் பிரியமாயிருப்பதில்லை. அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் இழந்து போவார்கள். ஒருவன் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்தவனாவதற்கு அவன் தேவனிடத்திலும், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதிலும் மாத்திரம் விசுவாசம் வைத்தால் போதாது. மாறாக, அவன் தன் எல்லாப் பாவங்களிலிருந்தும் மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு இறுதியாக தன் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும். இவைகள் எல்லாவற்றையும் ஒருவர் செய்தால் மாத்திரமே கர்த்தர் அந்த நபரை இரட்சிக்கவும்,

தம்முடைய சபையிலே சேர்த்துக் கொள்ளவும் விரும்புகிறார். ஒரு கிறிஸ்தவர் ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அவர் மரணபரியந்தம் கர்த்தருக்கு உண்மையுள்ளவராக இருக்க வேண்டும். இதை நாம் வேதவசனங்களில் திரும்பத் திரும்ப வாசிக்கிறோம் (மாற்கு 16:15, 16; அப்போஸ்தலர் 2:38; மத்தேயு 10:32; அப்போஸ்தலர் 2:47 ; வெளிப்படுத்தல் 2:10)

இப்போது ஒருவர் நல்லொழுக்கமுள்ள நபராக இருந்து கொண்டு, அதனடிப்படையில் தான் இரட்சிக்கப்பட்டதாக நினைத்துக் கொள்ளலாம். ஆனால், தான் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், மற்ற துன்மார்க்கர் போல தானும் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும். இந்த நல்லொழுக்கமுள்ளவர், தன்னுடைய நற்பண்புகளை வைத்து மட்டும் இரட்சிக்கப்பட முடியாது. ஒருவர் செய்த நீதியின் கிரியைகள் அவரை இரட்சிக்காது (எபேசியர் 2:8,9 தீத்து 3:5) ஒருவர் தான் இரட்சிக்கப்பட நற்பண்புகளை மாத்திரம் சார்ந்திருந்தால், அவர் முதலில் அந்த பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும். எல்லாரும் பாவம் செய்திருக்கிறோம் என்று பவுல் சொல்கிறார் (ரோமர் 3:23). ஆகவே, " இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்தார் " என்று நாம் வாசிக்கிறோம் (லூக்கா 19:10). மனிதன் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டு விட்டபடியால் கிறிஸ்து மரிக்கவில்லை. மாறாக, மனிதன் இழந்து போய் இரட்சிக்கப்பட வேண்டியதாயிருந்தபடியால் தான் கிறிஸ்து மரிந்தார். கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் என்று பவுல் சொன்னார் (I கொரிந்தியர் 15:1-4). பேதுரு இப்படியாகச் சொல்கிறார். ஏனெனில், " கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில், சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார் ; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (I பேதுரு 3:18).


என் நண்பரே, நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? அப்படி இரட்சிக்கப்பட்டிருந்தால், எப்படி நீங்கள் இரட்சிக்கப் பட்டீர்கள்? நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை வாழ்வதன் மூலமாக பரலோகம் செல்ல முயற்சி செய்பவர்களில் ஒருவராக இருக்கிறீர்களா? நீங்கள் உங்கள் நம்பிக்கையை உங்கள் மீதோ, உலக சம்பத்தின் மீதோ, சில மனிதன் மீதோ, மனிதரால் உண்டாக்

கப்பட்ட சில முறைமைகள் மீதோ அல்லது இந்த உலகத்திலுள்ள ஏதாவது ஒன்றின் மீதோ வைத்திருக்கிறீர்களா? அப்படியென்றால், உங்கள் சொந்த முயற்சியினால் பரலோகம் செல்ல முயற்சி செய்கிறீர்கள் என்று பொருள். இது உண்மையானால் நீங்கள் அப்படிச் செய்ய முடியாது என உணர்ந்து கொள்ள வேண்டும். கிறிஸ்து அல்லாமல் வேறொருவராலும் நம்மை இரட்சிக்க முடியாது. நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து, மரண பரியந்தம் தூய்மையான தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ்ந்தால், அவர் உங்களை இரட்சிப்பதாக மாத்திரம் வாக்குத்தத்தம் பண்ணாமல், பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டைத் தருவதாகவும் வாக்குத் தத்தம் பண்ணியிருக்கிறார். இவைகளைச் சொல்வது தான் வேதாகமும், கிறிஸ்தவமும்.

வெகுகாலத்திற்கு முன்பு தேவனுடைய தீர்க்கதரிசி ஒரு கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். அது அன்றும் உண்மையாக இருந்தது, இன்றும் உண்மையாக இருக்கிறது. அவர் சொன்னார், கர்த்தாவே, " *மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்* " என்று (எரேமியா 10:23). இதை ஒத்துக் கொள்வதற்கு தாழ்மை தேவை. ஆனால், ஒருவர் இப்படியாகச் செய்யும் போது ஞானமுள்ளவராகிறார்.

மறுபடியும், நீங்கள் யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தாலும், நல்லவனாக இருந்தாலும், கெட்டவனாக இருந்தாலும், நீங்கள் இரட்சிக்கப்படும்படி தேவனுக்குக் கீழ்ப்படிய நான் உங்களை வலியுறுத்த விரும்புகிறேன். அப்போது தான் நீங்கள் இரட்சிக்கப்பட முடியம் (மாற்கு 16:16) அப்போது தான் கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார் (அப்போஸ்தலர் 2:47).

## பாடம் - 8



# ஏன் நாங்கள் ஆராதனைக்காக கூடுகிறோம்?

நாங்கள் கிறிஸ்தவர்களாக, கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களாக, வாரத்தின் முதல் நாள் தோறும் தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காகக் கூடி வருகிறோம். நாங்கள் இப்படியாகக் கூடுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது, நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய ஒரே தேவன் தான் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். அவர் நம்முடைய சிருஷ்டிகரும், எல்லா ஆசீர்வாதங்களையும் தருகிறவருமாயிருக்கிறார். அவருடைய அன்பினாலும், அவருடைய குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்தின் பாவங்களுக்காக அனுப்பிக் கொடுத்ததினாலும், அவருடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் நமக்கு இரட்சிப்பை சாத்தியப்படுத்தியிருக்கிறார். அவருடைய பிள்ளைகளாயிருக்கிற நாம் அவருக்காக வாழவும், சேவை செய்யவும், அவர் சொல்லியிருக்கிறபடி அவருக்கு ஆராதனை செய்யவும் விரும்புகிறோம். *" தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் "* என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 4:24). நாங்கள் சேவிக்கும் தேவன் மனிதனும் அல்ல, மிருகமும் அல்ல, உயிரற்ற ஒரு பொருளும் அல்ல. அவர் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், ஒரு விலங்கு, ஒரு மலை அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட ஒரு சொரூபம் போன்றவற்றை அடையாளப்படுத்தப்படுவதில்லை. அவர் ஆவியாயிருக்கிறார். அவரே எல்லாவற்றையும் உண்டாக்கினவரும், ஜீவனைத் தருபவரும், போஷிப்பவருமாயிருக்கிறார். மதிகேடன் தான் அப்படிப்பட்ட தேவனை இல்லையென்று மறுப்பான் (சங்கீதம் 14:1).

நாம் ஏறெடுக்கும் ஆராதனையில் சேவித்தல், துதித்தல், கனப்படுத்துதல் போன்றவை இடம்பெற்று பரலோகத்தின் தேவனை நோக்கி ஏறெடுக்கப்படுகிறது. நம்முடைய ஆராதனை ஆவியில் செய்யப்படுகிறது. அதாவது, நாங்கள் செய்பவைகளை எல்லா நேர்மையோடும், தாழ்மையோடும், செய்கின்ற காரியங்களில் மனதை முழுமையாக ஈடுபடுத்திச் செய்கிறோம்.

நாம் ஆராதனையை உண்மையோடும் செய்கிறோம். அதாவது, நாம் சத்தியத்தின்படி அல்லது தேவன் தமது வார்த்தைகளில் எவைகளைச் சொல்லியிருக்கிறாரோ அவைகளின்படி ஆராதிக்கிறோம். நாங்கள் தேவனை ஆராதிக்கிறபடியால் நாங்கள் எங்களை பிரியப்படுத்த முயற்சிக்காமல், தேவனை பிரியப்படுத்த விரும்புகிறோம்.

இதன் பொருள், நாம் தேவனை மனுஷருடைய உபதேசங்களின்படியும், கட்டளைகளின்படியும் ஆராதிக்கக் கூடாது (மத்தேயு 15:9). அது போல, நம்முடைய அறியாமையுள்ள ஆராதனையிலோ, (அப்போஸ்தலர் 17:23) அல்லது உண்மையாகவும், நேர்மையா கவும் ஒன்று இருந்து விட்டால் போதும் நாம் எப்படி ஆராதித்தாலும் அவர் அதை ஏற்றுக் கொள்வார் என்று நம்முடைய நிலையை நியாயப்படுத்தும் முயற்சியிலோ தேவன் பிரியப்படுவதில்லை. நாம் எப்படி ஆராதிக்கிறோம் என்பது அவருடைய பார்வையில் முக்கியமானதாக உள்ளது. இல்லையென்றால், தேவன் இந்தக் காரியத்தைக் குறித்து பேசியிருக்கமாட்டார்.

வேதாகமத்தின் போதனையின்படி, கிறிஸ்தவர்களாக நாங்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் ஆராதனைக்காகக் கூடி வருகிறோம். இதற்கான உதாரணம் நமக்கு அப்போஸ்தலர் 20:7 -ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் என்று வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி, ஓய்வு நாள் ஆராதனை நாளாக இருந்தது. ஆனால், கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, பழைய பிரமாணத்தை எடுத்துப்போட்டு, அதற்கு பதிலாகப் புதிய பிரமாணத்தைக் கொடுத்தார் (கொலோசெயர் 2:14). பழைய

பிரமாணம் எடுத்துப் போடப்பட்டபடியால், ஓய்வு நாளும் ஆரா தனை நாள் என்பதிலிருந்து எடுத்துப் போடப்பட்டது. கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தார் என்று நாம் வாசிக்கிறோம் (மத்தேயு 28:1-6). அது போலவே, நற் செய்தியானது வாரத்தின் முதல்நாளிலே பிரசங்கிக் கப்பட்டு அந்நாளில் தானே சபை ஸ்தாபிக்கப்பட்டது (அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரம்). கடைசியாக, பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே தங்கள் வருமானத் திலிருந்து கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்க வேண்டும் என்று எழுதினார். ஆனால், கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் தோறும் கூட வேண்டும் என எங்குமே சொல்லப்படவில்லை என்று ஒரு வேளை நீங்கள் சொல்லலாம். அப்படிப்பார்த்தால், பழைய ஏற் பாட்டின் கீழும் ஒவ்வொரு ஓய்வு நாளையும் ஆசரிக்க வேண்டும் என்று தேவன் எங்குமே சொல்லவில்லையே. உண்மையென்ன வென்றால், ஒவ்வொரு வாரத்திற்கும் முதல் நாள் இருக்கிறது. அந்த ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளும் கர்த்தரை ஆராதிக்கும் படியான கர்த்தருடைய நாளாக இருந்தால், கிறிஸ்தவர்கள் ஒவ் வொரு வாரத்தின் முதல் நாளிலும் அந்த நோக்கத்திற்காகக் கூடி வரவேண்டும்.

நாம் சபை கூடி வருதலை விட்டு விடக்கூடாது என்று எபி ரெய எழுத்தாளர் கூறுகிறார். அவர் இவ்விதம் சொல்கிறதைக் கேளுங்கள். *" அல்லாமலும் நம்முடைய நம்பிக்கையை அறிக்கை யிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கக் கடவோம்; வாக்குத் தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும் படி ஒருவரை யொருவர் கவனித்து ; சபை கூடி வருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்; நாளானது சமீபித்து வருகி றதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால் ; பாவங் களினிமித்தம் செலுத்தத் தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும் "*

(எபிரெயர் 10:23-27). இங்கே ஆசிரியர், நாம் சபை கூடி வருதலை விட்டுவிடக்கூடாது என்று சொல்வதை கவனியுங்கள். எபிரெய ஆசிரியர் இங்கே எதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்? இங்கே நாம் விட்டுவிடாதபடி வழக்கமாக எப்படிப்பட்ட கூடி வருதலைக் கொண்டிருக்கிறோம்? சபை கூடி வருதலை சிலர் விட்டு வருகிறது போல நாமும் விட்டு விடாமல் நாளானது சமீபத்து வருகிறபடியால் சபை கூடி வரும்படியாக ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும் என்று ஆசிரியர் சொல்கிறார். ஆனால், எபிரெய எழுத் தாளர் சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப் பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்தவர்களாயிருந்தாலும் நாம் பாவத்திலிருக்கும் வரை கர்த்தரால் நம்மை இரட்சிக்க முடியாது என்றும் சொல்கிறார். எனவே, நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வது மாத் திரம் முக்கியமானதல்ல. மாறாக, சபை கூடி வருதல் உட்பட அவருடைய எல்லா சித்தத்திற்கு கீழ்ப்படிவதும் முக்கியமானது.

இப்போது, நாம் வாரத்தின் முதல் நாளிலே தேவனை ஆராதிக்கும்படியாகக் கூடும்போது என்ன செய்ய வேண்டும்? வசனங்களில் அநேக காரியங்களின் பட்டியலிடப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் 20:7 -ல் குறிப்பிட்டிருக்கிறபடி, கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்படி அல்லது அப்பம்பிட்கும் படி கூடியிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதுகிறார். " நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன் ; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு : நீங்கள் வாங்கிப் புசியுங்கள்; இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப்பாத் திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப்பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்

*கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய் பானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான் "* (1கொரிந்தியர் 11:23-29). இங்கே பவுல், அப்பமானது கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படி புசிக்கப்படவேண்டும் என்றும், பாத்திரத்தில் பானம்பண்ணுவது கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூரும்படி செய்யப்பட வேண்டும் என்றும் கூறுவதை தயவு செய்து கவனியுங்கள். வேறுவிதமாகச் சொன்னால், கர்த்தர் அவருடைய ஜனங்கள் இரட்சிக்கப்படும்படி, தான் செலுத்தின கிரயத்தைத் தொடர்ந்து நினைவு கூருகிறவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார். கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதன் மூலமாக, கிறிஸ்தவர்கள் சிலுவையைத் திரும்பி பார்க்கிறார்கள். பந்தியில் பங்கு பெறுவதால், கிறிஸ்தவர்கள் கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதைத் தெரிவிக்கிறார்கள். எனவே, கர்த்தருடைய பந்தி மிகமுக்கியமானது. இதில் பங்கு பெறும் வேளையானது ஆவிக்குரிய பிரகாரமாக ஒருவர் கர்த்தருக்கு முன்பாக எங்கே நிற்கிறார் என்று தன் சொந்த ஜீவியத்தை சோதித் தறியும் சந்தர்ப்பமாக இருக்கும். இது, கிறிஸ்தவர்கள் கிறிஸ்து வைப் பற்றிய மதிப்பு மிக்க பாடங்களை உலகிற்கு கற்றுக் கொடுக்க ஒரு வாய்ப்பைக் கொடுக்கின்றது.

அடுத்ததாக, கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்கும்படி வாரத்தின் முதல் நாளிலே கூட வேண்டும்; அப்படி அவர்கள் செய்யும் போது, கர்த்தருடைய வேலைக்காக கர்த்தருக்கு காணிக்கை கொடுக்க வேண்டும். பவுல் இப்படியாகச் சொன்னார். *"பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்ம பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டு சபைகளுக்குப் பண்ணினத் திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் "* என்று (கொரிந்தியர்

16:1,2). மேலும், II கொரிந்தியர் 9:6,7 வசனங்களில் பவுல், "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன், சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான், அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்". நிச்சயமாகவே "வாங்குகிறதைப் பார்க்கிலும், கொடுக்கிறதே பாக்கியம்" என்று இயேசு சொன்னார் என்று சொல்லியுள்ளார் (அப்போஸ்தலர் 20:35). பழைய பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த தேவனுடைய ஜனங்கள், தங்கள் சம்பாத்தியத்தில் தசமபாகம் அல்லது பத்தில் ஒரு பகுதியை தேவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருந்தார்கள். ஆனால், அந்தப் பிரமாணம் இப்போது நடைமுறையில் இல்லை. நாம் கிறிஸ்தவர்களாக நம்முடைய வருமானத்திற்கு ஏற்ப கொடுக்க வேண்டும். அப்படியானால், அது எவ்வளவு? அது பத்தில் ஒரு பங்குக்கு மேல் என்பதில் சந்தேகமில்லை. நிச்சயமாகவே, கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பு வாழ்ந்தவர்களைக் காட்டிலும் நமக்கு மாபெரும் ஆசீர்வாதங்களும், வாக்குத்தத்தங் களும் இருக்கின்றன.


நாம் தேவனைத் துதிக்கும்படியான ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடும்படியாக வாரத்தின் முதல் நாளிலே கூட வேண்டும். பவுல் எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களிடம், "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி" என்று சொல்கிறார் (எபேசியர் 5:19) கொலோசெயர் 3:16,17 வசனங்களில் பவுல், இப்படியாக அறிவிக்கிறார், "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" என்று. நீங்கள் பார்க்கின்றபடி இந்த வசனத்திலும், வேறு வசனப்பகுதிகளிலும் தேவனுக்கு ஸ்தோத்திரப்பாடல்களை பாடுவது வலியுறுத்தப் படுகிறது. எபிரெய ஆசிரியர் சொல்லும் போது, "உதடுகளின் கனி

யாகிய ஸ்தோத்திர பலியை தேவனுக்குச் செலுத்த வேண்டும் ". என்று சொல்கிறார் (எபிரெயர் 13:15). நாங்கள் கர்த்தருடைய ஜனங் களாக ஆராதனையில் இசைக்கருவிகளை பயன்படுத்துவதில்லை.

ஆனால், ஆராதனையில் இசைக்கருவிகளை வாசிப்பதினால் என்ன தவறு இருக்கிறது? வாசிக்காமல் இருப்பதில் அப்படி என்ன நன்மை அதில் இருக் கிறது? பாடுவதினால் மாத்திரம் நாம் தேவனை ஆராதிக்க முடி யாதா? நம்மால் அப்படி முடியும் என்று உங்களுக்குத் தெரியும். ஆகையால், வேதவாக்கியங்கள் தெளிவாக போதிக்கின் றபடி நாம் பாடல்களை மாத்திரம் பாடுவோம். அதற்குமேல் போவது, கர்த்த ருடைய அதிருப்தியை சம்பாதிப்பதாகிவிடும். நாம் பிரியப் படுகிறபடி நாம் செய்யாமல், நாம் யாரை ஆராதிக்கிறோமோ அவர் பிரியப்படும்படியாகவே காரியங்களைச் செய்ய வேண்டும்.

கடைசியாக, வாரத்தின் முதல் நாளிலே, கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனை ஆராதிப்பதற்காக, சபையாகக் கூடி வந்து தேவன் தம்முடைய வார்த்தை மூலமாக நம்மிடம் பேசவும், நாம் தேவனிடத்தில் ஜெபத்தின் மூலமாக பேசவும் அனுமதிக்க வேண்டும். நாம் வசனத்தைப் படிக்கும்படியாக ஊக்கப்படுத்தப் பட்டிருக்கிறோம் (II தீமோத்தேயு 2:15). நாம் தேவ வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படியாக கிறிஸ்து கேட்டுக்கொண்டார் (யோ வான் 5:39). ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத் திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்போஸ் தலர் 2:42). வேதத்தைப் படித்தலும், ஜெபமும் இல்லாமல் தேவனை ஆராதிப்பது எப்படி சாத்தியம்?

நீங்கள் தேவனை ஆராதிக்கிறீர்களா? வழக்கமாக நீங்கள் அப்படிச் செய்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? அப்படி இல்லையென்றால், தேவன் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அவரை ஆராதிக்க நீங்கள் தேவனோடு சரியான உறவில் இல்லை. நீங்கள் ஒரு கிறிஸ்தவனாகும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான் என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார் (மாற்கு 16:16). அப்படி நீங்கள் செய்தால் கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார் (அப்போஸ்தலர் 2:47). அப்போது உங்க ளாலும் ஆராதிக்க முடியும்.



## பாடம் - 9

# ஏன் நாங்கள் வாரத்தின் முதல் நாளில் கூடுகிறோம்?

**நா**ங்கள் கிறிஸ்தவர்களாக, கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களாக தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது (யோவான் 4:24). அதன் பொருள், நாங்கள் என்ன செய்கிறோமோ அதைப் புரிந்து கொண்டும், உண்மையாகவும் செய்யவேண்டும். மேலும், அதை நாங்கள் கர்த்தருடைய வார்த்தையின் போதனையின் படி செய்ய வேண்டும். ஆனால், கேள்வி என்னவென்றால்: அதை நாம் எப்போது செய்ய வேண்டும்? எத்தனை நாளுக்கு ஒரு முறை செய்ய வேண்டும்? அது வெள்ளிக்கிழமையாக, சனிக்கிழமையாக, ஞாயிற்றுக்கிழமை யாக அல்லது வாரத்தின் வேறு ஏதாவது கிழமைகளில் இருக்க லாமா? நாம் ஆராதிக்கும் போது என்ன கிழமையில் ஆராதிக் கிறோம் என்பது உண்மையாகவே அவ்வளவு முக்கியமானதா?

பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கும் போது, தேவன் தம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர்களுக்கு ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார். இது பத்து கட்டளைகளில் ஒன்றாக இருந்தது (யாத்திரா கமம் 20:8-11). ஆனால், நாம் கிறிஸ்துவின் நாட்களுக்கு வரும் போது, கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, தேவனுடைய ஜனங்கள் ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டும் என்கின்ற பழைய பிரமாணத்தை எடுத்துப் போட்டார் (யோவான் 1:17; கொலோசெயர் 2:14; எபிரெயர் 9:15-17). ஆகவே, பழைய பிரமாணம் நீக்கப்பட்ட போது, அதற்குப் பதிலாக புதிய பிரமாணம் கொடுக்கப்பட்டது. இது உண்மையாயிருக்க, தேவனுடைய ஜனங்களைக் கட்டுப் படுத்திய ஓய்வு நாள் முடிந்து போய், கர்த்தர் தம்முடைய ஜனங்கள் கூடி வரவேண்டுமென்ற நோக்கத்திற்காக புதிய நாளை

அறிமுகப்படுத்தினார். அந்த நாள் வாரத்தின் முதல் நாளாயிருந் தது. பழைய ஏற்பாட்டில் ஓய்வு நாள் என்பது சனிக்கிழமை அல்லது வாரத்தின் ஏழாம் நாளாக இருந்தது. ஆனால், இப்பொழுது கர்த்தர், ஆராதனையிலும், மற்ற எல்லாவற்றிலும் கிறிஸ் துவை முதலில் வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்.

வாரத்தின் முதல் நாளைப் பற்றி சொல்வதற்கு வேதாகமத் தின் புதிய ஏற்பாட்டு பகுதியில் நிறைய இருக்கிறது. இப்போது நாம் இந்த நாள் ஏன் அவ்வளவு முக்கியமானது என்பதையும், ஆராதனைக்காக ஏன் வாரத்தின் முதல் நாளிலே கூடி வரவேண்டும் என்பதற்கான காரணங்களையும் தெரிந்து கொள்ள கொஞ்ச நேரத்தை எடுத்துக் கொள்ளலாம்.

முதலாவது, கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே உயிர்த் தெழுந்தார். ஓய்வு நாள் வாரத்தின் பரிசுத்த நாளாக இருந்திருந்தால் அல்லது தேவனுடைய ஜனங்கள் தேவனை ஆராதிக்கும் நாளாக ஓய்வு நாள் இன்னும் இருந்திருந்தால், வாரத்தின் முதல் நாளில் அல்லது ஞாயிற்றுக்கிழமையில் கிறிஸ்து ஏன் உயிர்த்தெழ வேண்டும்? நிச்சயமாகவே, ஓய்வு நாள் பரிசுத்த நாளாக இருந்தபடி யால் தான் அன்று கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்று வாதம் செய்யலாம். ஆனால், ஓய்வு நாள் கட்டுப்படுத்துகிறதாக இருந்து, அந்நாளில் கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்திருந்தால் அது இன்றும் எவ்வளவு பரிசுத்தமாக இருந்திருக்கும்? உண்மை யாகவே, கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே உயிர்த்தெழுந்ததற் கான காரணம், அந்த நாள் ஆராதனையின் புதிய நாள் என அந்த நாளை வலியுறுத்தும்படியாகத்தான். நாம் மத்தேயு 28:1 -க்கு திருப்பும் போது இப்படியாக வாசிக்கிறோம். ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். நாம் தொடர்ந்து வாசிக்கும் போது வாரத்தின் முதல் நாளில் கர்த்தர் உயிர்த் தெழுந்தார் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இதே அடிப்படை காரியத்தை நாம் மாற்கு 16:1,2; லூக்கா 24:1,2 மற்றும் யோவான் 20:1 -லும் வாசிக்கிறோம்.

இரண்டாவது, கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில் கல் லறையிலிருந்து உயிர்த்தெழுந்தபிறகு, இரண்டு சந்தர்ப்பங்களில்

தன்னுடைய சீஷர்களை சந்திப்பது பொருத்தமானது என கண்டிருக்கிறார். அந்த இரண்டு சந்தர்ப்பங்களுமே வாரத்தின் முதல் நாளாகவே இருந்துள்ளது. நாம் இப்படியாக வாசிக்கிறோம். "வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத் தினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார், அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும், விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்" (யோவான் 20:19,20). மீண்டுமாக, நாம் இப்படி வாசிக்கிறோம். "மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு, அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனே கூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி ; நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு. அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக : என் ஆண்டவரே ! என் தேவனே என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய் காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்றார் (யோவான் 20:26-29).

இப்பொழுது, வாரத்தின் முதல் நாளில் இயேசு கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்து, அதே சாயங்காலத்தில் சீஷர்களுக்கு முன்பாக தோன்றியிருக்கும்போது, மறுபடியும் இயேசு வாரத்தின் முதல் நாளில் அவர்களை சந்தித்தார் என பொருள்படாதா? வாரத்தின் முதல் நாளுக்கு எவ்வித முக்கியத்துவமும் இல்லையென்றால், இவைகள் எல்லாம் வாரத்தின் முதல் நாளில் நடந்தது என வேதவாக்கியங்கள் வலியுறுத்துவது விநோதமாக அல்லவா இருக்கும்? வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற உண்மைக்கும், முதல் நாளின் இரண்டு சந்தர்ப்பங்களில் இயேசு தம்முடைய சீஷர்களைச் சந்தித்தார் என்ற உண்மைக்கும் இடையே மிகப்பெரிய முக்கியத்துவம் சம்பந்தப்பட்டிருக்கிறது என் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மூன்றாவது, பெந்தெகொஸ்தே எப்போதும் பஸ்கா பண்டிகை முடிந்து, ஐம்பதாவது நாளாகிய வாரத்தின் முதல் நாளில் தான் வரும். இதன் பொருள், அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தின் படி, கர்த்தர் வாரத்தின் முதல் நாளை அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியை அனுப்புவதற்கும், இரட்சிக்கப்படுவதற்கும், ஆண்களும், பெண்களும் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கும்படியான நற்செய்தியை உண்மையில் முதன் முதல் பிரசங்கிப்பதற்கும், சபை ஸ்தாபிக்கப்படுவதற்கும் கர்த்தர் வாரத்தின் முதல் நாளைத் தெரிந்தெடுத்தார். இங்கே இது வாரத்தின் முதல் நாளிற்கு எந்த முக்கியத்துவத்தையும் கொடுக்கவில்லையென்றால், வேறு எதற்கு முக்கியத்துவம் கொடுக்கும்? வாரத்தின் மற்ற நாட்களைக் காட்டிலும் முதல் நாள் தெரிந்து கொள்ளப்பட்டிருப்பதற்கு ஏதாவது சிறப்புக் காரணம் இருக்க வேண்டும். உதாரணமாக, ஓய்வு நாள் இன்னும் கட்டுப்படுத்துகிறதாக இருந்தால், அதற்குப் பின்வரும் நாளுக்குப் பதிலாக அந்த நாளையே கர்த்தர் ஏன் தெரிந்து கொள்ளவில்லை? கிறிஸ்துவின் காலத்தில், கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழாக வாரத்தின் முதல் நாள் ஆராதிக்கும் நாளாக இருக்கும்படி, வாரத்தின் முதல் நாளைக் கொண்டு ஓய்வு நாள் மாற்றப்பட்டாயிற்று.

நான்காவது, ஆதிக்கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்கும் படி வாரத்தின் முதல் நாளில் கூடினதற்கான எடுத்துக்காட்டு நமக்கு இருக்கிறது, *"வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென் றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்"* (அப்போஸ்தலர் 20:7). இந்த வசனத்தின் பின்னணியைப் பார்த்தால், பிலிப்பி பட்டணத்திலிருந்து கப்பல் மூலமாக பவுலும் மற்றவர்களும் துரோவா பட்டணத்திற்கு வந்தார்கள். வாரத்தின் முதல் நாளிலே சபை கூடி வரும்படியாக அங்கே ஏழு நாட்கள் தங்கியிருந்தார்கள். ஓய்வு நாளோ அல்லது வேறு நாளோ ஆராதனை நாளாக இருந்திருந்தால், ஆராதனைக் காக அங்கே இருந்த கிறிஸ்தவர்களோடு கூடி ஆராதித்துவிட்டு தங்கள் பயனத்தைத் தொடர்ந்திருப்பார்கள். அதற்குப் பதிலாக, கர்த்தர் தம்முடைய ஜனங்கள் தம்மை ஆராதிப்பதற்காக கூடி வர நியமித்திருந்த வாரத்தின் முதல் நாளிலே கர்த்தரை ஆராதிப்பதற்

காகக் காத்திருந்தார்கள். அதன் பின்பு அந்த நாளில் என்ன நடந்தது? அந்த நாளில் ஒரு காரியத்திற்காக சீஷர்கள் கூடிவந்திருந்தார்கள். அவர்கள் ஏன் கூடி வந்தார்கள்? வேதவசனம் அவர்கள் அப்பம் பிட்கும்படி கூடி வந்தார்கள் என்று சொல்கிறது, இது கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் நினைவு கூரும்படியான கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதைக் குறிக்கிறது (I கொரிந்தியர் 11:23-29). அதன் பொருள், நாம் வேதாகம உதாரணத்தின்படி, கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் தான் அப்பம்பிட்க வேண்டும் என்று போதிக்கப்பட்டிருக்கிறோம். வாரத்தின் எந்த முதல் நாள்? நிச்சயமாக, வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளும் தான்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஓய்வு நாள் ஆராதனை நாளாக இருந்த போது, ஒவ்வொரு ஓய்வு நாளையும் ஆசரிக்க நினைக்கும் படி தேவன் சொல்லவில்லை. மாறாக, ஓய்வு நாளை ஆசரிக்க நினைப்பாயாக என்று மட்டும் தான் சொன்னார். அவர் களுக்கு அந்த நாளை ஆசரிக்க நினைப்பதென்பது, ஒவ்வொரு ஓய்வு நாளையும் ஆசரிக்க நினைக்க வேண்டும் என்று பொருள் பட்டது. இது வாரத்தின் முதல் நாள்தோறும், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிற காரியத்திலும் உண்மையாயிருக்கிறது. அவர்கள் அங்கே கூடி வந்தபோது பிரசங்கமும் செய்யப்பட்டிருக் கிறது. பவுல் பிரசங்கித்ததாகவும், நடுஇராத்திரி வரை பிரசங்கித் ததாகவும் வசனம் சொல்கிறது. அவர்கள் ஜெபித்தார்கள் என்றும், பாடல் பாடினார்கள் என்றும் வேதவசனம் சொல்லாவிட்டாலும், அவர்கள் அவைகளைச் செய்தார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், பவுலும் அவருடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ் தவர்களும் அப்பம் பிட்கும்படியும், தேவனை ஆராதிக்கும்படியும் வாரத்தின் முதல் நாளில் கூடியிருந்தால், நாம் கிறிஸ்தவர்களாக இருந்தால் இன்று நாமும் அதே மாதிரியாகச் செய்ய வேண்டும்.


ஐந்தாவது, பவுல் தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ் தவர்களிடத்தில் வாரத்தின் முதல் நாளில் எதையாகிலும் சேர்த்து வைக்க வேண்டும் அல்லது தங்கள் வரவுக்குத்தக்கதாக கொடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். " பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்படும் தர்ம பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும்

செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராத படிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்'' (I கொரிந்தியர் 16:1,2). இங்கே பவுல் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்கும், கொரிந்துபட்டணத்து சபைக்கும், வாரத்தின் முதல் நாளில் அவர்கள் எதையாகிலும் தங்களிடத்தில் சேர்த்து வைக்க வேண்டும் அல்லது காணிக்கை கொடுக்க வேண்டும் என்று போதிப்பதை கவனியுங்கள். கொடுக்கிற மனப்பான்மை யைக் குறித்து, அதாவது, எவ்வளவு கொடுக்கப்பட வேண்டும், கொடுத்தலுக்கான நோக்கம் என்று இப்படி பல காரியங்கள் சொல்ல முடியும். ஆனால், இப்போது நாம் முக்கியமாக பார்க்க விரும்புவது வாரத்தின் முதல் நாளில் கொடுக்க வேண்டும் என்கிற உண்மையைத் தான். வேறு ஏதாவது நாளில் கொடுக்காமல் வாரத்தின் முதல் நாளில் மாத்திரம் நாம் என் கொடுக்க வேண்டும் என்று ஆச்சரியமாக இருக்கிறதா? கிறிஸ்தவர்கள் ஆராதனைக்காக கூடி வர வேதவசனத்தின் அடிப்படையிலான ஒரு நாளாக இது இருந்தது. அப்படிக் கூடி வரும் போது, தங்களுடையவைகளி லிருந்து கர்த்தருக்கு கொடுக்க இது நல்ல நாளாகவும் இருந்தது. அது அப்படியே இன்றைக்கும் உண்மையாயிருக்கிறது.

நாம் பார்த்தவைகளைத் தொகுத்துப் பார்த்தால், வாரத்தின் முதல் நாள் பரிசுத்தநாளும் அல்ல, ஓய்வு நாளைப் போல ஓய்ந்திருக்க வேண்டிய நாளும் அல்ல, நிச்சயமாகவே இது ஓய்வு நாள் அல்ல. ஆனால் இந்த நாள் கர்த்தருடைய உயிர்த்தெழுதலி னால் கனப்படுத்தப்பட்ட நாள், பரிசுத்த ஆவியானவர் இறங்கு வதற்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட நாள், உண்மையில் முதன் முதலில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்காகவும், சபை ஸ்தாபிக் கப்படுவதற்காகவும், தெரிந்து கொள்ளப்பட்ட நாள். அது மட்டு மல்ல, இது கர்த்தர் தம்முடைய ஜனங்கள் தம்மை ஆராதிக்கும் படியாக கூடி வர அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு நாள். தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாளில் கூடி வருவதில் புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற மாதிரியைப் பின்பற்றுவதில் நாம் எந்த தவறும் செய்யக்கூடாது. கூடி வர இந்த நாளை நிராகரிப்பது தவறாகும். எபிரெய ஆசிரியரும்

நாம் சபை கூடி வருதலை விட்டு விடக்கூடாது என்று புத்தி சொல்கிறார் (எபிரெயர் 10:25). கிறிஸ்தவர்களாக இருக்கும் நமக்கு, தேவன் தம்மை ஆராதிக்கும்படியாக ஒதுக்கித்தந்திருக்கிற அதே நாளில் அவரை ஆராதிப்பதன் மூலமாக அவரைத் துதிப்பது எவ்வளவு அருமையானது !

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நீங்கள் தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக மற்ற கிறிஸ்தவர்களோடு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடுகிறீர்களா? அப்படி இல்லையென்றால் நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் படிக்கவும், கிறிஸ்துவை விசுவாசிக்கவும், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிடவும், பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெறவும் நாங்கள் ஜெபிக்கிறோம். இதை நீங்கள் செய்தால், கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் இவைகளை ஜனங்கள் செய்திருக்கிறார்களா என்று வாசித்துப் பாருங்கள். நீங்கள் அப்படிச் செய்யும்படியாக நாங்கள் ஜெபிக்கிறோம்.



## பாடம் - 10

# ஏன் நாங்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறோம்?

கர்த்தருடைய பந்தி என்று வரும்போது, இயேசுவும், அப்போஸ்தலர்களும், பஸ்கா பண்டிகையில் பங்கு பெறும்படியாக எருசலேமிலுள்ள மேல் வீட்டில் கூடிவந்த சம்பவத்திற்கு நாம் செல்ல வேண்டியதாயிருக்கிறது. பஸ்கா பண்டிகையானது, ஆட்டுக் குட்டியின் இரத்தம் எந்த இஸ்ரவேலர்களின் வீட்டு வாசல் நிலைக் கால்கள் இரண்டிலும், நிலையின் மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட்டிருந்ததோ அவர்களின் வீடுகளை மரணதூதன் கடந்து போனதை நினைவு கூரும்படியாக வருடந்தோறும் கடைபிடிக்கப்பட்டது (யாத்திராகமம் 12). புதிய ஏற்பாட்டின் வருகையால் இந்தப் பண்டிகை விருந்து முடிந்து போய் விட்டது. இப்பொழுது கர்த்த ருடைய ஜனங்கள் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுகிறார்கள்.

வேத வசனம் இப்படிச் சொல்கிறது, " அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள் " (மத்தேயு 26:26-30).

மாற்கு எழுதின நற்செய்தி நூலில் நாம் இப்படியாக

வாசிக்கிறோம். " அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீர மாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத் திரம் பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களெல் லாரும் அதிலே பானம் பண்ணினார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி; இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன் படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. நான் தேவனு டைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம்பண்ணும் நாள் வரைக்கும் திராட்சப்பழரசத்தை இனி நான் பானம்பண்ணுவதில் லை யென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு கிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டை பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்" (மாற்கு 14:22-16).

கடைசியாக, லூக்கா இது குறித்து இவ்விதமாகப் பதிவு செய்துள்ளார். " வேளை வந்தபோது, அவரும் அவருடனே கூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியிருந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி; நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களு டனே கூட இந்த பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி; நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்; தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப் பழரசத்தைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்" (லூக்கா 22:14-19).

கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்பட்டது பற்றி இந்த மூன்று புத்தகங்களிலும் விவரிக்கப்பட்டிருப்பவைகளிலிருந்து நாம் கவனிக்க வேண்டிய பல காரியங்கள் இருக்கின்றன. முதலாவது; முன்பே குறிப்பிட்டபடி இயேசு அந்த பஸ்கா போஜனத்தை, தம்முடைய சீஷர்களுக்கு ஒரு போஜனம் அல்லது நினைவு கூருதல் விருந்தாக அறிமுகப்படுத்தி, தம்முடைய மரணத்துக்குப் பிறகு

அவர்கள் கைக்கொள்ளும்படியாகப் பயன்படுத்திக் கொண்டார். இயேசு, அப்பம் தன்னுடைய சரீரமாயிருக்கும் அல்லது தன் சரீரத்திற்கு அடையாளமாக இருக்கும் இயேசுவையும், அவருடைய பாடுகளையும் நினைவுகூரும்படியாக இதிலே பங்குபெற வேண்டுமென்றார். தொடர்ந்து, இயேசு அந்தப் பாத்திரம், திராட்சப் பழரசம் தன்னுடைய இரத்தம் என்று சொன்னார்; அதாவது, திராட்ச ரசம் அவருடைய இரத்தத்தை அடையாளப்படுத்தும். மனிதன் தன் பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெறும்படி கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டது என்று அந்த திராட்சரசத்தை பானம் பண்ணும்போது நினைவுகூரப்படும். இந்த வசனப்பகுதியில், இயேசுவால் பேசப்படும் அப்பமானது, ஒருவேளை நாம் கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றால் கூட இயேசுவின் உண்மையான சரீரமாகாது. அது போலவே பாத்திரம், அந்த திராட்ச பழரசம் இயேசுவின் உண்மையான இரத்தமாகாது. ஆனால், அவைகள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுபவர்களுக்கு கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் அடையாளப்படுத்தும் அல்லது ஞாபகப்படுத்தும். பஸ்காவானது புளிப்பில்லா அப்பத்தையும், திராட்சப்பழரசத்தையும் உள்ளடக்கியது என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டும். கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் பஸ்காவை அனுசரித்து அதே நேரத்தில், தன்னுடைய சொந்த பந்தியை ஏற்படுத்தும்படியாய் அப்பத்தையும், திராட்சரசத்தையும் பயன்படுத்தினபடியால், கர்த்தருடைய சரீரத்தையும், இரத் தத்தையும் நினைவுகூரும்படியாய் நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்போது, புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் இன்றளவும் பயன் படுத்துகிறோம். இரண்டாவது, இயேசு தம்முடைய சீஷர்களிடம், தான் தேவனுடைய ராஜ்யத்தில் நவமான ரசத்தைப் பானம் பண்ணும் நாள் வரைக்கும் திராட்ச ப்பழரசத்தை இனி பானம் பண்ணுவதில்லையென்று சொன்னார். இதன் பொருள், இயேசு விரைவில் காட்டிக் கொடுக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் இரத்தம் சிந்துவார் என்பதே. அதன் பிறகு அவர் அடக்கம் பண்ணப்பட்டு, மூன்று பகல், மூன்று இரவுகளுக்குப் பிறகு கல்லறையிலிருந்து எழுந்து, சீஷர்களுக்கும் வேறு சிலருக்கும் தரிசனமாகி, பின்பு பரலோகத் திலிருக்கிற பிதாவினிடத்தில் இயேசு திரும்பிச் செல்வார்.

தேவனுடைய ராஜ்யம் அல்லது சபை எருசலேமில் ஸ்தாபிக்கப் பட்டு, அங்கே இருந்து உலகம் முழுவதிற்கும் பரம்பும். சபை ஏற்படுத்தப்பட்டவுடனேயே நாம் இப்படி வாசிக்கிறதை தயவு செய்து கவனியுங்கள். "*அவர்கள் அப்போஸ்தலருடைய உப தேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்*" (அப்போஸ்தலர் 2:42). இங்கே அப்பம் பிட்குதல் என்பது கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதைத் தான் குறிக்கிறது. கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் வரவிருக்கின்ற ராஜ்யம் அல்லது சபையின் பந்தியில் பங்கு பெறும் போது, அவர்களோடு இருப்பதாக வாக்குத் தத்தம் செய்தார். நிச்சயமாகவே, இயேசு அப்போது தான் சரீரப் பிரகாரமாக அவர்களோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்ய வில்லை; ஆனால், அவர்களோடு இருந்தார், இன்றும் அவர் ஆவியில் தம்முடைய ஜனங்களோடு இருக்கிறார். இரண்டு பேராவது, மூன்று பேராவது அவருடைய நாமத்தினாலே எங்கே கூடியிருக் கிறார் களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருப்பதாக இயேசு சொன்னார் (மத்தேயு 18:20). மறுபடியும், நம்முடைய மரணபரியந்தம் நம்மோடிருப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (மத்தேயு 28:20). ஆகையால், சபை இருக்கிறது. கர்த்தருடைய மக்களாக நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் போது இயேசு நம் மோடிருக்கிறார்.

இப்போது என்னோடு I கொரிந்தியர் 11:23-29 வசனங்களுக்கு திருப்பிக் கொள்ளுங்கள். அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை நாம் வாசிப்போம். "*நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணினபின்பு, அவர் அந்தப் படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப்பாத்திரம் என் இரத்தத் தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப்*

*புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்த ருடைய அப்பத்தை புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து குற்ற முள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித் தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜ னபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்".*

மேலே உள்ள வசனப்பகுதியில், நாம் விசேஷமாக கவனம் செலுத்த வேண்டிய காரியங்கள் இருக்கின்றன. முதலாவது, பவுல் தான் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட செய்தியை கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு ஒப்புவித்ததாக சொன்னார். இரண்டாவதாக, கிறிஸ்துவின் சரீரத்தை நினைவு கூரும்படி அப்பத்தைப் புசிக்க வேண்டுமென்றும், கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூரும்படி பாத்திரத்தில் பானம் பண்ண வேண்டும் என்றார். ஏனென்றால், கிறிஸ்துவின் இரத்தம், கிறிஸ்துவின் பிரமாணம் அல்லது புதிய ஏற்பாட்டை உறுதி செய்யும்படியாக சிந்தப்பட்டது. மூன்றாவதாக, எவ்வளவுக்கதிகமாக அல்லது அடிக்கடி அவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறார் களோ, அப்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், எவ்வளவுக்கதிகமாக அல்லது அடிக்கடி என்பதின் பொருள் என்ன? அப்போஸ்தலர் 20:7 -ல் பவுல் அப்பம் பிட்கும், நோக்கத்திற்காக துரோவாவில் கிறிஸ்தவர்களோடு கூடின உதாரணம் நமக்கு இருக்கிறது. வாரத்தின் முதல் நாள் என்பது எத்தனை நாட்களுக்கு ஒரு முறை வருகிறது? வாரத்திற்கு ஒரு முறை. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படி ஆதிக் கிறிஸ்தவர்கள் வாரத்திற்கு ஒரு முறை கூடியிருக்கிறார்கள். இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் இந்த உண்மை பொருந்துகிற தாகவே இருக்கிறது. நாம் வியாழக்கிழமைகளிலோ அல்லது மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது மாதத்திற்கு ஒரு

முறையோ சபையாகக் கூடி வருவதற்கு நமக்கு அதிகாரமில்லை. மாறாக, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படியாக வாரத்தின் முதல் நாளில் கூடினார்கள் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வாரத்திற்கும் முதல் நாள் என்று இருக்கிறபடியால் கிறிஸ்துவை நினைவுகூரும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறும்படி கூடி வந்திருக்கிறார்கள். நாம் அவர்களுடைய மாதிரியை பின்பற்றுகிறவர்களாக இருந்தால் இன்னும் நாம் அதே காரியத்தைப் பின்பற்ற வேண்டும்.

நான்காவதாக, கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கேற்கும் போது, நாம் இரட்சிக்கப்படும்படியாகவும், நித்திய ஜீவனின் நம்பிக்கையைப் பெறும்படியாகவும் தியாகங்கள் செய்த இயேசு வை நினைவு கூரும்படி அந்த சிலுவையைத் திரும்பி பார்க்கிறோம். நாம் அப்பம் பிட்கும்போது நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக் கிறோம் என்றும் அவர் மீண்டும் வருவார் என்பதைத் தெரிவிப்பவர் களாகவும் இருக்கிறோம்.


ஐந்தாவதாக, நாம் அபாத்திரமாய் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற்றால் அதாவது, கர்த்தருக்கு உண்மையில்லாதவர்களா யிருந்து, நாம் செய்கிறவைகளில் நேர்மையில்லாதவர்களா யிருந்தால், கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் தவறாகப் பயன்படுத் திய குற்றவாளிகளாயிருப்போம். வேறுவிதமாகச் சொன்னால், நாம் அபாத்திரமாய்க் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றால் நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்பை வருவித்துக் கொள்கிறோம். அதன் பொருள், நாம் பந்தியில் பங்கேற்கும் முன்பு பூரணமாயிருக்க வேண்டும் என்பதல்ல. ஆனால், கர்த்தருடைய பந்தி நமக்கும், கர்த்தருக்கும் சரியானதாக இருக்க வேண்டுமானால் நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டுவது மிகவும் அவசியம்.

ஆறாவதும் கடைசியுமாக, நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்கு முன்பு, நம்மை நாமே சோதித்தறிவது மிகவும் முக்கியம். இதன் மூலம் நம் இருதயமும், வாழ்க்கையும் தேவனுக்கு முன்பாக சரியாக இருக்கிறதா என்று நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும். நம்மால் முடிந்தவரை, நாம் சிறந்ததை செய்கிறோம் என்று அறியும் போது தான், நாம் கர்த்தருக்கு

உண்மையுள்ளவர்களாலிருக்கிறோம் என்று பொருள்படும். அப்போது தான், நாம் பந்தியில் பங்கு பெற வேண்டும். கர்த்தர் நம்மிடமிருந்து எதை எதிர்பார்க்கிறாரோ அதை அடிப்படையாக வைத்து நாம் அவருக்கு உண்மையாயிருக்கிறோம் என்று நேர்மை யான இருதயத்தோடு சொல்ல முடியாவிட்டால், நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, தொடர்ந்து வாரந்தோறும் கர்த்தருடைய ஜனங்களோடு கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்கு முன்பு கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

என் நண்பர்களே, கர்த்தருடைய சபையில் அங்கம் வகிக்கும் ஒரு கிறிஸ்தவனுக்கு கர்த்தருடைய பந்தி மிக முக்கியமானது. இது கிறிஸ்துவை நினைவுகூருவதற்கும், அவரிடத்தில் உண்மையா யிருப்பதற்கும் ஒரு வழியாக இருக்கிறது. இது மற்றவர்கள் பார்க்க வேண்டுமென்பதற்காக ஆகாரமாகப் புசிக்க வேண்டிய ஒன்றல்ல, அல்லது அதன் நோக்கத்தை புரிந்து கொள்ளாமல் பங்கு பெற வேண் டிய ஒன்றும் அல்ல. இது கிறிஸ்தவனை பலப்படுத்து வதற்காகவும், அதே நேரத்தில் கர்த்தருடையபந்தி மூலமாக, மற்றவர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வருவதற்கான ஒரு வாய்ப்பாகவும் கொடுக்கப்படுகிறது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கர்த்தருடைய பந்தி உங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது? நீங்கள் கர்த்தருடைய ஜனங்களோடு வாரத்தின் முதல் நாள் தோறும் அப்பம் பிட்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் ஒரு கிறிஸ்தவராகும்படி உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறோம். அதை நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்காக தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு, முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதினால் செய்ய முடியும் (மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38). ஒரு கிறிஸ்தவனாக கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தினராக, கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவித்துக் கொண்டு, வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறலாம். இதன் மூலம் கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தை உறுதி செய்து கொள்ள முடியும் ; மாத்திரமல்ல, கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தை உலகிற்குப் பறைசாற்றவும் முடியும்.



## பாடம் - 11

# ஏன் நாங்கள் குரல் இசையை மட்டும் ஆராதனையில் பயன்படுத்துகிறோம்?

கிறிஸ்துவின் சபையாராகிய நாங்கள் மற்ற மார்க்கப்பிரிவினை சபைகளிடமிருந்து வித்தியாசப்படுகிறோம், எங்களுடைய ஆராதனை ஒழுங்கில், வெறுமனே பாடல் மட்டும் தான் உண்டு. அதாவது, நாங்கள் பாடலோடு இசைக்கருவிகளை பயன்படுத்துவது கிடையாது. ஏதோ மற்றவர்களிடமிருந்து நாங்கள் வேறுபட்டிருக்கிறோம் என்று காட்டுவதற்காக நாங்கள் பயன்படுத்துவதில்லை என்பது கண்டிப்பாக தவறானது. மாறாக, எங்களுடைய ஆராதனை ஒழுங்கில் பாடல் மட்டும் இருப்பதற்குக் காரணம், வேதாகமம் இப்படித்தான் போதிக்கிறது.

இசை இரண்டு வகைப்படும். ஒன்று வாய்வழியான குரல் இசை, மற்றொன்று கருவிகளால் வரும் இசை. குரல் இசை மனித குரல்களின் கலவையால் ஏற்படும் ஒரே மாதிரியான இசை. இது தான் உலகிலேயே மிக அழகான இசை. இவ்வகையான இசை தேவனுடைய படைப்பிலிருந்து வருகிறது. இது ஆத்துமாவிலிருந்து வருகிறது. இது நம் சிருஷ்டிகராகிய தேவனுக்கு துதிகளாக ஏறெடுக்கப்படுகிறது. இது ஆவியாலும், ஜீவனாலும் நிறைந்திருக்கிறது. இசைக்கருவிகளைக் கொண்டு உண்டாக்கப்படும் இசை மனிதனால் உண்டாக்கப்பட்ட கருவிகளிலிருந்து வருகிறது. அந்த இசைக்கருவிகள் உயிரற்றவை. அவைகளுக்கு ஆற்றலும் இல்லை. உணர்வுமில்லை. அவைகள் சத்தமிடுவதற்கு ஒரே காரணம், மனிதன் அவைகளை அடிக்கிறான், இழுக்கிறான் அல்லது வாசிக்கிறான். இப்போது கேள்வி இது தான். தேவன் தன்னுடைய படைப்பான மனிதன் தன்னை துதிக்க வேண்டும் என்று விரும்புகிறாரா அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்டவைகளால் தான் துதிக்கப்படவேண்டும் என விரும்புகிறாரா?

அவருக்கு எது அதிக அர்த்தமுள்ளதாயிருக்கும்? எபிரெய எழுத்தாளர் இப்படிச் சொல்கிறார். ஆகையால், "*அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்*" (எபிரெயர் 13:15). நம் உதடுகளின் கனிகளால் தேவனைத் துதிக்க வேண்டும் என்று ஆசிரியர் சொல்வதை கவனியுங்கள். நம்முடைய உதடுகளின் கனி என்னவாயிருக்கும்? நம் பேச்சு, பாடல், ஜெபங்கள், துதி வார்த்தைகள் போன்றவைகளே. இவைகளெல்லாம் யாருக்கு ஏறெடுக்கப்பட வேண்டும்? நிச்சயமாக தேவனுக்கு ஏறெடுக்கப்பட வேண்டும்.

உதடுகளின் கனியால் தேவனைத் துதிக்கிற கருத்தை நாம் தொடர்ந்து பார்க்கும் போது பவுல் இப்படிச் சொல்கிறார், "*சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினா லும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து*" என்று சொல்கிறார் (எபேசியர் 5:19,20). இங்கே பல்வேறு வகையான பாடல்களினால் ஒருவருக்கொருவர் புத்திச் சொல்லுதல் பற்றி பவுல் பேசுகிறதை கவனியுங்கள். அந்தப் பாடல்கள் ஆவிக்குரியவைகளாகவும், வேதவசனத்தின் அடிப்படையில் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார். கடைசியில், குறிப்பாக இந்தப் பாடல்கள் பாடப்பட வேண்டும் என்றும், இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணவேண்டும் என்கிறாரே தவிர இசைக்கருவிகளினால் அல்ல. கிறிஸ்தவர்கள் இசைக் கருவிகள் இல்லாமல் பாடல் மாத்திரம் பாடி, தேவனை ஆராதிக்க முடியுமா? அநேகமாக நீங்கள் முடியும் என்று சொல்வீர்கள். ஆனால், இசைக்கருவிகளோடு பாடல் பாடுவது பற்றி எப்படி? வேத வசனங்கள் அப்படிப் பாடலாம் என்று போதித்தால் அது நன்றாக இருக்கும். ஆனால், அதற்கான வேத வாக்கியங்கள் எங்கே இருக்கிறது? வேத வசனங்கள் அப்படிப் போதிக்கவில்லையென்றால், பாடும் போது இசைக் கருவிகளோடு பாடினால், நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்கிறவர்களா இருக்க முடியுமா?

மறுபடியும், பவுல் இப்படிச் சொல்கிறார். " *கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் போதித்து, புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடி* " (கொலோசெயர் 3:16). இப்போது பவுல் இங்கே என்ன சொல்கிறார்? கிறிஸ்துவின் வசனத்தை வலியுறுத்துகிறார், ஆவிக்குரிய வேத வசனத்தின் அடிப்படையிலான பாடல்களினால் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்ல வேண்டும் என்கிறார். இது உண்மையாயிருக்க, இங்கே பவுலின் வாக்கியத்தில் இசைக் கருவிகளைப் பயன்படுத்தலாம் என்று ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதை உங்களால் காண முடிகிறதா? அப்படியில்லையென்றால், ஆராதனையில் தேவனைத் துதிக்கும்படியாக இசைக் கருவிகளைப் பயன்படுத்தும் போது தேவனுடைய வார்த்தையோடு கூட்டுகிற வேலையைச் செய்வதாக இருக்காதா?

ஆனால், அதில் எந்தத் தவறையும் நாங்கள் காணவில்லை என்று நீங்கள் விவாதிக்கலாம். உங்களைப் போல வேறொருவரும் இதில் எந்தத் தவறும் இல்லையே என்று கூறலாம். இது அப்படியே தொடரலாம். இங்கே கவனிக்க வேண்டியது நாம் தேவனுடைய வார்த்தையின் போதனையின்படி நடக்க வேண்டும் என்பதே. அப்படி நாம் நடக்கவில்லையென்றால் ஒன்றைக் குறித்து ஏன் கவலைப்பட வேண்டும்?

இசைக்கருவிகள் வாசிப்பது உங்களுக்கு பிடித்திருக்கிறது என்று நீங்கள் கூறலாம் அல்லது இசைக்கருவிகளை வாசிக்கும் திறமை பெற்றவர்களின் நிலை என்ன? இசைக்கருவிகளை இசைப்பதன் மூலமாக அவர்கள் கர்த்தரைத் துதிப்பதால் தேவன் கனப்படுத்தப்படமாட்டாரா? இங்கே பிரச்சனை, நான் என்ன விரும்புகிறேன் என்பதல்ல. மாறாக, என்னத்தை தேவன் எதிர்பார்க்கிறார் என்பது தான். ஒருவருக்கு இசைக்கருவிகளை வாசிக்கும் திறமை இருக்கிறதென்பதற்காக அவருக்கு தேவனைத் துதிக்கும்படி இசைக் கருவிகளை வாசிப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டால், வழக்கத்திற்கு மாறான திறமைகளைக் கொண்டுள்ள வேறுபலரை என்ன செய்வது? அந்தத் திறமைகள்

எல்லாவற்றையும் கர்த்தருக்கு ஏறெடுக்கும்படியாக அவைகளை ஆராதனைக்குள் கொண்டு வரலாம் என்று வாதிடுவோமா? இங்கே நான் சொல்லும் கருத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறேன்.

மறுபடியும், வீட்டில் ஒருவன் இசைக்கருவிகளைக் கொண்டு இசைக்கப்படும் இசையைக் கேட்டால், நிச்சயமாக ஆராதனையிலும் அதைப் பயன்படுத்தலாம் என்று வாதிடப்படுகிறது. உண்மை என்னவென்றால், வீட்டில் அநேகப் பொருட்கள் இருக்கின்றன. அவைகளை ஆராதனைக்கு நாம் எடுத்துச் செல்ல முடியாது. என் குடும்பத்துக்கும், எனக்கும் இசை மிக விருப்பம், வழக்கமாக நாங்கள் வானொலியில் இசையைக் கேட்போம். ஆனால், ஆராதனை என்று வரும்போது எங்களுக்கு பிரியமான காரியங்களை செய்வதை நிறுத்தி விட்டு கர்த்தருக்கு பிரியமான காரியங்களைச் செய்ய ஆரம்பிப்போம். வீட்டில் ஐஸ்கிரீமும், ஐஸ் டீயும் குடிக்க விரும்புவோம். ஆனால், ஆராதனையில் அவைகளைச் செய்ய முயற்சிப்பது தகுதியாயிராது என உணர்ந்து கொள்கிறோம்.

ஆராதனையில் இசையைப் பயன்படுத்துவதற்கு ஆதரவாக செய்யப்படும் முக்கியமான வாதம் தாவீதும் மற்றவர்களும் பழைய ஏற்பாட்டில் அப்படிப் போதித்திருக்கிறார்கள் என்பது. அவர்கள் அப்படிப் போதித்திருக்கிறார்களா? இல்லையா என்பது ஒருபுறமிருக்கட்டும். உண்மை என்னவென்றால், கிறிஸ்து சிலுவையில் மரித்து பழைய பிரமாணத்தை எடுத்துப்போட்டு புதிய பிரமாணத்தைத் தந்துவிட்டபடியால் பழைய பிரமாணம் இப்போது நம்மை கட்டுப்படுத்துவதில்லை. நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின என்று வாசிக்கிறோம் (யோவான் 1:17). நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், நியாயப் பிரமாணம் ஒழிந்து போகாது என்று இயேசு சொன்னார் (மத்தேயு 5:17,18). நியாயப்பிரமாணத்தை அகற்றிப் போடும்படி கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அதை நிறைவேற்றினார் (கொலோசெயர் 2:14). காரியம் இப்படி இருக்க, சங்கீதத்தையோ வேறு எந்த பழைய ஏற்பாட்டு வசனப்பகுதியையோ ஆராதனையில் இசைக்கருவியுடன் கூடிய பாடலை

நியாயப்படுத்த பயன்படுத்த முடியாது. பழைய ஏற்பாட்டுக் காலங்களில் செய்யப்பட்ட அநேக காரியங்களை நிகழ்காலத்தில் நம்மால் செய்ய முடியாது, செய்யக்கூடாது.

ஆராதனையில் இசை பயன்படுத்தப்படுவதை நியாயப் படுத்த செய்யப்படும் மற்றுமொரு வாதம், பரலோகத்தின் இசை இருக்கும் என்பது தான். பரலோகத்தில் இசை இருக்குமானால், பூமியில் ஆராதனையில் இசையைப் பயன்படுத்த முடியும் என்று முடிவு செய்கிறார்கள். நிச்சயமாக, இசைக்கருவிகளைக் கொண்டு இசைக்கப்படும் இசையைப் பற்றி தான் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், வெளிப்படுத்தின விசேஷத்திலோ அல்லது வேறு எங்குமோ மனிதனால் உண்டாக்கப்பட்ட சொல் அர்த்த ரீதியிலான இசைக்கருவிகள் இருக்குமென்று எங்கே சொல்லப் பட்டிருக்கிறது? அப்படியே, பரலோகத்தில் இசை இருந்தாலும், இன்று கர்த்தர் ஆராதனையில் பயன்படுத்த அதை அனுமதித்தார் என்று பொருள்படாது. உண்மையில், பரலோகத்தில் இருக்கிற அநேக காரியங்களுக்கு இந்த பூமியில் நமக்கு அனுமதி இல்லை. இன்றைக்கு, குறிப்பாக, தேவன் ஆராதனையில் என்னத்தை எதிர் பார்க்கிறார் என்பதும், பரலோகத்தில் என்னவெல்லாம் காணப்பட லாம் என்பதும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை.

வேத வல்லுநர்களும், மாபெரும் மதத்தலைவர்களும் அநேக வருடங்களாக ஒத்துக் கொள்ளுகிற ஒரு காரியம், வேத வாக்கியங் களிலிருந்தோ அல்லது வேறு ஏதாவது நம்பத்தகுந்த ஆதாரங்களி லிருந்தோ முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தங்கள் ஆராதனை யில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கு எந்த ஒரு குறிப்போ, அடையாளமோ இல்லை என்பது தான்.

எனவே, இந்தத் தலைவர்களில் அநேகர், அவர்கள் வாழ்ந்த காலத்தின் மக்களோ அல்லது இன்றைய நாளில் வாழும் மக்களோ தேவனுக்கான ஆராதனையில் இசைக்கருவிகள் கூடாதென்று முடிவெடுத்தார்கள். உதாரணமாக, கத்தோலிக்க சபை கடைசியாக பிரிந்தது. அப்படிப் பிரிந்ததற்கான காரணங்களில் ஒன்று தேவனை துதிப்பதற்கு பாடல்கள் பாடும்போது இசைக்கருவிகள் பயன் படுத்தப்படலாமா? வேண்டாமா? என்பது. இசைக்கருவிகளின் துணையோடு பாடல் வேண்டும் என்றுணர்ந்த கூட்டம் ரோமன்

கத்தோலிக்க சபை என்று அழைக்கப்பட்டது, இன்றும் இவர்கள் இசைக்கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். இசைக்கு எதிர்ப்பு தெரிவித்த மற்றுமொரு கூட்டம் கிரேக்க ஆர்த்தோடெக்ஸ் சபை என்றழைக்கப்பட்டது, இன்றளவும் அவர்கள் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதில்லை. பின்பு, சீர்திருத்த மற்றும் புரோட்டஸ்டண்ட் இயக்கங்களைச் சேர்ந்த மார்ட்டின் லூதர், ஜான் வெஸ்லி போன்றோர் தேவனுடைய பரிசுத்த வார்த்தையில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி ஆராதனைக்காக தேவனுடைய தெய்வீகத்திட்டத்திற்கு எதிராக இதுபோன்ற இசைக்கருவிகள் சேர்ப்பதை வெளிப்படையாக எதிர்த்தார்கள்.

தேவனுடைய வார்த்தைக்கு நாம் திரும்பும் போது, நாம் வாசிக்க வேண்டிய அநேக வேத வசனப் பகுதிகள் இருக்கின்றன. கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்பட்ட பிறகு கர்த்தரையும், சீஷர்களையும் பற்றி சொல்லப்பட்டிருக்கிற வாக்கியத்திலிருந்து நாம் இங்கே ஆரம்பிப்போம். "*அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப்பாடின பின்பு, ஒலிவ மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்*" (மத்தேயு 26:30). பவுலும், சீலாவும் கர்த்தருடைய வேலையைச் செய்ததற்காக அடிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, அவர்களுடைய கால்களைத் தொழுமரத்தில் மாட்டி வைத்த நிலையில், வேத வசனம் இப்படிச் சொல்கிறது. "*நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்*" (அப்போஸ்தலர் 16:25). பவுல் கொரிந்து கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதுகிறார். "*என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்*" (I கொரிந்தியர் 14:14,15).


யாக்கோபு, "*உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்*" என்று சொல்கிறார் (யாக்கோபு 5:13). வெளிப்படுத்தின

*விசேஷப் புத்தகத்தில் பாடல் பற்றி அநேக வாக்கியங்கள் உள்ளன. யோவான் இப்படி எழுதுகிறார். " எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர் ; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்"* (வெளிப்படுத்தின விசேஷம் 5:10). அவர்கள் *"தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும், ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்"* (வெளிப் படுத்தின விசேஷம் 15:3). முன்பே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறபடி வெளிப் படுத்தின விசேஷம் பரலோகத்தில் யோவான் எப்படி கேட்டார் என்று சொல்கிறதை, *" சுரமண்டலக்காரர் தங்கள் சரமண்டலங் களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது"* என்றும் (வெளிப்படுத் தின விசேஷம் 14:2), அத்தோடு பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும் ஒரு சத்தம் வானத்தி லிருந்து உண்டாகக் கேட்டேன் என்றும் யோவான் சொல்வதை தயவு செய்து கவனியுங்கள். தொடர்ந்து நான்கு ஜீவன்கள் பற்றியும் பேசுகிறார். *"அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக் கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது "* (வெளிப்படுத்தின விசேஷம் 14:3). இங்கும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதும் யோவான், தான் பரலோகத்தில் கண்டதையும், கேட்டதையும் மனிதனுக்கு தெரிவிக்க முயற்சித்து ஏராளமான உருவக நடையைப் பயன்படுத்துகிறார். எனவே, யோவான் பெருவெள்ள இரைச்சலைப் போலவும், பலத்த இடி முழக்கம் போலவும், சுரமண்டல ஓசையைப் போலவும் சத்தத்தைக் கேட்டார்; ஆனால், சொல் அர்த்த ரீதியிலான, பூமிக்குரிய இசைக்கருவிகள் பரலோகத்தில் வாசிக்கப்பட்டது அல்லது இசைக்கப்பட்டது என பொருள் படும்படி அவர் எதையும் சொல்லவில்லை.

எனவே, பாடுகிற காரியமாக இருந்தாலும் சரி, தேவனை நாம் ஆராதிக்கும் போது இசைக்கருவிகளை பயன்படுத்திப்பாடும் பாடலானலும் சரி, அது அதிகாரம் சம்மந்தப்பட்ட ஒன்றாக இருக்கிறது. வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே பேசி,

வேதாகமம் எங்கே அமைதியாக இருக்கிறதோ அங்கே நாம் அமைதியாக இருப்போமோ அல்லது தேவன் என்ன சொல்லியிருந் தாலும் பரவாயில்லை, நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ அதைச் செய்ய முன் வருவோமா? வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் கிறிஸ்துவுக்கு இருக்கிறது என்று வேதாகமம் பேசி யிருக்கிறபடியால், கிறிஸ்து எல்லாவற்றைக் குறித்தும் பேசியிருக் கிறார். ஆகவே, நாம் அவரையும், அவருடைய வார்த்தையையும் மதித்து, அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு அப்பால் போகக்கூடாது. ஆகையால், ஆராதனையில் நம்முடைய இசையை வெறும் வாய் ரீதியான பாடலோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்போது மட்டும் தான், தேவன் நம்முடைய காரியங்களில் பிரியப்படுவார் என்று நிச்சயப்படுத்திக் கொள்ளமுடியும்.

நீங்கள் தேவனை எப்படி ஆராதிக்கிறீர்கள்? ஆராதனை மிகவும் முக்கியம் என்பது உங்களுக்கு தெரியும். நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? அப்படி இல்லையென்றால் நீங்கள் ஒரு கிறிஸ்த வராக மாற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று கிறிஸ்து சொன்னார் (மாற்கு 16:16). அதன் பின்பு, " *இரட்சிக் கப்பட்டவர்களை கர்த்தர் சபையிலே சேர்க்கிறார் என்று வாசிக்கி றோம்"* (அப்போஸ்தலர் 2:47). இரட்சிக்கப்பட்ட ஒரு நபராக, ஒரு கிறிஸ்தவனாக, கர்த்தருடைய சபையின் அங்கத்தினராக, நீங்கள் தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க முடியும் (யோவான் 4:24).



## பாடம் - 12

# ஏன் நாங்கள் ஜெபத்தில் நம்பிக்கை வைக்கிறோம்?

ஜெபம் என்பது ஒரு வேதாகம மைய நோக்கம். ஜெபம் என்பது தேவனிடம் பேசுவது, சொல்வது அல்லது தேவனிடம் வேண்டிக் கொள்வது என விளக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இப்படிச் சொல்லியுள்ளார். " *நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்* " என்று (பிலிப்பியர் 4:6).

தேவனுடனான நம் உறவில், அவர் நம் தகப்பனாயிருக்கிறார், கிறிஸ்தவர்களாகிய நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். தேவனைப் பொறுத்தவரை அவருக்கு எதுவும் தேவை இல்லை. அவர் நித்தியமானவர், சர்வவல்லவர். அவர் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றும், உறைவிடமுமாயிருக்கிறார். எனவே தான், யாக்கோபு இப்படிச் சொல்கிறார். " *நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை* " (யாக்கோபு 1:17). பிள்ளைகளாயிருக்கும் நமக்கு தேவன் தேவை. தேவன் நம் தகப்பனாயிருக்கிறார். நாம் நம்முடைய எல்லாத் தேவைகளுக்கும், சோதனைகளை மேற்கொள்வதற்கான உதவிக்கும், பாவம் செய்யும் போது பாவமன்னிப்படைவதற்கும் நாம் தேவனிடம் செல்ல வேண்டும்.

இப்போது ஜெபம் பற்றியும், கர்த்தரிடம் விண்ணப்பம் செய்வது பற்றியும், நம்முடைய ஜெபங்களைக் கேட்டு பதிலளிப்பதாக அவர் தந்திருக்கும் உத்திரவாதம் பற்றியும் பேசுகின்ற சில வேத வசனங்களை நாம் பார்க்கலாம். கிறிஸ்து தம்முடைய நாட்களில்

வாழ்ந்த சீடர்களிடம் இப்படிச் சொன்னார். " *நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தி னாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்*" (யோவான் 14:13, 14). மறுபடியும் இயேசு, " *நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும், நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்*" (யோவான் 15:7,8) என்று சொன்னார்.

இயேசு இவ்விதமாகவும் சொன்னார். " *நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவை கேட்டுக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்க, நீங்கள் போய்க்கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும் படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்*" (யோவான் 15:16).

மலைப்பிரசங்கத்தின் போது இயேசு, " *கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப் படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்*" என்றார் (மத்தேயு 7:7,8)

அப்போஸ்தலனாகிய யோவான், " *நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக் கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக் கிறோம்*" (I யோவான் 5:14,15) என எழுதியுள்ளார்.

மேலே நாம் வாசித்த வேத வாக்கியங்களிலிருந்து நாம் எப்படிப்பட்ட விண்ணப்பத்தைச் செய்தாலும், எவ்வித முன் நிபந்தனைகளும் விதிக்காமல், கர்த்தர் நம்முடைய ஒவ்வொரு ஜெபத்திற்கும் பதில் அளிப்பார் என்று நாம் முடிவுக்கு வரமுடியும். ஆனால், வேத வாக்கியங்களை நாம் சற்று நெருக்கமாகப் பார்க்கும் போது, தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஜெபத்தையும், தேவன் கேட்டு பதில் தரக்கூடிய ஜெபத்தையும் செய்வதில் எண்ணற்ற காரியங்கள் சம்பந்தப்பட்டிருப்பதை நாம் காணலாம்.

முதலாவது, ஒருவருடைய ஜெபத்திற்கு பதில் கிடைக்க வேண்டுமானால் அவர் கிறிஸ்தவனாக, தேவனுடைய பிள்ளை யாக இருக்கவேண்டும் என்று வேத வசனங்கள் போதிக்கின்றன. "*பாவிகளுக்கு தேவன் செவி கொடுப்பதில்லை" யென்று யோவான் 9:31-ல் நாம் வாசிக்கிறோம்.* பாவிக்கு தேவன் ஏன் செவி கொடுக்க மாட்டார்? பாவத்தின் காரணமாக தேவனுக்கும், அவரிடத்தில் ஜெபிக்க முயற்சிக்கும் தனிப்பட்ட நபருக்கும் இடையில் பாவம் வருகிறது. நீண்ட காலத்திற்கு முன்பு தீர்க்கதரிசி இப்படியாகச் சொன்னார். "*இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது*" (ஏசாயா 59:12). மறுபடியும், ஒரு பாவி, தான் தேவனுடைய பிள்ளையாக இல்லாத போது, அந்த தேவன் தன்னுடைய தகப்பனாக இல்லாத போது எப்படி தேவனை அணுக முடியும்? ஒரு பாவி தேவனிடத்தில் ஜெபித்து, தேவன் தன் ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதிலளிப்பார் என எதிர்பார்த்தால், ஒரு கிறிஸ்த வனுக்கு, கிறிஸ்தவனல் லாதவனை விட என்ன மேன்மை இருக்கும்? தேவனிடத்தில் ஜெபிப்பது என்று வரும் போதும், தேவன் அந்த ஜெபத்தைக் கேட்டு பதிலளிப்பார் என்று நம்பிக்கை கொள்ளும்போதும், சிலர் நினைப்பதற்கு மாறாக, ஒருவன் கிறிஸ்தவனாக இல்லாமல் இருப்பதற்கும், ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

இரண்டாவது, ஒரு தேவனுடைய பிள்ளையின் ஜெபங்கள் கேட்கப்பட வேண்டுமானால், அவன் நீதியுள்ளவனாகவும், உண்மையுள்ளவனாகவும் இருக்கவேண்டுமென்று தேவனுடைய வார்த்தை போதிக்கிறது. பேதுரு தன்னுடைய நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதினார். "*கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிற வர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது*" (I பேதுரு 3:12). ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்தாலோ அல்லது தேவனை விட்டு வழிதப்பிப் போனாலோ அவன் மனந்திரும்ப, தன் தவறுகளை அறிக்கையிட்டு, அவன் மன்னிப்பைப் பெறும்படி

*கர்த்தரிடத்தில் ஜெபிக்கவேண்டும். யாக்கோபு இப்படிச் சொல்கிறார். " நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்கோபு 5:16).*

மாய வித்தைக்காரனாகிய சீமோன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, தேவனுடைய பிள்ளையாக மாறின பிறகு, சில குறிப்பிட்ட சமாரிய கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையை பெறும்படி பேதுருவும், யோவானும் அவர்கள் மீது கைகளை வைக்கக் கண்டு, தேவனுடைய வரத்தைப் பணத்தினால் வாங்க முயற்சித்தான். அதற்கு பின்பு என்ன நடந்தது என்பதை கவனியுங்கள் " *பேதுரு அவனை நோக்கி; தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை, ஆகையால், நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக் கொள்; ஒரு வேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாக காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன் : நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான் (அப்போஸ்தலர் 8:20-24).* சீமோன் மனந்திரும்பி, மன்னிப்பு கேட்டிருக்காவிட்டால் அவன் தேவனிடத்தில் தொடர்ந்து ஜெபித்து, தேவன் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக நடந்திருக்க முடியும் என்று நம்மால் ஒரு நிமிடம் கற்பனை செய்து பார்க்க முடியுமா? நிச்சயமாக அப்படி நடந்திருக்காது.

மூன்றாவது, அவரைப் பின்பற்றுபவர்கள் தங்களுடைய ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு வெறுமனே அவரிடத்தில் வேண்டிக் கொண்டால் போதுமானதாயிருந்தது என்பது போல் தெரியும். ஆனால், வசனங்களைக் கவனித்தால், அந்த வசனங்களில் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருப்பதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்போ, கர்த்தர் அதற்கான குறிப்பிட்ட நிபந்தனைகளைத் தந்துள்ளதைக் காணலாம். உதாரணத்திற்கு, கிறிஸ்து, " *என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்"* என்று யோவான் 14:14-ல் சொன்னார். ஆனால், அடுத்த வசனத்

திலேயே கிறிஸ்து, " *நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்"* என்று சொன்னார். தேவனுடைய பிள்ளை தேவனிடத்தில் எதை வேண்டிக்கொண்டாலும் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து கற்பனைகளை கைக்கொள்ளவில்லையென்றால், கர்த்தர் எதையாவது கொடுப்பார் என் கற்பனை செய்து பார்க்க முடியுமா? யோவான் 15:7-ல் இயேசு இப்படியாகச் சொன்னார். " *நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்"* என்று.

ஒருவர் கர்த்தருக்குள் நிலைத்திருந்து, கர்த்தருடைய வார்த்தை அவருக்குள் நிலைத்திருந்தால், அந்த நபர் எப்படிப்பட்டவராயிருப்பார்? நிச்சயமாக அப்படிப்பட்டவர் ஓர் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளையாயிருப்பார். ஆனால், ஒருவர் கர்த்தருக்குள் நிலைத்திராமல், கர்த்தருடைய வார்த்தை அவருக்குள் நிலைத்திராமல் இருந்தால், அந்த நபருடைய வேண்டுதலுக்கு கர்த்தர் பதில் கொடுப்பாரா? நிச்சயமாகக் கொடுக்க மாட்டார்.

யோவான் 15:16 -ல் இயேசு, " *நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்"* என்று சொன்னார். ஆனால், இந்த வசனத்தின் முதல் பகுதியில், இயேசுதான் அவர்களைத் தெரிந்து கொண்டு அவர்கள் கனிகொடுக்கும்படிக்கு அவர்களை ஏற்படுத்தியதாகச் சொன்னார். இங்கே இயேசு அப்போஸ்தலர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், அவர்கள் கனி கொடுக்காமல் இருந்திருந்தால் கர்த்தர் அவர்களுடைய வேண்டுதல்களுக்கு பதில் கொடுத்திருப்பார் என உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? மறுபடியும் கிறிஸ்து, ஒருவன் கேட்டால் அவன் பெற்றுக் கொள்வான் என்று வாக்குத்தத்தம் செய்தார் (மத்தேயு 7:7,8). கிறிஸ்து தொடர்ந்து இப்படிச் சொல்கிறார். " *உங்களில் எந்த மனுஷனாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும் போது பரலோகத்திருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?"* (மத்தேயு 7:9-11). இந்த வசனங்களின்படி, இங்கே

கிறிஸ்து, உண்மையுள்ள பிள்ளைகளாயிருந்து, தகப்பன்-மகன் உறவிலிருக்கிற சீடர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறார். வேத வசனங்களை நீங்கள் படிக்கும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் அவருக்குக் கீழ்ப்படிய விருப்பமுள்ளவர்களுக்கும், அவருக்கு உண்மையாயிருப்பவர்களுக்கு மட்டும் தான் என்பதை எப்பொழுதும் நீங்கள் கவனிக்க முடியும். கீழ்ப்படியாதவர்களை, கலகக்காரர்களை அவர் எப்படி ஆசீர்வதிக்க முடியும்?


இறுதியாக, I யோவான் 5:14,15 வசனங்களில், நம் ஜெபங்கள் தேவனுடைய சித்தத்தின்படி இருந்தால், அவைகளைக் கேட்டு தேவன் பதிலளிப்பார் என்று யோவான் தெளிவுபடுத்தியிருக்கிறார். பிள்ளைகளை நேசிக்கிற ஒரு தகப்பன், பிள்ளைகளுக்கு தீங்கு இழைக்கிற அல்லது அவர்களை அழிக்கக் கூடியவைகளை அவர்களுக்கு கொடுக்கமாட்டான். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்குத் தீங்கு செய்கிறவைகளை அவர்கள் கேட்டாலும் கொடுக்க மாட்டான். நம்முடைய பரம பிதாவின் காரியத்திலும் இது உண்மையாயிருக்கிறது. சில காரியங்கள் நமக்குக் கிடைத்தால் நன்றாக இருக்குமென்று நாம் நினைப்போம். ஆனால், சர்வ ஞானமுள்ள நம் பிதா அதை வேறு விதமாகப் பார்ப்பார். இங்கே, ஒரு காரியத்தை நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும். அது, நம் அன்புள்ள தகப்பன் நமக்கு எது சிறந்ததாயிருக்குமோ அதற்கேற்றபடி பதிலளிப்பார். நாம் உண்மையாகவே கர்த்தரிடம் அன்பு கூர்ந்தால் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் என்கின்ற பவுலின் வாக்கியம் நம் நினைவில் இருக்க வேண்டும் (ரோமர் 8:28)

நாம் எப்போதுமே நோக்கிப் பார்ப்பதற்கு நமக்கு ஒரு பிதா இருப்பதால், கிறிஸ்தவர்களாக நாம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து மனிதர்கள் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும் என்று சொன்னார் (லூக்கா 18:1). நாம் இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும் என்று பவுல் சொன்னார் (I தெசலோனிக்கேயர் 5:17). ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், ஜெபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என நமக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது (அப்போஸ்தலர் 2:42). மறுபடியும், யாக்கோபு ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன் என்று சொல்கிறார் (யாக்கோபு 5:13). தொடர்ந்து யாக்கோபு சொல்லும் போது, நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல்

மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்கிறார் (யாக்கோபு 5:16). வியாதியில் இருப்பவர்களுக்காக நாம் ஜெபிக்கும்போது அற்புதங்கள் மூலம் கிரியை செய்வதாக கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணவில்லை. ஆனால், ஜெபங்கள் மிகப்பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். தேவன் இயற்கை விதிகள் மூலமாக, மருந்துகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மூலமாக நோயாளியை சுகப்படுத்துவதற்கு கிரியை செய்வார். தேவன் தம்முடைய தீர்மானத்தின்படி காரியங்களை மாற்ற கிரியை செய்யும் வழியையும், விதத்தையும் பெரும்பாலும் நாம் குறைத்து மதிப்பிட்டு வருகிறோம். சில வேளைகளில், நாம் தேவன் தம்முடைய வல்லமையைக் காட்டுவதற்கான ஒரே வழி அல்லது தேவனால் ஏதோ ஒன்றை செய்ய முடியும் என்று காட்டுவதற்கான ஒரே வழி அற்புதம் தான் என்று நினைக்கிறோம். ஆனால், அது அப்படியல்ல. நம்முடைய விசுவாசம் எங்கே? மேலும் பிணியாளிக்குத்தான் வைத்தியன் தேவை என்று இயேசு சொன்னார், அதே வேளையில் நாம் நம் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பார்க்கக்கூடாது (மத்தேயு 9:12; மத்தேயு 4:7).

நிச்சயமாகவே, நம்முடைய ஜெபங்கள் பிதாவினால் கேட்கப்படவேண்டுமென்றால், நமக்காக பரிந்து பேசுகிறவரும், மத்தியஸ்தரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் ஜெபிக்க வேண்டும். (I யோவான் 2:1; I தீமோத்தேயு 2:5; எபிரெயர் 3:1).

ஜெபத்தில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா? பிதா உங்கள் ஜெபங்களைக் கேட்டு உங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றுவார் என்கிற நிச்சயத்தோடு உங்களால் ஜெபிக்க முடிகிறதா? நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால் பிதாவிடம் ஜெபிக்கத்தக்கதான உறவில் நீங்கள் இல்லை. அப்படிப்பட்ட உறவை நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவதின் மூலம், பெற்றுக் கொள்ளலாம் (எபிரெயர் 11:6; யோவான் 14:1; மத்தேயு 10:32; அப்போஸ்தலர் 2:38). இதை நீங்கள் செய்யும் போது, கர்த்தர் உங்களை இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார் (அப்போஸ்தலர் 2:47). பின்பு, கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தினராக, கர்த்தருடைய பிள்ளையாக உண்மையாயிருந்தால், தேவன் உங்கள் ஜெபங்களைக் கேட்டு அவைகளுக்கு பதில் தருவார் என்கின்ற வாக்குத்தத்தம் உங்களுக்கு இருக்கிறது.



## பாடம் - 13

# ஏன் பரலோகத்திற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது?

மத உலகில் நாம் பரலோகத்திற்கு அநேக வழிகள் உண்டு என்பது போன்ற வாக்கியங்களை அடிக்கடி கேட்கிறோம். அது மட்டுமல்ல, நாம் எல்லோரும் வித்தியாசமான பாதைகளில் பயணிக்கிறோம். ஆனால், நாம் எல்லோருமே ஒரே இடத்திற்குச் செல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் பேசக் கேட்கிறோம். இப்படிப் பேசப்படுபவைகள் குறித்து நாம் நேரம் எடுத்து சிந்திக்காவிட்டால், அவைகளெல்லாம் சரிதானே என்பது போல தோன்றும். ஆனால், நிச்சயமாகவே அது வேதாகம உபதேசத்திற்கு மாறானதாயிருக்கிறது.

வேதாகமம் பரலோகம் பற்றியும், அதன் மொத்த அழகைப் பற்றியும், வரவிருக்கின்ற உலகத்தில் கர்த்தருடைய ஜனங்களுக்காக அது எப்படி ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றியும் நேர்த்தியாகச் சொல்கிறது. கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். *"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள், என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன்; நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:1-3).* ஆகவே, இயேசுவை விசுவாசிக்கிற எல்லாரும், அவர் ஆயத்தமாக்கியிருக்கிற பரலோகத்தை விசுவாசிக்கிற எல்லாரும், நிச்சயமாகவே அங்கே போக விரும்புவார்கள். ஆனால், கேள்வி என்னவென்றால், நாம் எப்படி அங்கே போக முடியும்? அங்கே போவதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறதா? அல்லது அநேக வழிகள் இருக்கிறதா?

இயேசு மறுபடியும், " *நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் ; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்* " என்று சொன்னார் (யோவான் 14:6). பிதாவினிடத்தில் செல்வதற்கு வழி, ஒரே வழி இயேசு தான் என்பதை கவனியுங்கள், ஒருவர் பிதாவினிடத்தில் கிறிஸ்துவினால் அல்லது கிறிஸ்து மூலமாக மட்டுமே செல்ல முடியும். பிதாவினிடத்தில் செல்வதற்கு அநேக வழிகள் இருந்தால் கிறிஸ்து மாத்திரம் ஒரே வழியாக இருக்க மாட்டார்.

இயேசு தம்மை நல்ல மேய்ப்பனாகவும், கிறிஸ்தவர்களை ஆடுகளாகவும், சபையை ஆட்டுத்தொழுவமாகவும் சித்தரிக்கிறார். இங்கே இயேசு வாசலைப்பற்றி என்ன சொல்கிறார் என்று கேளுங்கள்: " *நானே ஆடுகளுக்கு வாசல் என்று' மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்* " (யோவான் 10:7). இயேசு தொடர்ந்து, "*நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும், புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்* " என விளக்குகிறார் (யோவான் 10:9). இயேசு மறுபடியும், " *மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன்; ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும், கொள்ளைக்காரனுமாய் இருக்கிறான்* " என்றார் (யோவான் 10:1). வேறுவிதமாய்ச் சொன்னால், இயேசு அந்த ஆட்டுத் தொழுவத்துக்கு வாசல் என்று சொல்கிறார், சபைக்குச் செல்வதற்கு ஒரே வழி என்றும், பரலோகம் செல்வதற்கும் ஒரே வழி தான் என்றும் சொல்கிறார். அவர் அதன் பின்பு ஒருவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறினால் அவன் கள்ளனாக, கொள்ளைக்காரனாக கருதப்பட வேண்டும் என்று சொல்கிறார். ஆனால், முடிவிலே திருடர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் என்ன நடக்கும்? அப்போஸ்தலனாகிய பவுல் அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படியாவிட்டால் தேவனுடைய ராஜ்யம் அல்லது சபை அல்லது பரலோகத்திற்குள் பிரவேசிக்கக்கூட முடியாது என்கிறார். நிச்சயமாகவே, கர்த்தர் கொடுத்திருக்கிற வழியல்லாமல் வேறு வழியாய் பரலோகம் செல்ல முயற்சி செய்கிறவன் நரகத்தில் தள்ளப்படுவான்.

மற்றுமொரு சூழ்நிலையில் இயேசு தம்மைச் சுற்றிலும் கூடியிருந்த ஜனங்களை நோக்கி இப்படிச் சொன்னார். " *இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்*" என்றார் (மத்தேயு 7:13, 14). நாம் ஒவ்வொருவரும் இடுக்கமான வாசல் வழியாய் பிரவேசிக்க வேண்டும் என்று இயேசு சொல்வதை நாம் கவனிக்க வேண்டும். இந்த இடுக்கமான வாசல் இயேசுவை அடையாளப்படுத்துகிறது.

இயேசு தான் சபைக்குள் பிரவேசிப்பதற்கான வழி. அதன் மூலமாக ஒருவர் பரலோகத்திற்குக் கடந்து செல்கிறார். இயேசு தொடர்ந்து சொல்லும் போது, இடுக்கமான வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் தங்களை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் நெருக்கமான வழியைக் கண்டடைகிறார்கள். இந்த விஷயத்தில் ஒரே வாசல், ஒரே வழிதான் இருக்கிறது. அந்த ஒரே வழிதான் பரலோகத்திற்கு அழைத்துச்செல்லும். யார் இந்த வழியில் இருப்பார்கள்? கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், கிறிஸ்த வர்கள், கிறிஸ்துவுக்கு உண்மையாயிருப்பவர்கள். அதன் பின்பு, கிறிஸ்து அடுத்தவழி பற்றி பேசுகிறார். வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிற கேட்டுக்கு அழைத்துச் செல்லும் வழியில் பயணம் செய்பவர்கள் பற்றி. இதில் பயணிக்க யார் துணிவார்? பெரும்பாலானவர்கள், மாம்சசிந்தை உடையவர்கள் மற்றும் தேவபக்தியற்றவர்கள். கிறிஸ்துவின் அதிகாரத்தை ஏற்க மறுத்து, தங்கள் வழியில் காரியங்களைச் செய்யமுடியும் என காரண காரியங்களைக் காட்டுபவர்கள் தான். விசாலமான வழியில் பயணிப்பவர்கள். இன்னும் மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகளில் சேருபவர்கள்; மனுதருடைய பெயர்களை தரித்துக் கொள்பவர்கள், தங்கள் பிரியத்தின்படி ஆராதிப்பவர்கள். இவர்கள் தான் ஏமாற்றப்பட்டவர்கள், மற்றவர்களை ஏமாற்றுபவர்கள். உண்மையில்லாத கிறிஸ்தவனும் இந்தக் கூட்டத்தில் தான் இருப்பான். ஆனால், இந்தப் பாதை அல்லது வழி எங்கே அழைத்துச் செல்கிறது? இது, நித்திய அழிவுக்கு அழைத்துச் செல்கிறது. ஆம்,

இவர்களில் அநேகர் நேர்மையும், உண்மையுமானவர்களாய் இருப்பார்கள். அவர்கள் எல்லாவற்றிலும் பக்தியுள்ளவர்களாயுமி ருப்பார்கள். ஆனால், அவர்கள் விசாலமான வழியில் இருக்கிற காரணத்தால் இழந்து போவார்கள்.

என் நண்பர்களே, ஒரு முக்கிய தலைநகரத்திற்குச் செல்வதற்கு பல வழிகள் இருக்கிறது. ஆனால், உங்களிடம் ஒருவர் ஒரு குறிப்பிட்ட பாதை வழியாக மட்டும் பயணம் செய்ய வேண்டும் என்று ஒப்பந்தம் செய்திருக்கும் நிலையில், நீங்கள் வேறொரு வழியைத் தெரிந்து கொண்டால் என்ன நடக்கும்? நீங்கள் பிரச்சனையில் மாட்டிக் கொள்வீர்கள். அதுபோலவே, கிறிஸ்துவுக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் வல்லமையும் உண்டு (மத்தேயு 28:18). அந்த அதிகாரத்திற்கு நாம் மரியாதை கொடுத்து கர்த்தர் கொடுத்திருக்கிற அறிவுரைகளை நாம் பின்பற்றும் போது அதுவும் இதே விதமாகத்தான் இருக்கிறதென் பதைக் காணமுடியும். கர்த்தர் வகுத்துத் தந்திருக்கும் பாதையில் நாம் பயணம் செய்வது அவசியம்.

பரலோகத்திற்குச் செல்லும் வழி பற்றி நாம் பேசுவதில் நமக்கு இருக்கும் பிரச்சனை என்னவென்றால், மனித புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் நாம் அதை அணுகுவது. ஒரு பட்டணத்துக்கு அநேக வழிகள் இருந்து, எல்லா வழிகளுமே ஒருவரை அந்த பட்டணத்துக்கு அழைத்துச் செல்வது உண்மை யானால், ஆவிக்குரிய ரீதியிலும் இது உண்மையாகத் தானே இருக்க வேண்டும். ஆனால், கர்த்தரைப் பொறுத்தவரை, அவருடைய வழியைப் பொறுத்தவரை, ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. வேறு வழிகள் இருக்கிறது போல் நமக்குத் தெரியலாம், பல மத நம்பிக்கைகள், மனுஷருடைய சபைகள் போன்று வேறு வழிகள் நமக்குத் தெரியலாம். ஆனால், இவைகள் எல்லாம் பரலோகத் திற்கு செல்லும் வழிகள் அல்ல. மனிதனால் உண்டாக்கப்பட்ட வழிகள் மற்றும் அமைப்புகள் மூலமாக யாரும் பரலோகம் செல்ல முடியாது. இதை உணர்ந்து கொள்வதற்கு, நாம் செய்ய வேண்டிய தெல்லாம், வேதாகமத்தைத் திறந்து வாசிப்பது தான். கிறிஸ்து இப்படியாகச் சொன்னார் " *மனுஷருடைய கற்பனை களை உப தேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய் கிறார்கள்*" என்று (மத்தேயு 15:9).

மீண்டும் கிறிஸ்து, " பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே, பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பா னேயல்லாமல், என்னை நோக்கி : கர்த்தாவே ! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள் ; அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் " , (மத்தேயு 7:21-23). இதே மாதிரியான அநேக வாக்கியங்களை வேத வசனங்களில் நாம் காண முடியும். நாம் தேவனுக்கு கீழ்ப்படியாமலிருந்து, காரியங்களை நம் வழியில் செய்து, மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகளில் சேர்ந்து, மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயர்களைத் தரித்து, நாம் தெரிந்து கொள்ளுகிறபடி ஆராதித்து, நாம் எந்த வழியில் பயணிக்க விரும்புகிறோமோ அதே வழியில் பயணித்து அதே நேரத்தில் பரலோகம் செல்ல முடியும் என்று நம்மால் நினைக்க முடிகிறதா? ஒருவேளை நாம் அப்படிச் சிந்திக்கத் தலைப்பட்டால், நிச்சயமாக நாம் தவறு செய்கிறவர்களாயிருப்போம். சவுலைப் பாருங்கள். அவர் மிகவும் பக்தியாய் இருந்தார். தன் மார்க்கத்திற்காக பக்தி வைராக்கியமாக இருந்தார். கர்த்தருடைய சபையை அவர் துன்பப்படுத்தின போதிலும் அவருக்கு நல்மனச்சாட்சி இருந்தது. ஆனால், தான் தவறு செய்ததை அவர் கண்டு கொண்டார். அவர் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்ப, கர்த்தருக்கு கீழ்ப்படிந்த போது தான் இரட்சிக்கப்பட்டார் (அப்போஸ்தல் 9 மற்றும் 22 அதிகாரங்கள்). ஆனால், கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் எப்படி? அவர்கள் நல்லவர்களாக இருந்தார்கள். அவர்கள் தானதர் மங்களைச் செய்து அடிக்கடி பரலோகத்தின் தேவனிடத்தில் ஜெபித் துக் கொண்டிருந்தார்கள். ஆயினும், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு, அவர்கள் இரட்சிக்கப்படும்படி, ஞானஸ்நானம் பெறக் கட்டளையிடப்பட்டார்கள். அப்போஸ்தலர் 10 ஆம் அதிகா ரம் பரலோகம் செல்வதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது என்கிற உண்மைக்கு ஆதரவாக வசனங்களில் அநேக உதாரணங்கள் இருக்கின்றன.


என் நண்பர்களே, இது பற்றி யோசித்துப் பாருங்கள். வேதாகமம் ஒரே தேவனும், ஒரே கர்த்தர் அல்லது ஒரே இரட்சகரும், ஒரே பரிசுத்த ஆவியும், ஒரே சரீரம் அல்லது சபையும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே நம்பிக்கையும் உண்டு என்று போதிக்கிறது (எபேசியர் 4:1-6). வேதாகமம் ஒரே ஒரு நற்செய்தி அல்லது இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்று சொல்கிறது. கர்த்தர் இரட்சகராயிருக்கிறார், ஒவ்வொரு வரும் இரட்சிக்கப்பட ஒரே விதமாக செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார். எல்லாரும் அவருக்குச் செவிகொடுக் கவும் (மத்தேயு 17:5) அவரை விசுவாசிக்கவும் (யோவான் 8:24) அவரவர் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும் (லூக்கா 13:3) கிறிஸ் துவை தேவனுடையகுமாரன் என்று அறிக்கையிடவும் (மத்தேயு 10:32) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவும் கட்டளை யிடப்பட்டிருக்கிறோம் (மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38). கிறிஸ்து அதே நற்செய்தி தான் முழு உலகத்திற்கும், சர்வசிருஷ் டிக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டிருக் கிறார் (மாற்கு 16:15,16). கிறிஸ்து இரட்சிக்கப்பட்ட எல்லோரையும் தாம் கட்டின சபையில், எந்த சபைக்காக மரித்தாரோ அந்த சபையில், தன் சுயரத்தத்தினாலே எந்த சபையை வாங்கினாரோ அந்த சபையில், எந்த சபைக்கு அவர் தலையாயிருக்கிறோ அந்த சபையில், எந்த சபைக்காக ஒரு நாள் திரும்பி வரப் போகிறாரோ அந்த சபையில் சேர்த்துக் கொள்கிறார் (அப்போஸ்தலர் 2:47; மத்தேயு 16:16; எபேசியர் 5; அப்போஸ்தலர் 20:28). தேவன் தம்மை எல்லோரும் ஆவியோடும், உண்மை யோடும் தொழுது கொள்ள வேண்டும் என விரும்புகிறார் என்று வேதாகமம் போதிக்கிறது (யோவான் 4:24). ஆகவே, எல்லோரும் வாரத்தின் முதல் நாளிலே கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படியாக தேவனுடைய வார்த்தையைப் படிப்பதற்காக, ஜெபிப்பதற்காக காணிக்கை கொடுக்கும்படியாக, தேவனைத் துதித்துப் பாடும்படியாக கூட வேண்டும் (அப். 20:7; II தீமோ. 2:15; அப். 2:45 ; எபேசியர் 5:19). தேவன் தம்முடைய ஜனங்களெல் லாரும் எல்லாவற்றையும், கிறிஸ்துவின் நாமத்தினாலே செய்ய வேண்டும் என்று விரும்பு கிறார் (கொலோசெயர் 3:17). அதன் பொருள், எல்லோரும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொள்ளவேண்டும்

(அப்.11:26). மற்றும் எல்லாரும் உண்மையுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை நடத்த வேண்டும் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10) என்பதே.

நாமெல்லாரும் வாசிக்கவும், விசுவாசிக்கவும், கீழ்ப்படியவும் நம் அனைவருக்கும் ஒரே வேதாகமம் இருக்கிறது. நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையாய் இருந்தால் நாம் செல்வதற்கு ஒரு பரலோகம் இருக்கிறது. அது போலவே, பாவிகளும், உண்மையில்லாதவர்களும் செல்வதற்கு நரகம் ஒன்று இருக்கிறது (மத்தேயு 25:46).

இப்போது, இதற்கு முன்பு சொல்லப்பட்டவைகளெல்லாம் உண்மையாக இருந்து, நீங்களாகவே வேத வசனங்களை வாசித்து, படித்து, அவைகள் உண்மைதான் என்று நீங்களாகவே பார்க்க முடிந்தால், பரலோகத்திற்கு ஒரு வழிக்கு மேல் எப்படி இருக்க முடியும்? ஆம், பரலோகம் செல்வதற்கு வழி ஒன்று இருக்கிறது, ஒரே ஒரு வழி தான் இருக்கிறது, அது கர்த்தருடைய வழியாக இருக்கிறது. பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வழியில் நாம் பயணம் செய்யும் படி, அந்த வழியை நாம் ஏற்றுக் கொண்டு, கர்த்தர் நம்மை என்ன செய்யும்படியாக சொல்கிறாரோ அதைச் செய்தால் நாம் ஞானமுள்ளவர்களாயிருப்போம். நாம் வேறுவழியாக பரலோகம் செல்லவே முடியாது. ஞானி இப்படியாகச் சொன்னார் மனுஷருக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் (நீதிமொழிகள் 14:12).

எந்தப் பாதையில் நீங்கள் பயணித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இடுக்கமான வழியிலா? அல்லது விசாலமான வழியிலா? கேட்டுக்கு அழைத்துச் செல்லும் வழியிலா? அல்லது பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வழியிலா? ஒரே நேரத்தில் உங்களால் இரண்டு வழிகளிலும் பயணம் செய்ய முடியாது. எந்த மனிதனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது என்று கிறிஸ்து சொன்னார் (மத்தேயு 6:24). நாம் ஒன்று அவரோடிருக்கிறோம் அல்லது அவருக்கு விரோதமாக இருக்கிறோம் என்று இயேசு சொன்னார் (மத்தேயு 12:30). ஆகவே, நாம் எந்த வழியில் பயணம் செய்வது எனத் தீர்மானிப்பது நம் கையில் விடப்பட்டிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவையும், பரலோகத்திற்குச் செல்லும் வழியையும் தெரிந்தெடுக்கும்படியாக நாங்கள் உங்களிடம் மன்றாடுகிறோம்.



## பாடம் - 14

# ஏன் நாங்கள் சாத்தான் இருப்பதை விசுவாசிக்கிறோம்?

இந்த நாகரீக காலத்தில், சாத்தான் இருப்பதாக ஒருவன் ஏன் நம்ப வேண்டும் என்று சிலர் ஆச்சரியப்படலாம். மனிதன் விண்வெளிக்குச் செல்கின்ற இந்தக் காலகட்டத்தில் நிச்சயமாகவே பிசாசு போன்றவைகள் எல்லாம் எடுபடாது என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படி வாதம் செய்கிறவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனால், சாத்தான் இருக்கிறான். அவன் வாழ்கிறான். தேவன், கிறிஸ்து எப்படி இருக்கிறார்களோ அப்படியே பிசாசும் இருக்கிறான். அவன் உலகமுழுவதிலும் வாழ்கிறான். அவனுடைய கிரியைகள் எங்கும் தெரிகிறது. அவனுடைய செல்வாக்கு ஒவ்வொருவரிடத்திலும் காணப்படுகிறது. அது மட்டுமல்ல, அவன் உலகத்தில் இருக்கிறான் என்று வேதாகமம் போதிக்கிறது. அவன் மனிதனல்ல, ஆனால், அவன் ஒரு ஆவி, அசுத்த ஆவி. தேவனும், கிறிஸ்துவும் எதற்கு அடையாளமாக இருக்கிறார்களோ, அதற்கு நேர் எதிரானவன். தவறான மற்றும் கெட்டவைகளுக்கு பின்னால் அவன் எப்போதுமே இருக்கிறான். அவன் பிசாசு என்றும், துன்மார்க்கன் என்றும், பொய்க்குப் பிதா என்றும், இந்தப் பிரபஞ்சத்தின் தேவன் என்றும் அழைக்கப்படுகிறான். அவன் அந்தகாரம், பாவம் மற்றும் துக்கம் போன்றவைகளுக்கு அடையாளமாக இருக்கிறான். அவன் மரணத்தை உண்டாக்கி, நித்திய அழிவைக் கொண்டு வருகிறான். அவன் நம்முடைய சத்துருவாக இருக்கிறபடியால், அவனைப் பற்றி நாம் நன்றாக அறிந்திருக்க வேண்டும். நாம் அவனை எந்த அளவுக்கு அறிந்து, அவன் கிரியைகளைப் புரிந்து வைத்திருக்கிறோமோ, அந்தளவுக்கு அவனைச் சந்திக்க நாம் நம்மை ஆயத்தமாக்க முடியும். இதற்கேற்ற

அறிவும், முறையான போராயுதமும் இல்லையானால், அவனால் நம்மை வஞ்சித்து, மேற்கொண்டு அழித்துப் போட முடியும்.

இப்போது நாம் தேவனுடைய வார்த்தைக்குப் போய், சாத்தானைப் பற்றியும், அவனுடைய கிரியைகள் பற்றியும் பேசுகின்ற சில வசனங்களை வாசிப்போம். இயேசு, நிலத்தின் களைகள் பற்றிய உவமையை விளக்கும் போது, களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர் என்றும், அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு என்றும் சொன்னார் (மத்தேயு 13:38,39).

பேதுரு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதினார். " *தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்; விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்* " (1பேதுரு 5:8). பவுல் சாத்தானை சோதனைக்காரனாகச் சொல்கிறார். ஆகையால், " நான் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு அவனை அனுப்பினான் " (I தெசலோனிக்கேயர் 3:5). இயேசுவின் நாட்களில் வாழ்ந்த மதப்பிரிவினர், கர்த்தர் பெயெல்செபூலின் வல்லமையினாலே பிசாசுகளைத் துரத்தினார் என்று குற்றஞ்சாட்டினார்கள். " *அப்பொழுது பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவும் காணவுதக்கதாக அவனைச் சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு; தாவீதின் குமாரன் இவர்தானே? என்றார்கள். பரிசேயர் அதைக்கேட்டு : இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றபடியல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி : தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப் போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும், எந்த வீடும் நிலை நிற்க மாட்டாது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத்தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே ; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலை நிற்கும்? நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத்*

துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும், பலவானை முந்திக்கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படி கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம், என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் ; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான் " (மத்தேயு 12:23-30) என்று வாசிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய யோவான் இவ்விதமாக எழுதினார், "பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன் "(I யோவான் 2:14). யோவான் தொடர்ந்து இப்படியாகச் சொல்கிறார். " நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த காயீனைப் போலிருக்க வேண்டாம் ; அவன் எதினிமித்தம் அவனை கொலை செய்தான் ; தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே " (I யோவான் 3:11-13). "மறுபடியும் யோவான், தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம் ; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான் ; பொல்லாங்கள் அவனைத் தொடான். நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம் " என்று (Iயோவான் 5:18,19). பின்பு வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான், "உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது ; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த

தூதரும் தள்ளப்பட்டார்கள்" என்று (வெளிப்படுத்தல் 12:9). மேலும், பிசாசுக்கு என்ன நடந்தது என்பதை விவரிக்கும் போது, யோவான் " ஒரு தூதன் பாதாளத்தின் திறவு கோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந் திறங்கி வரக்கண்டேன்; பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப் பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காத படிக்கு அதைப் பாதளத்திலே தள்ளியடைத்து, அதின் மேல் முத்திரை போட்டான் என்றான், அதற்கு பின்பு அது கொஞ்சக் காலம் விடுதலையாக வேண்டும் " (வெளிப்படுத்தல் 20:1-3) என்றான்.

கிறிஸ்து தம்முடைய நாட்களில் வாழ்ந்த சிலரைப் பார்த்து, " நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள் ; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக் கிறீர்கள் ; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனா யிருக்கிறான் ; சத்தியம் அவனிடத்தில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை ; அவன் பொய்யனும், பொய்க் குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான், நான் உங்களுக்குச் சத்தியத் தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிற தில்லை " (யோவான் 8:44,45). இயேசு தம்முடைய சீஷர்களிடம் இதைச் சொன்னார். " இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை " (யோவான் 14:30). பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு, " எங்கள் சுவிசேஷம் மாற பொருளாயிருந்தால், கெட்டுப் போகிறவர்களுக்கே அது மறை பொருளாயிருக்கும். தேவனுடைய சாயலிலிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர் களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனா ணவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான் " (I கொரிந்தியர் 4:3,4) என எழுதினார்.

ஆனால், இந்த சாத்தான் எங்கே இருந்து வந்தான்? என்று நீங்கள் கேட்கலாம். எல்லாவற்றையும் உண்டாக்கினது தேவனா

யிருக்கிபடியால் (ஆதியாகமம் 1:1) இந்த சாத்தானையும் அவனோடுச் சேர்ந்த எல்லா தேவதூதர்களையும் உண்டாக்கினது தேவனே. பிசாசு தன்னைத்தான் உயர்த்தி, தன்னை உண்டாக்கினவருக்கு எதிராக கலகம் செய்து, தேவனுடைய சத்துருவாக மாறினான். II பேதுரு 2:4 இவ்விதமாய்ச் சொல்கிறது *"பாவஞ் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து"* என்று. மேலும் பேதுரு, தேவன் யாரையெல்லாம் தப்பவிடவில்லை என்று சொல்கிறார். இங்கே கருத்து என்னவென்றால், நாம் தேவனையும் அவருடைய சித்தத்தையும் எதிர்த்தால், அதற்கான விளைவை நாம் அனுபவிக்க வேண்டியதாயிருக்கும். யூதா 6 ஆம் வசனத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம். *"தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத் தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்"*. நியாயத் தீர்ப்பு நாளிலே கிறிஸ்து துன்மார்க் கரைப் பார்த்து இவ்விதமாகச் சொல்வார். *" சபிக்கப்பட்ட வர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காக வும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்"* (மத்தேயு 25:41) என்று.

படைப்பின் ஆரம்ப காலத்திற்கு நாம் திரும்பும் போது, ஆதாமையும் ஏவாளையும் தேவன் சிருஷ்டித்த பிறகு, ஏதேன் தோட்டத்தில் அவர்களை வைத்து, தோட்டத்திலிருக்கிற சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று சொல்லியிருந்தார். இதன் மூலம், விலக்கப்படும் கனியைப் புசித்தால் அவர்கள் சாகவே சாவார்கள் என்று தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இப்போது நாம் வாசிப்போம் *"தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகலகாட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி : நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது. ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து : நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்.*

ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள். அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி : நீங்கள் சாகவே சாவதில்லை ; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர் களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக் கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள் ; அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது ; அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச் சைகளை உண்டு பண்ணினார்கள். பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும், அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, நீ எங்கே இருக்கிறாய் என்றார். அதற்கு அவன் : நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியா யிருப்பதினால் பயந்து, ஒளித்துக் கொண்டேன் என்றான். அப்பொழுது அவர் : நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார். அதற்கு ஆதாம்; என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட் சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரீயை நோக்கி, நீ இப்படிச் செய்தது என்ன என்றார். ஸ்திரீயானவள் : சர்ப்பம் என்னை வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள்" (ஆதியாகமம் 3:1-13).

விலக்கப்பட்ட கனியைப் புசித்த அந்த நாளிலே மனுஷனும், மனுஷியும் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்து விட்டார்கள். ஆனால், தேவன் தொடர்ந்து ஆதாம், ஏவாள், சர்ப்பம் மற்றும் எல்லா

சிருஷ்டிகளின் மீதும் சாபத்தை சுமத்திக் கொண்டிருந்தார். மத்தேயு நான்காம் அதிகாரத்தில், சோதனைக்காரனான சாத்தானே கிறிஸ்து விடம் வந்தான். அவர் இயேசு தன்னைப் பார்த்துக் கொள்ளும்படி மூன்று வெவ்வேறுபட்ட சூழ்நிலைகளில் இயேசு தனக்குப் பணிந்து போகும்படி முயற்சி செய்தான். ஆனால், ஒவ்வொரு முறையும் கிறிஸ்து "எழுதியிருக்கிறதே" என்பதாக பதில் அளித்தார். இறுதியில், பிசாசு தோற்றுப் போனவனாக அவரை விட்டுப் போனான்.


சாத்தானின் மீது இயேசு பெற்ற மிகப்பெரிய வெற்றி கல்லறையிலிருந்து அவர் உயிரோடு எழுந்ததுதான் ; இயேசு உயிரோடு எழுந்ததின் மூலம் தாம் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபித்தது மட்டுமல்ல, எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை சாத்தியப்படுத்தி, ஒவ்வொருவருக்கும் எதிர்கால உயிர்த்தெழுதலை நிச்சயப்படுத்தினார். கிறிஸ்துவுக்குக் கீழ்ப் படிந்து, அவருக்கு உண்மையாயிருக்கிற யாவரையும் அவர் இரட்சித்து, எல்லா சோதனைகளையும் மேற்கொள்ள அவர் களுக்கு உதவி செய்து, கடைசியாக பரலோகத்திற்கு அவர்களை அழைத்து செல்வார் என்கின்ற வாக்குத்தத்தம் இருக்கிறது.

என் நண்பர்களே, சாத்தானை பழைய பிசாசை உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்த நீங்கள் அனுமதிக்க வேண்டாம். இந்த உலகத்தின் காரியங்களைக் கொண்டு சாத்தான் உங்களை வசப்படுத்திக்கொள்ள நீங்கள் அனுமதிக்க வேண்டாம். இந்த உலகத்தின் காரியங்களாகிய மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை போன்றவைகளை சாத்தான் உங்களுக்கெதிராகப் பயன்படுத்த நீங்கள் அனுமதிக்க வேண்டாம். தவறான மதம், மனுஷனுடைய போதனைகள் போன்றவைகளைப் பயன்படுத்தி சாத்தான் உங்களை வழிவிலகிப் போகச் செய்ய நீங்கள் அனுமதிக்க வேண்டாம். தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம், சத்தியத்தின் அழகையும், நித்திய ஜீவனின் வழியையும் விவரிக்கிறது. அதே நேரத்தில், முடிவான மரணத்தை கொண்டு வருகின்ற சாத்தானின் தந்திரத்தையும், வஞ்சகமான வழிகளையும் குறித்து எச்சரிக்கிறது.

சாத்தானுக்கு விரோதமாக எச்சரிக்கையாயிருங்கள். அவ னால் வஞ்சிக்கப்படாதிருங்கள். தேவனுடைய வார்த்தையை

வாசியுங்கள், படியுங்கள். கர்த்தரையும், அவருடைய வழிகளையும் கற்றுக் கொள்ளுங்கள். அதே வேளையில், உங்கள் எதிராளியாகிய சாத்தான் பற்றி வேதவசனங்களிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள். பிதாவாகிய தேவனிடத்திலும், ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் வையுங்கள். *"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்"* (எபிரெயர் 11:6).

நாம் தேவனை விசுவாசித்தால், கிறிஸ்துவையும் விசுவாசிக்க வேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (யோவான் 14:1-3). நாம் கிறிஸ்துவைப் பின்பற்றும்படி சாத்தானிடமிருந்தும், பாவங்களிடமிருந்தும் எல்லா தவறான, மோசமான காரியங்களிடமிருந்தும் திரும்ப வேண்டும். எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டள்ளதாக நமக்குச் சொல்லப்பட்டி ருக்கிறது (அப்போஸ்தலர் 17:30). நாம் மனந்திரும்பவில்லையென்றால் கெட்டுப்போவோம் என்று கிறிஸ்து சொல்லியுள்ளார் (லூக்கா 13:3). கிறிஸ்துவை தேவனுடையகுமாரன் என்று நாம் அறிக்கை செய்ய வேண்டும் (மத்தேயு 10:32). நாம் மனுஷருக்கு முன்பாக கர்த்தரை அறிக்கை செய்தால், அவர் நம்மை பரலோகத்திலிருக்கிற பிதாவுக்கு முன்பாக அறிக்கை செய்வார். கடைசியாக, நம் பாவமன்னிப்பிற்காக தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட வேண்டும் அல்லது ஞானஸ்நானம் பெறவேண்டு மென்று கட்டளை பெற்றிருக் கிறோம். நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, ஞானஸ்நானம் பெற்றால் அவர் நம்மை இரட்சிப்பதாகச் சொல்கிறார் (மாற்கு 16:16). நாம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றால் பாவமன்னிப் பைப் பெறுவோம் என்று பேதுரு கொள்கி றார் (அப்போஸ்தலர் 2:38). நாம் அதைச் செய்யும் போது, கர்த்தர் நம்மை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (அப்போஸ்தலர் 2:47). இதன் மூலம் நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருப்போம் (IIகொரிந்தியர் 5:17). இவைகளை செய்தால், நாம் ஒருபோதும் சாத்தானுடையவர்களாக இருக்கமாட்டோம்; ஆனால் கிறிஸ்துவி னுடையவர் களாயிருந்து கிறிஸ்தவர்களென்று அழைக்கப்பட்டு (Iபேதுரு 4:16) மரணபரியந்தம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து பரலோக வீட்டை பெற்றுக்கொள்வோம் (வெளிப்படுத்தல் 2:10 ; வெளிப்படுத்தல் 22:14).



## பாடம் - 15

# ஏன் நாங்கள் பரலோகத்தில் நம்பிக்கை வைக்கிறோம்?

பரலோகம் பற்றி நான் பேசும் போது நான் வானம், மேகம் அல்லது உலகைச் சுற்றியுள்ள வளிமண்டலம் பற்றிப் பேசவில்லை. சில நேரங்களில் நாம் இவைகளைப் பரலோகம் என்று கூட குறிப்பிடுகிறோம். ஆனால், நான் உங்களிடம் பேசும் பரலோகம் என்பது, தேவன் வாசம் செய்யக்கூடிய இடம். இது ஓர் அழகான இடம், நீதிமான்களின் வீடு, அங்கேதான் தேவ பக்தியுள்ள ஆத்துமாக்கள் தங்கள் நித்தியத்தைக் கழிக்கும். தேவனுடைய வார்த்தைகளில் பரலோகம் என்பது புதிய எருசலேம் என்று கூட விவரிக்கப் பட்டிருக்கிறது.

வேத வசனங்கள் பரலோகம் பற்றிப் பொதுவாக பேசுகின்றன. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களைப் பார்த்து கிறிஸ்து இப்படிச் சொன்னார். " சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்தேயு 5:12). " பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக " (லூக்கா 11:2) என்று ஜெபிக்கும்படியாக இயேசு தம்முடைய சீடர்களுக்கு கற்றுக் கொடுத்தார். மேலும், இயேசு தம்முடைய சீடர்களிடத்தில், " பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் " என போதித்தார் (மத்தேயு 6:20,21). அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவை தேவனுடையகுமாரன் என்று அறிக்கையிட்ட பிறகு, அவர் அவர்களை நோக்கி, " பரலோக

*ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்ட விழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்* " (மத்தேயு 16:19). இயேசு எழுபது பேரை கட்டளை கொடுத்து வெளியே அனுப்பும் போது, " *இதோ சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன் ; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்கு கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்* " (லூக்கா 10:19,20).

தொடர்ந்து, மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகியிருக்கும் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது (லூக்கா 15:7). கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவராக சொல்லப்பட்டிருக்கிறார் (யோவான் 3:13). இயேசு பிதாவைப் பற்றி பேசும் போது வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை சீஷர்களுக்கு கொடுப்பதாகச் சொன்னார் (யோவான் 6:32). பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களிடம் " *பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்* " என்றார் (II கொரிந்தியர் 5:1). மறுபடியும், பவுல் கலாத்திய கிறிஸ்தவர்களுக்கு இதைச் சொன்னார். " *நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்* " என்று (கலாத்தியர் 1:8). ஒரு நாளில், " தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வருவார் என பவுல்தெசலோனிக்கே

பட்டணத்தாருக்கு உறுதி அளித்தார் (II தெசலோனிக்கேயர் 1:7-9). பேதுருவின் வார்த்தைகளை கவனியுங்கள். "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத் தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது "(I பேதுரு 1:3-5). யோவான், பின்பு, " நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன் ; முந்தின வானமும், முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது " (வெளிப்படுத்தல் 21:1,2) என்று எழுதியுள்ளார். ஆத்துமாவின் நித்திய வீடும், தேவனுடைய நித்திய வாசஸ்தலமுமாயிருக்கிற பரலோகம் பற்றி இப்படிப் பேசுகிற அநேக வசனப்பகுதிகளை நாம் சொல்லிக் கொண்டே போக முடியும்.

பரலோகத்திற்கு யாரெல்லாம் போவார்கள்? இயேசு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த மக்களைப் பார்த்து " நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்தேயு 18:3). பச்சிளங் குழந்தைகள், சிறுபிள்ளைகள் அல்லது கணக்கு ஒப்பவிக்க வேண்டிய வயதை அடையாதவர்கள் தங்கள் செயல்பாடுகளுக்கு பொறுப்பாளியாக மாட்டார்கள். எது சரி, எது தவறு என அவர்கள் அறியாதபடியால் அவர்கள் மரிக்கும் போது பரலோகம் போவார்கள். கர்த்தருடைய ராஜ்யம் அல்லது சபை பரலோகத்தில் சேர்க்கப்படும். " அதன் பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து,

தேவனும் பிதாவுமாயிருக்கிறவை களுக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார் " என்று பவுல் கூறியுள்ளார் (I கொரிந்தியர் 15:24). கிறிஸ்து சபை அல்லது சரீரத்திற்குத் தலையாயிருக்கிறார் என்று நாம் எபேசியர் 5:23-ல் வாசிக்கிறோம் (கொலோசெயர் 1:18 ; அப்போஸ்தலர் 20:28). கர்த்தர் அந்த சபையை கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றுமான மகிமையுள்ள சபையாக ஒப்புக்கொடுப்பார் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும் (எபேசியர் 5:27). மத்தேயு 13:40-ல் எப்படி கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்பி ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ்செய்கிறவர்களையும் கூட்டிச் சேர்ப்பார் என்றும் பின்பு அவர்கள் அழிக்கப்படும்படிக்கு அக்கினியிலே போடப்படுவார்கள் என்றும் வாசிக்கிறோம். ஆனால், சபை பரலோகத்திலிருக்கிற தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் என்பதின் பொருள், நித்திய காலத்திற்கும் நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் சபையிலே இருக்க வேண்டியது கட்டாயம் என்பதே. உண்மையுள்ளவர்கள் அல்லது கர்த்தருடைய பிரமாணத்தை கைக்கொள்ளுபவர்கள், பரலோகம் போவார்கள் என்று வேதவசனம் சொல்கிறது. கிறிஸ்துவானவர், " நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்து நாள் உபத்திரவப் படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் " என்று சொல்லியுள்ளார் (வெளிப்படுத்தல் 2:10). யாக்கோபு, " சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான் " என்று (யாக்கோபு 1:12) யோவான் இவ்விதமாக எழுதியுள்ளார். " ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின் படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் " (வெளிப்படுத்தல் 22:14).

அதே நேரத்தில், ஒரு குறிப்பிட்ட சாரார் பரலோகத்தில் இருக்கமாட்டார்கள் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்று. இதில் சாத்தான், அவனுடைய தூதர்கள் (மத்தேயு 25:41)

*அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் (மத்தேயு 13:41) மற்றும் துன்மார்க்கர் ஆகியோர் இதில் உள்ளடக்கம். (I கொரிந்தியர் 6:9,10; கலாத்தியர் 5:19-21). வெளிப்படுத்தின விசேஷம் 21:8 -ல் நாம் இப்படியாக வாசிக்கிறோம். " பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்று. மாயக்காரர் பரலோகம் போகமாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (மத்தேயு 24:51). கடைசியாக, மோசம் போகிறவர்களும் மார்க்க ரீதியாகத் தவறு செய்பவர்களும் இழந்து போவார்கள் (II தீமோத்தேயு 3:13, ரோமர் 16:17,18).*

*பரலோகத்தில் யார் இருக்கிறார்? அங்கே தேவன் இருக்கிறார். பரலோகம் ஜீவனுள்ள தேவனுடைய நகரமாக விவரிக்கப்பட்டிருக்கிறது (எபிரெயர் 12:22). இயேசு கிறிஸ்து அங்கே இருக்கிறார் (அப்போஸ்தலர் 2:30, 33). தேவனுடைய தூதர்கள் அங்கே இருக்கிறார்கள் (II தெசலோனிக்கேயர் 1:7-9).*

*பரலோகம் எதைப்போன்று இருக்கும்? யோவான் பரலோகத்தைப் பற்றி இப்படி எழுதியிருக்கிறார். பின்பு, " நான் புதிய வானத்தை யும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும், முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைச் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக் கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார் ; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. சிங்காசனத்தின் மேல் வீற்றிருதிருந்தவர் : இதோ, நான் சகலத்தையும்*

*புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், " அவர் ; இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி : ஆயிற்று, நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக் கிறவனுக்கு நான் ஜீவத் தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப் பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான் ; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான் " (வெளிப்படுத்தல் 21:1-7).*

தொடர்ந்து நாம் வாசிக்கும் போது, யோவான் இப்படியாக எழுதியுள்ளார். பின்பு, " *பளிங்கைப்போல் தெளிவான ஜீவத் தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையி லும், பன்னிரெண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக் குட் டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப் பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங் களிலும் அரசாளுவார்கள். பின்பு, அவர் என்னை நோக்கி; இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்ப விக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனாவர் தம்முடைய தூதனை அனுப்பினார். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான்*" என்றார் (வெளிப்படுத்தல் *22:1-7).*

வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் முழுவதுமாக நாம் வாசிக்கும் போது, தேவஆவியினால் ஏவப்பட்ட யோவான் பரலோகத்தில், பொன்னினாலான வீதிகள் இருக்கும் என்றும்,

பட்டணத்து மதில்களின் அஸ்திவாரங்கள் எல்லாவிதமான விலையேறப்பெற்ற கற்களால் ஆனது என்றும் சொல்கிறார். யோவான் இவ்விதமான வார்த்தைகளைக் கொண்டு இந்த வெளிப்படுத்தின விசேஷத்தைத் தொடங்கினார். "*சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்பு வித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான். இந்தத் தீர்க்க தரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கிய வான்கள் காலம் சமீபமாயிருக்கிறது*" (*வெளிப்படுத்தல் 1:1-3*). ஆகையால், யோவான் ஒரு மனிதனாக, எந்த மனிதனும் ஒருபோதும் கண்டிராதவைகளை கண்டு கொள்ள முடிந்தது. பரலோகம் பற்றியும், அதன் எல்லா மகிமை பற்றியும் எழுதுவதற்கு மனிதன் புரிந்து கொள்ளும்படியான வார்த்தைகளை அவர் பயன்படுத்த வேண்டியதாயிருந்தது. எனவே, யோவான் தான் கண்டவைகளில் அதிகமானவைகளை பூமியில் உள்ள பொன் மற்றும் விலையேறப் பெற்ற கல் இவைகளோடு ஒப்பிட்டு உருவக நடையில் எழுதியிருக்கிறார். விவரிக்க முடியாத அளவுக்கு பரலோகம் உண்மையாகவே அவ்வளவு அழகானது, அற்புத மானது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பரலோகம் எப்படி இருக்கிறது என வாசித்து விட்டு, அதனால் கவரப்பட்டு அங்கே ஒருவர் போக விரும்பினால் கூட, இன்னும் உலகில் பாதிபேருக்குக் கூட நற்செய்தி அறிவிக்கப்படவில்லை என்பது நினைவில் இருக்கட்டும்.


பரலோகம் என்பது ஆயத்தமாக்கப்பட்ட மக்களுக்கான ஆயத்தமாக்கப்பட்ட இடம் என்று ஒருவர் சொல்லியுள்ளார். அது, தேவனும் அவருடைய மக்களும் என்றென்றுமாய் வாழும் ஓர் இடமாக இருக்கிறது. எனவே, மனிதன் இந்த வாழ்க்கையைப் பிரிந்து செல்லும் போது உண்மையாக மரிப்பதில்லை. சரீரப் பிரகாரமாக அவன் மரிப்பான். ஆனால், அவன் ஆத்துமா நித்திய

நித்தியமாக வாழும். கர்த்தருக்கு கீழ்ப்படிந்து அவரிடத்தில் உண்மையாயிருப்பவர்கள், ஒரு நாளில் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவார்கள். அங்கே அவர்கள் ஒருபோதும் மரிப்ப தில்லை.

பரலோகம் பற்றி முழுமையாக புரிந்து கொள்வது என்று வரும் போது உண்மையாகவே, அது நம்முடைய புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது. எனவே, நாம் அதை விசுவாசத் தினால் ஏற்றுக் கொண்டு, பரலோகம் நடைமுறை சாத்தியமாகும் வரைக்கும் அந்த வேலையை நோக்கிக் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். தேவன் நம்மை ஏமாற்றாமல், நம்முடைய கனவுக்கும், கற்பனைக்கும் மேலாகத் தந்தருளுவார் என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது.

பரலோகம் செல்ல உங்களுக்கு விருப்பமில்லையா? ஒரு நாளில் நீங்கள் தேவனோடு வாழ வேண்டாமா? இந்த வாழ்க் கையை பரலோகத்திலும் இருந்தால் அது எவ்வளவு பயங்கர மாயிருக்கும். இங்கே அநேக பிரச்சனைகளும், தொந்தரவுகளும் இதயத்தை வலிக்கச் செய்யும் பல சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆனால், இந்த வாழ்க்கைக்கு அப்பால் ஒரு சிறந்த உலகத்தை நம்மால் எதிர்நோக்க முடிந்தால், இந்த வாழ்க்கையை எப்படியோ நாம் கழித்து விட முடியும்.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால் நீங்கள் இழந்து போன நிலையில் இருக்கிறீர்கள்; கல்லறைக்கு அப்பால் உங்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. இதை நீங்கள் உணர்ந்து அதை சரி செய்யும்படி முயற்சிக்க நான் ஜெபிக்கிறேன். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்து விலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, இரட்சிக்கும்படி ஞானஸ்நானம் பெற்றால் நீங்கள் இரட்சிக்கப்பட்டு ஒரு நாள் பரலோகம் போவதற்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியும் (மாற்கு 16:16). இதை நீங்கள் செய்தால் கர்த்தர் உங்களை இரட்சிப்பது மாத்திரமல்ல, உங்களை தம்முடைய சபையிலும் சேர்த்துக் கொள்வார் (அப்போஸ்தலர் 2:47). உங்களுக்கு நேரமும், வாய்ப்பும் இன்னும் இருக்கிறபடியால் நீங்கள் அப்படிச் செய்யும்படி நாங்கள் ஜெபிக்கிறோம்.



## பாடம் - 16

# ஏன் நாங்கள் நரகம் இருக்கிறதாக நம்புகிறோம்?

நரகம் இருப்பதை நாம் விசுவாசிப்பதால், சில வேளைகளில், நரக அக்கினி மற்றும் கந்தகம் பற்றி நாம் பிரசங்கிப்பதாக குற்றம் சாட்டப்படுகிறோம். ஜனங்கள் அவர்கள் பாவங்களுக்கான தண்டனையாக அக்கினிக் கடலிலே தூக்கி எறியப்பட போகிறார்கள் என்பதை நாம் மகிழ்ச்சியோடு சொல்லுகிறோம் என்ற ஒரு தவறான கருத்து பலருக்கு இருக்கிறது. வேதாகமம் பேசுகின்ற நரகத்தை நாம் விசுவாசிப்பதும், துன்மார்க்கர் ஒரு நாளில் அங்கே அனுப்பப்படுவார்கள் என்பதும் உண்மைதான். ஆனால், அப்படிப்பட்ட பயங்கரமான இடத்திற்கு யாரும் செல்வதை நாங்கள் விரும்புவதில்லை. தேவனுக்கு விரோதமான தங்கள் வழியில் இருந்து நாங்கள் திரும்பமாட்டோம் என்று முரண்டு பிடித்து, நிச்சயமான ஆக்கினை தரும் அந்த இடத்திற்கு ஜனங்கள் செல்வதில் உண்மையாகவே எங்களுக்கு எவ்வித மகிழ்ச்சியும் இல்லை.

நாம் தொடர்ந்து படிப்பதற்கு முன்பாக, நரகம் பற்றி விளக்க நாம் நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் இங்கே என்ன பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை ஒரு வேளை நீங்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். வேத வசனங்களில், சில வேளைகளில் நரகம் என்கிற வார்த்தை மரணத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, மத்தேயு 16:18-ல் கிறிஸ்து தாம் எப்படியாக மரிப்பேன் என்பதைக் குறித்து பேசிக் கொண்டிருந்தார். ஆனால், அவருடைய மரணம் கூட இயேசு தம்முடைய சபையைக் கட்டுவதை தடுக்க முடியாது. எனவே தான், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை, அல்லது மரணத்தின் வாசல்கள் அதை தடுக்காது என்று வாசிக்கிறோம்.

ஆயினும், பொதுவாக நரகம் என்பது, துன்மார்க்கர் என்றென்றும் வாழ்கின்ற வேதனை நிறைந்த, அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலாக, நித்திய தண்டனைக்கான இடமாக விவரிக்கப்பட்டிருக் கிறது. அது நித்திய ஜீவனை இழந்து போன ஆத்துமாக்களின் நிரந்தர குடியிருப்பாக இருக்கும்.

ஆனால், ஒருவர் இப்படிப்பட்ட பயங்கரமான இடத்திற்கு ஏன் போக வேண்டும்? அல்லது அன்புள்ள தேவன், ஏன் ஒருவரை இந்த நரகத்திற்கு அனுப்ப வேண்டும்? இப்படிப்பட்ட கேள்விகள் நரகம் என்றால் என்ன? என்பது பற்றி நாம் மேலும் விளக்க வேண்டும் என்கிற அவசியத்தை ஏற்படுத்துகிறது. நரகமானது ஆரம்பத்தில் பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் தான் ஆயத்தமாக்கப்பட்டது. துன்மார்க்கர் பற்றி பேசும்போது, கிறிஸ்து, நியாயத்தீர்ப்பு நாளிலே, அவர்களைப் பார்த்து, " சபிக்கப்பட்டவர் களே, என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்று சொல்கிறார் (மத்தேயு 25:41). பிசாசானவன் பாவம், தேவபக்தி யின்மை, துன்மார்க்கம் போன்றவைகளுக்கு அடையாளமாக இருக்கிறான். எது நன்மையானதோ, எது சரியானதோ அதற்கு நேர் எதிரானவன் பிசாசு. அவன் தேவனுக்கு விரோதியாக இருக்கிறான். அவன் பக்கத்தில் நிற்க தூதர்களும் அவனுக்கு உண்டு. ஆகையால், நரகம் அவர்களுக்காக ஆயத்தமாக் கப்பட்டிருக்கிறது. அதே வேளையில், மனித இனத்தின் ஆத்துமாக் களுக்காக நரகம் ஆயத்தமாக்கப்படவில்லை என்பதை சுட்டிக் காட்ட வேண்டும். மனிதன் ஒரு பாவியாக இருந்தாலும் கூட, நரகத்திற்கு தப்பித்துக் கொள்ள தேவன் அவனுக்கு ஒரு வழியைத் தந்திருக்கிறார். மனிதன் தேவனையும், அவர் தம்முடைய குமாரனான இயேசுகிறிஸ்து மூலமாக தருகிற இரட்சிப்பையும் நிராகரிக்கும் போது, அவன் ஆத்துமாவில் இழந்து போய் நரக தண்டனையை அடைகிறான். ஆனால், அப்போது கூட தேவன் மனிதனை அங்கே அனுப்புவது இல்லை. மனிதன் தன்னைத் தானே அங்கே அனுப்பிக்கொள்கிறான். ஆகையால், மனிதன் நரகம் போவதற்கு தன்னைத் தானே குற்றம் சாட்டிக் கொள்ள வேண்டுமே தவிர மற்றவர்களையல்ல.

நரகம் எப்போதும் கீழே இருக்கும் ஓர் இடமாகவும், பரலோகம் மேலே இருக்கும் இடமாகவும் விவரிக்கப்பட்டிருக் கிறது. வேதாகமம் இரண்டு இடங்களுமே உண்மையாகவே எங்கே இருக்கிறதென்று வெளிப்படுத்தவில்லை. ஆனால், இரண்டு இடங்களுமே அங்கே செல்லும்படி யாரெல்லாம் நியாயந்தீர்க்கப் படுகிறார்களோ அவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே, நாம் குறிப்பிட்டிருக்கிறபடி, நரகம் என்பது தண்டனைக்கான ஓர் இடமாகும். "*தன் சகோதரனை வீணனென்று சொல்கிறவன் எரி நரகத்திற்கு ஏதுவாக இருப்பான்*" என்று கிறிஸ்து எச்சரித்தார் (மத்தேயு 5:22). ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்க்கும் படியாக கிறிஸ்து தம்முடைய தூதர்களை அனுப்புவது சம்மந்த மாகப் பேசும் போது, அவர்களை அக்கினிச்சூளையிலே போடு வார்கள், அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத்தேயு 13:42) என்றார். யோவான் இவ்விதமாக எழுதினார். "*அப்பொழுது மரணமும், பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்*" (வெளிப்படுத்தல் 20:14,15). மேலும் யோவான், "*பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனை வரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும், எரிகிற கடலிலே பங்கடைவார்கள்*" என்றார் (வெளிப்படுத்தல் 21:8). சரீர மரணம் என்று ஒன்று இருக்கிறது. முன்பு நாம் வாசித்த வசனத்தில் பேசப்பட்டிருக்கும் இரண்டாம் மரணம் என்பது தேவனிடத் திலிருந்து பிரிக்கப்படுவதைக் குறிக்கிறது. நித்திய தண்டனைக் கான இடமாகிய நரகத்தில் தள்ளப்படுதல் என்பது, ஒருவர் தேவனிடத்திலிருந்து துண்டிக்கப்படுதலாகும், அப்படிப் பட்ட வருக்கு நம்பிக்கையே இல்லை.

கிறிஸ்துவின் வருகை மற்றும் அவரின் ஊழியம் பற்றி யோவான் ஸ்நானகன் விவரித்த போது, "*மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார்,*

*அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார், தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார்"* என்றான் (மத்தேயு *3:11,15*). இங்கே கிறிஸ்து, பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கத்தக்க தான அளவு வல்லமையைப் பெற்றிருப்பார். நிச்சயமாகவே, இது அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து செய்த வாக்குதத்தத்தைக் குறிக்கிறது. அவர், பரிசுத்த ஆவியானவர் அல்லது தேற்றரவா ளனை அனுப்புவார். அதன் பின்பு, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றதை நாம் வாசிக்கிறோம் (யோவான் 16:13; அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரம்). ஆனால், கிறிஸ்து அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுக்கும் வல்லமை பெற்றிருப்பார். இது, துன்மார்க்கர் அக்கினிக்கடலில் தூக்கி எறியப்படுவார்கள் என்பதைக் குறிக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமை அல்லது நீதிமான்களை களஞ்சி யத்தில் சேர்ப்பார் என்றும் பதர் அல்லது துன்மார்க்கரை அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார் என்றும் ஓர் உதாரணத்தின் மூலமாக விளக்குகிறார்.

துன்மார்க்கர் பற்றிப் பேசும் போது, " *அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வும் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும், பகலும் இளைப்பாறுதலிராது* " என்று வாசிக்கிறோம் (வெளிப்படுத்தல் *14:10,11*).

இயேசு இப்படிச் சொன்னார், "*ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும், சரீரத்தையும்*

*நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்"* (மத்தேயு 10:28). மறுபடியும் இயேசு, " *சர்ப்பங்களே, விரியன் பாம்புக் குட்டி களே! நரகாரக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?* " (மத்தேயு 23:33). இங்கே இயேசு தம்முடைய நாட்களில் வாழ்ந்த பக்தியுள்ள பாவிகளாகிய பரிசேயர்களையும், மாயக்காரரையும் குறித்து இப்படிச் சொன்னார்.

எபிரெய எழுத்தாளர், " *மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே, தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னை பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரக்கத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்கு பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்* " (எபிரெயர் 10:28,29) என்று சொல்லியுள்ளார். பவுல், " *தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும் படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப் படும் போது அப்படியாகும்* " என்றார் (II தெசலோனிக்கேயர் 1:7,8). துன்மார்க்கரைப் பற்றியும், நீதிமான்களைப் பற்றியும் பேசும் போது இயேசு, " *அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்* " என்றார் (மத்தேயு 25:46). மறுபடியும் இயேசு, ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பபும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத்தேயு 8:15). பவுலடியார், " *பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்* " என்றார் (ரோமர் 6:23). அதன் பின்பு யோவான், " *மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத் தீர்க்கத்தரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதாகாலங் களிலும் வாதிக்கப்படுவார்கள்"* என்றார் (வெளிப்படுத்தல் 20:10).

பரலோகத்திற்கும், நரகத்திற்கும் உள்ள வேறுபாட்டை நாம்புரிந்து கொள்ள உதவியாயிருக்கும்படி, ஐசுவரியவான், தரித்திரன் உவமையைச் சொல்லி, அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். " ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான் ; அவன் இரத்தாம்பரமும் விலையேறப் பெற்ற வஸ்திரமும் தரித்து, அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். லாசரு என்னும் பேர் கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானு டைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான் ; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான் ; ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப் பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்; தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப் பண்ணும் படி அவனை அனுப்ப வேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனப்படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம் மகனே, நீ பூமியிலே உயிரோடிக்குங்காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித் தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப் படுகிறான் நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமில்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்து போகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும், மனதுள்ள வர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான். அப்பொழுது அவன்; அப்படியானால், தகப்பனே எனக்கு ஐந்து சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்கிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி ; அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு

*அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்; அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரி லிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன் : அவர்கள் மோசேக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவேளை எழுந்து போனாலும், நம்பமாட்டார்கள்" என்று சொன்னான் என்றார் (லூக்கா 16:19-31).* நரகம் என்பது உண்மையானது. ஆகையால், நாம் யாரும் அங்கு போய் விடாதபடி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கட்டாயம் எடுக்க வேண்டும்.


சிலபேர், ஓர் ஆத்துமா நரகத்தில் போடப்படும்போது, அது உடனடியாக அல்லது முற்றிலுமாக அழிந்து போய் விடுகிறது, அதோடு அவர்களின் கதை முடிந்து போய் விடுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆயினும், நாம் பார்த்திருக்கிறபடி, ஒருவர் நரகத்திற்குப் போய்விட்டால், சதாகாலமும் தண்டிக்கப்பட்டு, என்றென்றும் வேதனைப்படுவார். வேறுவிதமாகச் சொன்னால், பரலோகம் எதுவரை நிலைத்திருக்குமோ அது வரைக்கும் நரகமும் நிலைத்திருக்கும். ஆம், இரண்டுமே நித்தியமானது.

இப்போது நாம் வாசித்த வேதவாக்கியங்களை வைத்து, சில இறுதி முடிவுகளுக்கு வருவோம். பிசாசும், அவனுடைய தூதர்களும் நரகத்தில் இருப்பார்கள். துன்மார்க்கர், தேவபக்தியற்றவர்கள், மாயக்காரர், பக்தி காரியங்களில் வஞ்சிக்கப்பட்டவர்கள் மாம்சத்தின் கிரியைகளில் ஈடுபட்டவர்கள், உண்மையில்லாதவர்கள் மேலும் இப்படிப்பட்டோர் நரகத்தில் தங்கள் பங்கைப் பெறுவார்கள்.

என் நண்பர்களே, கிறிஸ்து அளிக்கும் இரட்சிப்பு குறித்தும், நாம் நரகம் போய்விடாதபடி எடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு முயற்சி குறித்தும், எச்சரிக்கப்பட்டு, நாம் பரலோகம் போக மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிகள் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறோம். ஆனால், தேவன் தமக்குக் கீழ்ப்படியும்படி யாவரையும் கட்டாயப்படுத்தமாட்டார். முடிவு உங்களுடையது. கிறிஸ்து கொடுக்க முன்வரும் இரட்சிப்பை நீங்கள் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது எங்கள் ஜெபமாயிருக்

கிறது. இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சணிய நாள் என்று பவுல் சொல்கிறார் (II கொரிந்தியர் 6:8). நாம் இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ளுபடியாக அவரிடத்தில் வரும்படி கிறிஸ்து நம்மை அழைக்கிறார் (மத்தேயு 11:28-30). நம்முடைய இரட்சிப்பு குறித்து கவலையற்றவர்களாக இருக்கக் கூடாது என்று எபிரெய எழுத்தாளர் நமக்கு புத்திமதி சொல்கிறார் (எபிரெயர் 2:4).

நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா? பரலோகம் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் பதில், இல்லையென்பதானால், நீங்கள் ஆத்துமாவை இழந்தவர்களாகிறீர் கள். நரகம் உங்களுக்காகக் காத்து கொண்டிருக்கிறது. என் நண்பரே, இன்னும் காலம் இருக்கும் போதே கர்த்தருக்குச் செவி கொடுங்கள். அவரை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கை யிட்டு, உங்கள் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெறுங்கள். அப்படி நீங்கள் செய்தால், கிறிஸ்து உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களை சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16), (அப்போஸ்தலர் 2:38,47). அதன் பின்பு, நீங்கள் கர்த்தருக் காக வாழ முடியும், அவருக்கு உண்மையாக இருந்தால், ஒரு நாள் பரலோகம் உங்கள் வீடாகும். நீங்கள் என்ன செய்தாலும், தயவு செய்து நரகத்திற்குப் போய்விடாதீர்கள்.



# பாடம் - 17

## ஏன் நாங்கள் நியாயத்தீர்ப்பில் விசுவாசம் வைக்கிறோம்?

நியாயத்தீர்ப்பு நாள் என்று ஒன்று இருக்குமென்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. அதன் பொருள், நாம் நம்மைப் பற்றியும், இந்த வாழ்க்கையில் நாம் பேசின, செய்த, எல்லாவற்றை யும் குறித்தும் கணக்கொப்புவிக்க வேண்டும். பெரும்பாலான ஜனங்கள், தாங்கள் செய்தவைகளைக் குறித்து யாருக்காவது கணக்கொப்புவிக்க வேண்டும் என்கின்ற கருத்தை விரும்புவ தில்லை. அவர்கள் தவறு செய்யும் போது, காவல் அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல விரும்புவதில்லை. அதுபோல, அரசாங்கத்திற்கு முறையாக வரிசெலுத்துவதற்கான பொறுப்பை ஏற்க விரும்பு வதில்லை. ஆனால், இவைகளெல்லாம் வாழ்வின் உண்மைகளா யிருக்கிறது. வேலை செய்பவர் முதலாளிக்கு பதில் கொடுக்க வேண்டும்; பள்ளிக்கோ அல்லது கல்லூரிக்கோ செல்பவர்கள் தேர்வு எழுதியாக வேண்டும்; இராணுவத்தில் இருப்பவர்கள் தங்கள் உயர் அதிகாரிகளுக்கு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். இப்படியாக, நம்முடைய வாழ்க்கையின் பல நிலைகளிலும் பொறுப்பாளிகளாக இருக்கிறோம். நாம் முதலாளிகளாக, செல்வந்தர்களாக, அல்லது நாம் மரித்துப் போனவர்களாக இருந்தாலொழிய இப்பொறுப்புகளிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வழியே இல்லை. ஆனால், செல்வந்தர்கள், தேசங்களின் தலைவர்கள், இன்னுமாக உயிரோடிக்கிறவர்கள், மரித்தவர்கள் இப்படி எல்லோரும் ஒரு நாள் தேவனுடைய நியாய சனத்திற்கு முன்பாக நின்றே ஆக வேண்டும்.

எபிரெய எழுத்தாளர் இவ்விதமாகச் சொல்கிறார், "*அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும், மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே*" என்று (எபிரெயர் 9:27). ஆனால், நியாயத்தீர்ப்பு நாளில் யாரெல்லாம் அங்கே

இருப்பார்கள்? இது சம்பந்தமாகப் பவுல் சொல்லும் வார்த்தை களைக் கேளுங்கள். *" ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் " (II கொரிந்தியர் 5:10).* அங்கே வெறுமனே ஒரு நியாயத்தீர்ப்பு மாத்திரமல்லாமல், அந்த நியாயசனத்திற்கு முன்பாக, நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசு கிறிஸ்து முன்பாக எல்லோரும் தோன்றி, சரீரத்தில் அவனவன் செய்த நன்மையான மற்றும் தீமையான காரியங்களுக்காக கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமாக எழுதினார். *" நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் கர்த்தருக் கென்று பிழைக்கிறோம்; நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கின்றோம்; ஆகையால், பிழைத்தாலும், மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம். கிறிஸ்துவும், மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும், எழுந்தும், பிழைத்துமிருக்கிறார். இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாம் எல்லோரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. அந்தப்படி : முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் " (ரோமர் 14:7-12).*

அத்தனே பட்டணத்து மக்களோடு பேசும் போது பவுல், *" அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும், ஒரு நாளைக் குறித்திருக்கிறார், அதிலே அவர்தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார், அந்த மனு ஷனை மரித்தோலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றார் " (அப்போஸ்தலர் 17:30,31).* தேவன் ஒரு நாளை நியமித்திருக்கிறார். அதிலே

இந்த உலகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் என்று சொல்வதை தயவு செய்து கவனியுங்கள். அதன் பொருள், தேவன் எல்லோரையும் நியாயந்தீர்ப்பார், அந்த நியாயத்தீர்ப்பு நீதியாயிருக்கும். அது நேர்மையற்ற முறையில் இருக்காது, நியாயத்தீர்ப்பில் தேவன் பட்சபாதம் காட்டமாட்டார் அல்லது அவர் பாரபட்சமாக நடந்து கொள்ள மாட்டார். அந்த நாள் எப்போது என்று நமக்குத் தெரியாது. ஆனால், தேவனுக்குத் தெரியும். கர்த்தருடைய வருகையும் அப்படித்தான். அந்த நாள் தேவதூதர்களுக்குக் கூடத் தெரியாது, பரலோகத்தில் இருக்கிற பிதாவுக்கு மட்டுமே தெரியும் என்று கர்த்தர் நமக்குச் சொல்லியிருக்கிறார். தேவதூதர்களுக்குக்கூடத் தெரியாது, பிதாவுக்கு மாத்திரமே தெரியும் என்பது உண்மையானால், மனிதன் எப்படி அறிந்து கொள்வான்? கிறிஸ்து மறுபடியும் எப்போது வருவார் என்பதும், நியாயத்தீர்ப்பு எப்போது நடைபெறும் என்பதும் நிச்சயமாக மனிதனுக்குத் தெரியாது. மேலும், தேவன் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பார் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக் கிறது. அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார். நிச்சயமாகவே, அந்த மனுஷன் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து.

பவுல் பேலிக்ஸ்க்கு முன்பாக நின்றபோது, அவருக்கு பிரசங்கம் பண்ணினதாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. பேலிக்ஸ்சும், துருசில்லாளும், விபச்சாரத்தில் இருந்ததாக நமக்கு வசனம் சொல்கிறது. " அவன் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனி வரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன் " என்றான் (அப்போஸ்தலர் 24:25). பேலிக்ஸ் எவ்வகையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தான் என்பதை அறிந்த பவுல், பேலிக்ஸ் தன்னுடைய செயல்களுக்கெல்லாம் தேவனுக்கு பதிலளிக்க வேண்டுமென்று சொல்லி பேலிக்ஸை எச்சரிக்க தைரியமுடையவராய் இருந்தார். அப்பொழுது, பேலிக்ஸ் நடுங்கியதில் எந்த ஆச்சரியமும் இல்லை. அது அவனை பயமடையச் செய்தது. ஆயினும், அவன் பவுலுக்கு

செவிக் கொடுக்காமல் பவுலிடம், இப்பொழுது நீ போகலாம், எனக்கு சமயம் கிடைக்கும்போது உன்னை அழைப்பிப்பேன் என்று சொல்லி அனுப்பியது மிகவும் துக்கமானது. நமக்குத் தெரிந்தவரை, பின்பு அவன் ஒரு போதும் பவுலை அழைத்ததாக இல்லாததால், அவன் அந்நிலையிலேயே மரித்திருக்க வேண்டும். எவ்வளவு பரிதாபம் !

தன்னுடைய நாட்களில் வாழ்ந்த பக்தியுள்ள ஜனங்களிடத்தில் இயேசு ஆண்டவர் பேசிக் கொண்டிருக்கும் போது, *"விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நலமானவைகளே எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய்ப்பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான், மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டுமென்று உங்களுக்குச் சொல்லு கிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்" (மத்தேயு 12:34-37).* அதன் பொருள், ஒருவர் தான் என்ன செய்கிறார் என்பதைக் குறித்து மாத்திரம் எச்சரிக்கையாயிராமல் தன்னுடைய எண்ணங்களைக் குறித்தும், என்ன சொல்லுகிறார் என்பது குறித்தும் உணர்வுள்ளவராயிருக்க வேண்டும். ஒருவர் தான் எப்படிப்பட்டவர் என்பதைக் காட்டுவதற்கு இவைக ளெல்லாம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் எதைச் செய்தாலும், எதைச் சொன்னாலும் அவை எல்லாவற் றையும் குறித்து ஒரு நாளில் கணக்கு கொடுக்க வேண்டுமென்று ஒருவருக்கு மனதில் இருக்க வேண்டும். இதை ஒருவர் அறிந்து கொள்வது, அவரை அதிக ஜாக்கிரதையுள்ளவராக்கி ஒரு காரியத் தைப் பேசுவதற்கோ அல்லது செய்வதற்கோ முன்பாக ஒன்றுக்கு இருமுறை சிந்திக்கச் செய்கிறதாக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும் போது, *" ஒரு நாள் வரும் அதிலே தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயந்தீர்ப்பார் "* என்றார்

(ரோமர் 2:16) எபிரெய எழுத்தாளர், " தேவனுடைய வார்த்தை யானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும், ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும், இருக்கிறது. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" என்று நமக்கு நினைவுப் படுத்துகிறார் (எபிரெயர் 4:12,13). இன்னும் பவுல், " ஆயினும் நான் உங்களாலேயாவது மனுஷருடைய நியாய நாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது ; நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை. என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன் ; ஆயினும், அதனாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆதலால் கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும் " (I கொரிந்தியர் 4:3-5). மேலும் பவுல், நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந் தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது ( I தீமோத்தேயு 4:1). பவுல் தொடர்ந்து தம்மைப் பற்றி சொல்லும் போது, " இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத்தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் " என்றார் (II தீமோத்தேயு 4:8). இங்கே பவுல் கர்த்தர் நீதியுள்ள நியாதிபதியாக இருந்து தனக்கு நீதியின் கிரீடத்தை அந்நாளிலே தந்தருளுவார் என்று சொல்கிறார். இங்கே, அந்நாள் என்பது நியாயத் தீர்ப்பு நாளைக்குறிக்கிறது. மேலும் பவுல்,

அப்படிப்பட்ட கிரீடம் தனக்கு மாத்திரம் கிடைக்காமல், கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அல்லது அவருடைய வருகைக்காகத் தங்களை ஆயத்தமாக் கியிருக்கிறயாவருக்கும் கிறிஸ்து தருவார் என்று கூறுகிறார்.

எபிரெய எழுத்தாளர், " யாவருக்கும் நியாதிபதியாகிய தேவன் " என்று கூறுகிறார் (எபிரெயர் 12:23). அதன் பின்பு, எபிரெயர் 13:4-ல் " விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக் கள்ளரையும், விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் " என்று சொல்கிறார்.

மத்தேயு 25 -ஆம் அதிகாரத்தில் கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். " அன்றியும் மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தின வராய்ச் சகல பரிசுத்ததூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன், செம்மறியாடுகளையும், வெள் ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடு களைத் தமது இடப்பக்கத்திலும் நிறுத்துவார் " இங்கே கர்த்தர் ஒரு நாளில் நடக்கப்போகிற நியாயத்தீர்ப்பை சித்தரித்துக் காட்டுகிறார். இது அவருடைய வருகையின் போது நடைபெறும். அப்பொழுது எல்லா தேசத்தாரும் எல்லா ஜனங்களும் அவருக்கு முன்பாக நிற்பார்கள். அப்போது, அவர் ஒரு மேய்ப்பன் வெள்ளாடு களையும், செம்மறியாடுகளையும் பிரிப்பது போல தீயவர்களிட மிருந்து நல்லவர்களைப் பிரிப்பார். அவருடைய வலது கையில் இருக்கும் செம்மறியாடுகள் நீதிமான்களை, கிறிஸ்தவர்களை, சபையை அடையாளப்படுத்துகிறது. இடது பக்கத்தில் இருக்கும் வெள்ளாடுகள், துன்மார்க்கமான, வஞ்சிக்கப்பட்ட உண்மையில்லாத கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. நியாயத்தீர்ப்பு முடிந்த பிறகு துன்மார்க்கர் அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றும் வேத வசனம் சொல்கிறது (மத்தேயு 25:46).

இப்போது, நாம் இதுகாறும் பார்த்தவைகளைத் தொகுத்து, நாம் எவைகளைக் கண்டறிந்தோம் என்று தயவு செய்து கவனியுங்கள்.

1. தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒரு நாளிலே வருகிறது. ஆனால், அது மரணத்திற்குப் பிறகு இருக்கும் அல்லது கர்த்தருடைய வருகையின் போது இருக்கும்.

2. அந்த மகா நாளில் எல்லோரும் இருப்பார்கள். இதுவரை வாழ்ந்த எல்லா மக்களும், இனிமேல் வாழப்போகிற மக்களும் அந்நாளில் அங்கே இருப்பதை கற்பனை செய்து பாருங்கள். ஒருவராலும் மறைந்து கொள்ளவோ அல்லது தப்பித்துக் கொள்ளவோ முடியாது. யாரும் கண்டு கொள்ளாமல் விடப்படமாட்டார்கள். இதில், இளம் வயதினரும், முதியோரும், நல்லோரும், தீயோரும், ஏழைகளும், பணக்காரரும், ராஜாவும், வேலைக்காரரும் என்று எல்லோரும் அடக்கம்.

3. தேவன் தம்முடைய குமாரனனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நியாயந்தீர்ப்பார்.

4. அது ஒரு பாரபட்சமற்ற நியாயத்தீர்ப்பாய் இருக்கும். அதில் எல்லோரும் தங்கள் கிரியைகளின்படி, அது நன்மையாக இருந்தாலும் சரி, தீமையானதாக இருந்தாலும் சரி, அதன்படி நியாயத்தீர்க்கப்படுவார்கள்.

5. அந்த மகாநாளில், ஒவ்வொரு வெறுமையான வார்த்தையும், ஒவ்வொரு செயலும், அந்தரங்கமான ஒவ்வொரு யோசனையும் நியாயந்தீர்க்கப்படும்.


6. இந்த நியாயத்தீர்ப்பு இறுதியானதாக இருக்கும். அங்கே இரண்டாவது வாய்ப்புக்கு இடமேயில்லை. அது ஒரு நீதியுள்ள நியாயத்தீர்ப்பாயிருக்கும்.

7. அந்த நாளிலே, நீதிமான்களுக்கு நித்தியஜீவன் அளிக்கப்படும். துன்மார்க்கர் பிசாசின் நரகத்திலே நித்திய அழிவைப் பெறுவார்கள்.

நியாயத்தீர்ப்பிலே கர்த்தரை சந்திக்க ஆயத்தமாகிவிட்டீர்களா? கிறிஸ்து சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். " என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் " (யோவான் 12:48). கிறிஸ்து இவ்விதமாகவும் சொன்னார் " மரித்தோர் தேவகுமாரனுடைய

*சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது ; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவரா யிருக்கிறது போல, குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவரா யிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். அவர் மனுஷ குமாரனாயி ருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்கு சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிற படியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது" (யோவான் 5:25-30).*

என் நண்பர்களே, நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்து இயேசுவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுவதின் மூலம், நீங்கள் இந்த நியாயத்தீர்ப்பின் மகா நாளுக்காக ஆயத்தமாக முடியும். அதைச் செய்யும் போது, கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். அதன் பின்பு, ஒரு கிறிஸ்தவனாக கர்த்தரை சேவித்து, அவருக்கு மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், ஒரு நாளில் அவருக்கு முன்பாக நிற்கும்போது, கர்த்தர் உங்களைப் பார்த்து, நல்லது, உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்று சொல்வதை உங்களால் கேட்க முடியும். அது எவ்வளவு அருமையானதாக இருக்கும்? இது குறித்து யோசித்துப்பாருங்கள். இன்னும் உங்களுக்கு நேரமும் வாய்ப்பும் இருக்கும் போதே அதற்காக ஆயத்த மாகுங்கள். நீங்கள் அப்படிச் செய்யும்படியாக நாங்கள் ஜெபிக்கிறோம்.



## பாடம் - 18

# ஏன் கிறிஸ்தவம் மிகவும் வித்தியாசமானது?

கிறிஸ்தவம் உலகெங்கிலும் காணப்படுகிறது. கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் கோடிக் கணக்கான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் செய்தியை எடுத்துச் செல்வதால் அதன் எண்ணிக்கை தொடர்ந்து பெருகிக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்தவம் என்பது, கிறிஸ்துவை ஒரு மனிதன் என்றோ, மற்றுமொரு பரிசுத்தவான் என்றோ அல்லது இன்னொரு தீர்க்கதரிசி என்றோ விசுவாசிப்பதை அடிப்படையாக் கொண்டிராமல், கிறிஸ்தவம் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்றும், உலகத்தின் பாவத்திற்காக மரித்தவரென்றும், என்றென்றும் ஜீவிக்கும்படியாக கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தவரென்றும் விசுவாசிப்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். பேதுருவும், அப்போஸ்தலர்களும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டார்கள் (மத்தேயு 16:16-18). பரலோகத்திலிருந்து தேவனும், கிறிஸ்துவை தம்முடைய குமாரன் என்று அறிவித்தார் (மத்தேயு 17:5).

இன்று உலகத்தில், ஓர் உயிருள்ள தலைவரைக் கொண்டிருக்கும் ஒரே மதம் கிறிஸ்தவம் தான். மற்ற மதங்களின் தலைவர்கள் மரித்தார்கள். ஆனால், மறுபடியும் உயிர்த்தெழவில்லை. ஆனால், கிறிஸ்து தாம் உயிர்த்தெழப்போவதாகச் சொன்னார். அதைச் செய்து காட்டினார் (யோவான் 11:25; மத்தேயு 28:1-6). அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றாமல் இருந்திருந்தால் அவர் ஒரு பொய்யனாகவோ, வஞ்சகனாகவோ இருந்திருப்பார். அவர் உயிர்த்தெழவில்லையென்றால் கிறிஸ்தவம் ஒரு போதும் வளர்ந்திருக்காது. ஆனால், கிறிஸ்தவம் வாழ்கிறது, சபை வாழ்கிறது, பொதுவான உயிர்த்தெழுதலின் நம்பிக்கை வாழ்கிறது.

இவைகள் எல்லாமே கிறிஸ்து வாழ்ந்து கொண்டிருப்பதால் தான் நடக்கிறது.

கிறிஸ்தவம் ஒரு மிகப் புகழ்பெற்ற மார்க்கமாயிருக்கிறது. மற்றெந்த மதம் அல்லது நம்பிக்கையைவிட, நன்மைக்கேதுவாக இந்த உலகை மாற்றுவதற்கு அதிகமாகச் செய்திருக்கிறது ; சர்வதேச நாள்காட்டிகள் கிறிஸ்துவின் வாழ்க்கையையும், மரணத்தையும் அடிப்படையாக வைத்தே நாட்களைக் குறிக்கிறது, கிறிஸ்துவின் ஒழுக்க ரீதியிலான போதனைகளை ஆதாரமாக வைத்தே தேசங்களின் சட்டங்கள் பிரதானமாக இயற்றப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான நாடுகள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறையை அங்கீகரிக்கின்றன, நிச்சயமாக, இது கிறிஸ்தவத்திலிருந்து வந்தது தான்; அதாவது, இது கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார், மற்றும் கர்த்தர் தம்மை நினைவு கூரும்படியாகவும், தேவனை ஆராதிக்கும்படியாகவும் வாரத்தின் முதல் நாளிலே கூடி வர வேண்டுமென்று கட்டளையிட்டதையும் அடிப்படையாக வைத்து அமைந்தது தான் (மத்தேயு 28:1-6 ; அப்போஸ்தலர் 20:7).

மனிதனுக்குத் தெரிந்த மிக உயரிய ஒழுக்க நெறிகள் கடைப்பிடிக்கப்படுவதற்கு கிறிஸ்தவம் பாடுபடுகிறது. இது நேர்மையாயிருத்தல், ஒருவருடைய கடனைத் திரும்பச் செலுத்துதல், வேலைக்கேற்ற வருமானம், ஒருவரையொருவர் மரித்தல் போன்ற நெறிகளைப் போதிக்கிறது. கிறிஸ்தவம் ஒழுக்க ரீதியிலான உயர்ந்த வாழ்க்கையை ஆதரித்து, குடும்ப முறைகளைப் பாதுகாத்து, ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண உறவின் பாங்கை வலியுறுத்தி, அதோடு மரணபரியந்தம் ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்க வேண்டுமென்பதையும் எடுத்துரைக்கிறது. கிறிஸ்தவம் எல்லாவற்றிற்கும் தேவனை தலையாக அங்கீகரித்து, புருஷனை மனைவிக்குத் தலையாகவும் அங்கீகரித்து, அதேசமயம், பிள்ளைகளை கர்த்தருயை வளர்ப்பிலும், எச்சரிப்பிலும் வளர்க்க ஆணுக்கும், பெண்ணுக்கும் தனித்தனியே பொறுப்புகள் இருக்கின்றன என்பதை கிறிஸ்தவம் அங்கீகரிக்கிறது.

கிறிஸ்தவம் என்பது ஒரு மார்க்கம். அதன் பொருள் தேவனுக்கும், மனிதனுக்கும் ஆற்றப்படும் சேவை. யாக்கோபு

இவ்விதமாகச் சொன்னார். “ *திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது* ” என்று (யாக்கோபு 1:27). இங்கே திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் விசாரிப்பது என்பது வெறுமனே வெறும் வாயில் விசாரிப்பது என்று பொருள்படாமல், இப்படிப்பட்டவர்களின் தேவைகளைச் சந்திப்பதில் அக்கறை காட்டுவதாகும். கிறிஸ்தவர்கள் தங்களால் முடிந்தவரை மற்றவர்களுடைய தேவைகளை சந்திப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே தான் பவுல், “ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறை வேற்றுங்கள் ” என்று சொல்கிறார் (கலாத்தியர் 6:2).

கிறிஸ்தவத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்கள் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் தேவன் தான் என்பதை விசுவாசிக்கிறார்கள் (ஆதியாகமம் 1:1). தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து மனிதர்கள் மத்தியில் வாசம் செய்வதற்காகவும், இந்த உலகத்தின் பாவத்திற்காக சிலுவையில் மரிப்பதற்காகவும் அவர் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டவர் என்பதையும் விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்து இப்படிச் சொன்னார். “ *ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்ற உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்* ” என்றார் (யோவான் 8:24). கிறிஸ்தவர்கள், பரிசுத்த ஆவியானவர் பலரை பல நூறு வருடங்களாக தேவனுடைய வார்த்தையை எழுதும்படி ஏவினார் என்றும், வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் ஏவப் பட்டதென்றும், எனவே அது தேவனுடைய வார்த்தை என்றும் விசுவாசிக்கிறார்கள் (II பேதுரு 1:21 ; தீமோத்தேயு 3:16,17 ; மத்தேயு 24:35). கிறிஸ்து தம்முடைய சபையை ஒரே சபையை, ஏற்படுத்தினார் என்றும், இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாம் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம். மத்தேயு 16:18 ; எபேசியர் 4:4-6, அப்போஸ்தலர் 2:47). கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை நாங்கள் விசுவாசிக்கிறோம், அந்த நற்செய்தி முழு உலகத்திற்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும்.

கிறிஸ்து சொன்னார், " *பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்: விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்* " (மாற்கு 16:15,16). கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்கள் எல்லாரும் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்தவர்களாகி, வாரத்தின் முதல் நாளில் தேவனை ஆராதித்து, கிறிஸ்துவுக்காக தினமும் வாழ வேண்டும் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம் (மத்தேயு 7:21 ; 1 பேதுரு 4:16 ; யோவான் 4:24 ; அப்போஸ்தலர் 20:7 ; லூக்கா 9:23).

கிறிஸ்தவம், கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லா விசுவாசிகளும் ஒற்றுமையாயிருப்பதையும் (I கொரிந்தியர் 1:10), கிறிஸ்துவுக்குள் எல்லாரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்பதையும் ஆதரிக்கிறது. பவுல் இவ்விதமாக எழுதினார், " *நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே யூதனென்றும், கிரேக்கனென்றும் இல்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்* " என்று (கலாத்தியர் 3:26-28).

ஒருவர் கர்த்தருடைய குடும்பத்தில் சரீரப் பிரகாரமாகப் பிறக்க முடியாது. கிறிஸ்தவம் சரீரப் பிரகாரமான பிறப்பினால் வளர்வதில்லை. ஆனால், ஆவிக்குரிய பிறப்பின் மூலமாக வளர்கிறது (யோவான் 3: 3-5). வேறுவிதமாகச் சொன்னால், கர்த்தர் தம்முடைய சீஷர்களை ஜனங்களிடத்தில் தம்மைப்பற்றி போதிக்கவும், அவர்களிடத்தில் காரணகாரியங்களோடு அவரைப்பற்றி எடுத்துரைக்கவும், கிறிஸ்துவை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படியவும், அதன் மூலம் அவரால் இரட்சிக்கப்படவும், தேவனுடைய பிள்ளைகளாகும்படி ஜனங்களை சம்மதிக்கச் செய்யவும் அனுப்பினார். " *விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்* " என்று பவுல் நமக்கு

நினைப்பூட்டுகிறார் (ரோமர் 10:17). எபிரெய எழுத்தாளர், "விசுவாசம் இல்லாமல்தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" என்றும் சொல்கிறார். மீண்டுமாக எபிரெய எழுத்தாளர், கிறிஸ்துவையும், அவருடையவர்களாகப் போகிறவர்களையும் குறித்து, "அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப் படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமாக " என்று உரைக்கிறார் (எபிரெயர் 5:8,9). அதன் பொருள், குழந்தைகள் அல்லது சிறுபிள்ளைகள் கிறிஸ்தவர்களாக அல்லது சபையின் அங்கத்தினர்களாக முடியாது. அவர்கள் நன்மை, தீமை இன்னதென்று அறிந்துகொள்ளுபடியாகவும், கிறிஸ்துவின் உபதேசங்களை கேட்கும்படியாகவும், கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிவதா, கீழ்ப்படிவதில்லையா என்பதை அவர்களே முடிவெடுக்கத்தக்கதாகவும் வளர வேண்டும்.

கிறிஸ்தவம், கடைசியாக எல்லோரும் உயிரோடு எழுந்திருப் பார்கள் என்றும், எல்லோருக்கும் நியாயத்தீர்ப்பு இருக்குமென்றும், எல்லோரும் தங்கள் நித்தியத்தை பரலோகத்தில் அல்லது நரகத்தில் கழிப்பார்கள் என்றும் போதிக்கிறது. கிறிஸ்து, " இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், பிரேதக் குழிகளி லுள்ளவர்கள் அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர் களாகவும் புறப்படுவார்கள்" என்றார் (யோவான் 5:28,29). நாம் இதையும் வாசிக்கிறோம், " அன்றியும், ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற படியே " என்று (எபிரெயர் 9:27) பவுல், " ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" என அறிவிக்கிறார் (II கொரிந்தியர் 5:10). நியாயத்தீர்ப்பு நடந்தேறிய பிறகு துன்மார்க்கர் நித்திய ஆக் கினையை அடைவார்கள், நீதிமான்கள் நித்திய ஜீவனை அடை வார்கள் (மத்தேயு 25:46).

கிறிஸ்தவம் எதிர்க்கின்ற காரியங்களும் உண்டு. கிறிஸ்தவம்

சாத்தானை, இந்த உலகத்தை, மாம்சத்தின் கிரியைகளை எதிர்க்கிறது (I யோவான் 2:15-17; கலாத்தியர் 5:19-21). குறிப்பாக, கிறிஸ்தவம் போர், லஞ்சம், புகைபிடித்தல், சூதாட்டம், மதுபானம் குடித்தல், போதை மருந்துக்களை பயன்படுத்துதல், கருக்கலைப்பு, ஆண்புணர்ச்சி என்று இன்னும் இப்படிப்பட்டவைகளுக்கு எதிரானது. கிறிஸ்தவம், ஜாதிமுறை, விக்கிரக ஆராதனை, பொய்யான மதங்கள், மனிதர்களுக்கு முன்பாகத் தங்களைத் தெய்வங்களாக உயர்த்துவது போன்றவைகளை நிராகரிக்கிறது. கிறிஸ்தவம், மறு அவதாரத்தை நம்புவதில்லை. கிறிஸ்தவம் அதன் அங்கத்தினர்கள் மாம்சம் புசிப்பதைத் தடை செய்வதில்லை. சில மக்கள் விவாகம் செய்வதைத் தடை செய்வதையும், மாம்சம் புசிப்பதிலிருந்து விலகியிருக்கும்படி கட்டளையிடுவதையும் குறித்து பவுல் இப்படியாகச் சொல்கிறார். " விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும், சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும் படி தேவன் படைத்த போஜனபதார்த் தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படதக்கதல்ல. அது தேவவசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்" (I தீமோத்தேயு 4:2-5).

தேவனுடைய வார்த்தையில் சொல்லப்படாத கிறிஸ்தவத்தின் எல்லா கொள்கை, கோட்பாடுகளையும் நாங்கள் எதிர்க்கிறோம். வேறுவிதமாகச் சொன்னால், கிறிஸ்தவம் என்று உலகத்தால் அதிகமாகப் பார்க்கப்படுகிற கிறிஸ்தவம் ஒரு தவறான கிறிஸ்தவமாகும். இதன் காரணமாக, உண்மையான கிறிஸ்தவத்திற்கு கெட்ட பெயர் வருகிறது. கிறிஸ்தவர்கள் சண்டைபோடுகிறதை நாம் கேட்கிறோம், கிறிஸ்தவர்கள் தவறான, கெட்ட காரியங்களைச் செய்கிறதை நாம் கேள்விப்படுகிறோம். மறுபடியும், இது உண்மையான கிறிஸ்தவத்தை வெளிப்படுத்துகிறதில்லை. வேதாகமத்தின் கிறிஸ்தவம், இவைகளை நடைமுறைப்படுத்துகிறவர்கள் செய்கின்ற நல்ல காரியங்களினால் மட்டும் அறியப்பட்டு இந்த உலகத்தை வாழ்வதற்கு ஏற்ற ஒரு சிறந்த இடமாக மாற்றுகிறது. ஆகவே, தேவனுடைய வார்த்தை மனிதனால் உண்டாக்கப்பட்ட

போலி கிறிஸ்தவம் மற்றும் பிரிவினைச் சபைகள் இவைகளுக்கு விரோதமாகப் போதிக்கிறது.

நாங்கள் இந்த உலகத்தின் மதங்களிலோ அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிற மனிதர்களுடைய பிரிவினைச் சபைகளிலோ நம்பிக்கைக் கொள்வதில்லை. ஆனால், மார்க்க சுதந்திரத்தில் நம்பிக்கை வைக்கிறோம். தேவனே, இந்த உலகத்தின் தவறான மதங்களை அங்கீகரிப்பதில்லை. ஆனால், மெய்யான தேவனை ஆராதிப்பதா அல்லது எதிர்ப்பதா என தீர்மானம் எடுப்பதை ஒவ்வொரு தனி நபரிடமே விட்டு விடுகிறார். தன்னுடைய மதத்தை மற்றவர்கள் மீது திணிக்கும் உரிமை எந்த மனிதனுக்கும் கிடையாது. மனிதன், தான் விரும்புகிறபடி தன் ஆத்தும காரியத்தில் சுதந்திரமாகச் செயல்பட முடியாத நிலையில், அவன் உண்மையாகவே சுதந்திரமாக இருக்கிறான் என்று சொல்ல முடியாது. தேவனுடைய வார்த்தைதான், மனிதனை தேவனுக்கு அறிமுகப்படுத்தி, அவன் தன் பாவங்களிலிருந்து எப்படி விடுதலை பெற முடியும் என்று சொல்கிறபடியால், மெய்யான விடுதலை தேவனுடைய வார்த்தையில் தான் இருகிறது (யோவான் 8:32).

நீங்கள் எந்த மதத்தை ஏற்று நடைமுறைப்படுத்துகிறீர்கள்? நீங்கள் ஏன் நடைமுறைப்படுத்துகிறீர்கள்? சரீரப்பிரகாரமாக அந்த மதத்தில் பிறந்தீர்களா? அல்லது போதனையின் விளைவாக அதை ஏற்றுக் கொண்டு, இது ஒன்றான மெய்யான வழியை அடையாளப் படுத்துகிறது என்பதை நம்பத் தொடங்கினீர்களா?

உங்கள் மதம் அர்த்தமுள்ளதாக இருக்கிறதா? இன்று உலகம் இருக்கிறது போல உங்கள் மதம் நவீனமாயிருக்கிறதா? அல்லது பழங்கால முறைமைகளின்படி வாழ உங்களை அது அழைத்துச் செல்கிறதா? பகுத்தறிவினடிப்படையிலான, அர்த்தமுள்ள காரியங்களை அது உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறதா? அல்லது உங்களை முட்டாளாக்கி தர்க்க வாதத்திற்கு ஒத்துவராத காரியங்களைச் செய்யும்படி உங்களை வழி நடத்துகிறதா?

ஜனங்கள் வாசிக்கவும், படிக்கவும், சுயமாக முடிவு எடுக்கும்படியான வாய்ப்பு இருக்கும் வரை கிறிஸ்தவத்தில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. கிறிஸ்தவம் தர்க்கரீதியானது,

அர்த்தமுள்ளது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மேலுமாக, கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களையும், விசுவாசியாதவர்களையும் பாருங்கள் ; கிறிஸ்தவம் அவர்களுக்கு என்ன செய்து கொண்டிருக்கிறது என்று பாருங்கள். கிறிஸ்தவம் அதன் முழு போதனையின் படி கைக்கொள்ளப்படும்போது, ஜனங்களிடத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, ஜனங்களை ஆவிக்குரிய பிரகாரமாக சிறந்த வாழ்க்கை வாழ வழி நடத்துகிறது. கிறிஸ்தவர்கள் இப்பூமியில் தாங்கள் வாழ்வதற்கான அர்த்தமுள்ள காரணங்கள் இருப்பதாலும், மரணத்திற்குப் பின்னான வாழ்க்கையை எதிர் நோக்கும் எல்லா முகாந்திரமும் இருப்பதாலும் அவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியுள்ள மக்களாக இருக்கிறார்கள்.

நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளாதவராக இருந்தால், கிறிஸ்தவத்தை கவனித்துப் பார்க்கும்படியாக நான் உங்களை ஊக்கப்படுத்துகிறேன். வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டுப் பகுதியில் இது குறித்து வாசியுங்கள். உங்களுக்கு மனமிருந்தால், நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக மாற விரும்புவீர்கள் என்று நான் நம்புகிறேன். மேலும், தேவனையும், தேவனுடைய குமாரனென்று கிறிஸ்துவை விசுவாசிப்பதாலும், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவதினாலும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று உங்கள் வாயினால் அறிக்கை பண்ணுவதாலும், உங்கள் பாவ மன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெறுவதினாலும் நீங்கள் கிறிஸ்தவராக முடியும் (எபிரெயர் 11:6 ; யோவான் 14:1-3 ; அப்போஸ்தலர் 2:38). இதை நீங்கள் செய்யும் போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார். அதன் மூலம் நீங்கள் கிறிஸ்தவராகவும், கிறிஸ்தவத்தின் ஒரு அங்கமாகவும் இருப்பீர்கள் (அப்போஸ்தலர் 2:47 ; 1 பேதுரு 4:16). இது மிகவும் சுலபமான ஒன்றாகத் தெரியவில்லையா? இப்படிச் செய்வது மிகவும் சுலபமானதும், எவ்வித சிக்கலுமற்றது. கிறிஸ்துவின் போதனைகளினடிப்படையில் செய்யும்படி உங்களை ஒப்புக் கொடுக்கத் தயவு செய்து தவறி விடாதீர்கள்.